கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



னக்கா வாய்ப்பூட்டு?

KALKI ● 19.09.2010 ● ரூ.10.00 ● 96 பக்கங்கள்



ஸ்லிம் ஸ்பெஷல்

"அடி பின்னி எடுத்துடுவேன்!"

சைபால் எல்லோர் வீட்டிலும் இருக்க வேண்டிய ஒன்று



இதம் தந்து

ரணம் ஆற்றும்...





சைபால்

BEST SKIN OINTMENT

எரிச்சல் தரும் வெட்டுக்காயத்தின் மேல் சைபால் தடவுங்கள். எரிச்சலைப் போக்கி இதம் தரும். காயம் இருந்த சுவடே காணாமல் போகும்.

★ வெட்டுக்காயம் ★ முகப்பரு ★ சேத்துப்புண் ★ தேமல் ★ வேனல்கட்டி ★ பித்தவெடிப்பு முதலிய வியாதிகளுக்கு சிறந்தது.

உரிமையாளர் : சைபால். S. சங்கரநாராயணன்

Mfrs. : **THE SOUTH INDIAN MFG. CO.,** MADURAI-20. Ph : 2534108



கல்கி
அடுத்த இதழில் ஆரம்பம்...
வே.எழிலரசு
எழுதும்
காதல் கேம்பஸ்
காதல் + கலாட்டா + கலக்கல் தொடர்கதை
26.09.10 இதழில்...
தஞ்சை பெரிய கோவில் ஸ்பெஷல்
ஆயிரம் ஆண்டு அற்புதம்!
விரல் நுனியில் கல்கி!
இனி உங்கள் செல்ஃபோனிலும் வலம் வரவிருக்கிறது.
இதழ் பற்றிய உங்கள் எண்ணங்களை, செல்ஃபோன் மெஸேஜில் KALKI என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, அதன் பின் எழுதி 562632 என்ற எண்ணுக்கு SMS அனுப்புங்கள்.
அதேபோல் கவிதை, ஜோக்ஸ், துணுக்குகள் ஆகியவற்றை, KACON என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, அதன் பின் எழுதி 562632 என்ற எண்ணுக்கு SMS அனுப்பலாம்.
IMImobile

ஏ.ஆர். முருகதாஸ் இப்போது தயாரிப்பாளராகவும் மாறிவிட்டார். பிரபல ஹாலிவுட் நிறுவனமான, டுவெண்டீத் செஞ்சுரி ஃபாக்ஸ் ஏ.ஆர்.முருகதாஸுடன் இணைந்து இந்தி, தமிழ்ப் படங்களைத் தயாரிக்க இருக்கிறது! ஏ.ஆர். முருகதாஸ் தன் தயாரிப்பில் முதல் தமிழ்ப் படத்தை இயக்க தனது உதவியாளர் சரவணனை இயக்குநராக அறிமுகப்படுத்துகிறார்.



இயக்குநர் மித்ரன் ஜவஹர், தனுஷ் கூட்டணி இணையும் மூன்றாவது படம் உத்தமபுத்திரன். ஆக்ஷன் கலந்த காதல் படமான உத்தமபுத்திரன், தெலுங்கின் ரீமேக். சமீபத்தில் திருநெல்வேலியிலும் சென்னை அருகே உள்ள மணிமங்கலத்திலும் பரபரப்பான சேஸிங் சீன் படமாக்கப்பட்டிருக்கிறது. இதில் ஜெனிலியாவுக்காக தனுஷ் வில்லன்களோடு மோதுகிறார்.

பயாஸ்கோப்





இயக்குனர் மணிரத்னம், க்ளோரி டு த ஃபில்ம் மேக்கர் அவார்ட் பெற்றிருக்கிறார். இந்த விருதைப் பெறும் முதல் இந்திய சினிமா

'போடிநாயக்கனூர் கணேசன்' - இது லக்ஷ்மி கிருஷ்ணா கம்பைன்ஸ் தயாரிக்கும் புதுப்படம். "இது ஆக்ஷன் படம். அதனால்தான் சண்டைக் காட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்" என்கிறார் இயக்குநர் ஒ.ஞானம். தேனியில் கொட்டும் மழையில் கதாநாயகன் ஹரிக்குமாரும், 'வேட்டைக்காரன்' ரவி சங்கரும் மோதும் சண்டைக்காட்சிக்காக சென்னையிலிருந்து டேங்கர் லாரியில் தண்ணீர் கொண்டுபோய் ஆறுநாள் படப்பிடிப்பு நடத்தி இருக்கிறார்கள். மதுரை சம்பவம், சிங்கம், நான் மகான் அல்ல ஆகிய படங்களுக்குச் சண்டைக்காட்சிகளை அமைத்த 'அனல் அரசு'தான் இப்படத்துக்கும் ஸ்டண்ட் மாஸ்டர்.



இயக்குநர் இவர்தான். இவ்விழாவில் ராவணன் படம் திரையிடப்பட்டது. விஷயம் அறிந்த விக்ரம், ஐஸ்வர்யா ராய் இருவரும் விழாவில் கலந்து கொண்டனர்.

கவிஞர் வைரமுத்துவின் இரண்டாவது மகன் கபிலன் வைரமுத்துவின் திருமணம் சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் தலைமையில் நடந்தது.



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி
பொறுப்பாசிரியர் :
ஆர்.வெங்கடேஷ்
உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்
தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899
ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com
இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

எகிறும் ஈ.வி.கே.எஸ்

காங்கிரஸ் மேடைகளைக் கலகலப் பாக்கி, தி.மு.க.வைக் கடுப்படிக்கும் விதத்தில் அதிரடியாய்ப் பேசிவருகிறார் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன். இந்த நிலையில் காங்கிரஸ் மேலிடம் அவருக்கு வாய்ப்பூட்டுப் போட்ட தாகத் தகவல் ... சந்தித்தோம்.

''தமிழ் நாட்டில் காங்கிரஸை மக்கள் இயக்கமாக மாற்ற விரும்பிய ராகுல்காந்தி, அதற்காகத் தனிக் கவனம் செலுத்தி வருகிறார். சமீபத்தில் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, ராகுல் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் பேசும்போது, 'தமிழ்நாடு உட்பட நான்கு மாநிலங்களில் காங்கிரஸைப் பலப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கது. இப்போது தமிழகத்தில் நிறைய படித்த இளம் பெண்களும் இளைஞர்களும் காங்கிரஸ் செயல்பாடுகளில் பங்கு கொள்வதைப் பார்க்கிறோம். தமிழக காங்கிரஸ், மக்கள் பிரச்னைகளில் கவனம் செலுத்தி, தேவைப்பட்டால் தெருவில் இறங்கிப் போராடவும் தயங்கக் கூடாது.''

நீங்கள் சொல்வது போல் இயங்க என்ன தடை?

''தனித்து நாங்கள் செயல்பட எந்தவிதமான தடையும் இல்லை. ஆனால், தமிழகத்தில் கட்சி தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் தங்கள் சுயநலத்துக்காகக் கட்சியை முடக்கி வைத்திருக்கிறார்கள்.''


தற்போதைய தலைவர் தங்கபாலுவை மாற்ற வேண்டுமா?

''ஆமாம். தமிழகத் தலைமையை மாற்ற வேண்டும். இது தொண்டர்களின் உணர்வு. மேலிடத்தில் சொல்லியிருக்கிறோம். தக்க நேரத்தில் தலைமை நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறோம்.''


கூட்டணி கட்சியான தி.மு.க.வை ரொம்பவே விமர்சிக்கிறீர்களே?



''மக்கள் பிரச்னைகளையும், அதிகாரிகள் மீது காழ்ப்புணர்வு காரணமாக நடவடிக்கை எடுக்கும் போதும் அதைச் சுட்டிக் காட்டுவதும் விமர்சிப்பதும் எங்கள் கடமை. தி.மு.க. தன் தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்ற நல்லெண் ணத்தில்தான் எங்கள் குரல் வெளிப்படுகிறது. ஜனநாய கத்தில் வேறொரு கட்சியில் இருக்கும் நாங்கள், ஆளும் கட்சியை இந்த அளவுகூட விமர்சிக்காவிட் டால் எப்படி?''



ஒரு குடும்பத்தின் ஆளுகையின் கீழ் தமிழ்நாடு இருப்பதை எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும்?



தமிழகத்தில் காங்கிரஸைப் பலப்படுத்த நினைக்கிறார் ராகுல்!

தி.மு.க. ஆட்சி மக்களுக்குத் திருப்தியா?

''இந்தக் கேள்விக்குப் பதில் சட்டப் பேரவைத் தேர்தலில்தான் தெரியும். தி.மு.க. ஆட்சியில் சில நல்ல காரியங்கள் நடந்திருக் கின்றன. மறுப்பதற்கில்லை. அதே சமயம் ஒரு குடும்பத்தின் ஆளுமையையும் எதேச்ச திகாரத்தையும் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அதேபோல் மத்திய அரசின் நல்ல திட்டங்களை மாநில அரசு மூலம் செயல் படுத்தும்போது, அதில் ஊழல் நடக் கும்போது தட்டிக்கேட்காமல் இருக்க முடியாது. மேலும் மத்திய அரசின் நிதி உதவியால் நடக்கும் திட்டங்களை ஏதோ மாநில அரசின் சாதனை போன்று விளம் பரப்படுத்துவதை அம்பலப்படுத்துவது காங்கிரஸ்காரர்கள் கடமை.''

அப்படியானால் இனி தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி...?

''எங்கள் கூட்டணி வலுவாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் குறைகளைச் சுட்டிக் காட்டுகிறோம். நோய் இருக்கும்போது ஊசி போடத்தான் வேண்டும். 'வலி'

எனக்கா வாய்ப்பூட்டு?



இருக்கத்தான் செய்யும்.''

உங்களை எம்.பி. தேர்தலில் தி.மு.க.வினர் தோற்கடித்துவிட்டார்கள் என்றும், முதல்வரைச் சந்திக்கத் தங்களுக்கு வாய்ப்பு கொடுக்க மறுப்பதாலும்தான் தி.மு.க.வைக் கடுமையாக விமர்சிக்கிறீர்கள் என்ற பேச்சும் இருக்கிறதே?



''எனக்குத் தனிப்பட்ட முறையில் அவமானங்களும், இழப்புகளும், தி.மு.க.வால் ஏற்பட்டிருப்பது உண்மை. ஆனால், என் விமர்சனங்களுக்கும் அதற்கும் தொடர்பு இல்லை. அப்படிச் சொல்வது தவறு. எனக்குக் கட்சித் தலைமையும், கட்சி நலனும்தான் முக்கியம்.''

எதிர்காலத்தில் காங்கிரஸ் தனித்தோ அல்லது கூட்டணியில் இணைந்தோ ஆட்சியில் பங்கேற்கும் என்று ப.சிதம்பரம் சொல்லியிருக்கிறாரே!

''அவர் சொன்னதை காங்கிரஸ் தொண்டர்கள் ஒட்டுமொத்தமாக வரவேற்பார்கள்.''

"காங்கிரஸின் தமிழகத் தலைமையை மாற்றவேண்டும். இது தொண்டர்களின் உணர்வு"

''தலைவரை நகைக் கடையைத் திறந்து வைக்கச் சொன்னது தப்பாப் போச்சு...''
''எதனால?''
''வைர அட்டிகையைக் காணோமாம்...''
- கே.பிரசன்ன குமார்



வரும் தேர்தலில் காங்கிரஸின் சக்தி?

''காங்கிரஸ் தலைமையில் தனி அணி அமைத்தால் அந்தக் கூட்டணி வெற்றி வாகை சூடும்; அல்லது ஆட்சியில் யாரை அமர வைக்க வேண்டும் என்று தீர்மானிக்கும் சக்தியாகவாவது இருக்கும்.''

நீங்கள் தி.மு.க.வை விமர்சிப்பதால் முதல்வர், காங்கிரஸ் தலைமை மூலம் உங்களுக்கு வாய்ப்பூட்டுப் போட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறதே?

(பலமாகச் சிரிக்கிறார்) ''தமிழ்நாடு முழுக்க தொடர்ந்து பேச இருக்கிறேன். எனக்கு வாய்ப்பூட்டுப் போட வேண்டிய அவசியம் என்ன? என் வாயிலிருந்து வருவது காங்கிரஸ் குரல். தமிழகத்தில் காங்கிரஸ் பலம் பெற வேண்டும் என்ற கட்சி நலன் ஒன்றே எனது நோக்கம்.''

தி.மு.க.வுடன் கூட்டணி தொடர்ந்தால் நீங்கள் தனிக்கட்சி கூட தொடங்குவீர்கள் என்று சில பத்திரிகைகள் கிசுகிசுக்கின்றனவே?


''தவறான செய்தி. அதுபோன்ற செய்திகளை நான் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை.''

- ப்ரியன்

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

VBC Jewellery
HOUSE OF VUMMIDI



இணைந்து வழங்கும்

'வைர மங்கை'

-சிறப்பு சந்தா திட்டம்!*

கல்கி நிறுவனத்தின் மற்றொரு வெளியீடான, தரத்திலும் நம்பர் ஒன் மகளிர் மாத இதழ் மங்கையர் மலர் செப்டெம்பர் இதழில், 'வைர மங்கை' - சிறப்பு சந்தா திட்டம் (பக்கம் 187) பற்றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. இத்திட்டத்தின்படி எந்த ஒரு நபரும் மங்கையர் மலருக்கு சந்தா கட்டி, ஐந்து முத்து மங்கைகளை அறிமுகப்படுத்தலாம். அப்படி அறிமுகப் படுத்துபவர் பவள மங்கை என்ற பட்டம் பெறுவார். பவள மங்கைக்கும் (ரூ.250/- மதிப்புள்ள) முத்து மங்கைகளுக்கும் (ரூ.100/- மதிப்புள்ள) பரிசுக் கூப்பன்கள் அந்த மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப் படும்.

ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் முப்பது முத்து மங்கைகளை அறிமுகப் படுத்துவதன் மூலம், பவள மங்கையி லிருந்து பதவி உயர்வு பெற்று மரகத மங்கை என்ற மகுடம் சூட்டப்படும்.

இவ்வாறு முப்பது சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தும் முதல் இருபது அதிர்ஷ்டசாலிகளின் புகைப்படம் அடுத்து வரும் மங்கையர் மலர் இதழில் வெளியாகும். கூடவே 'வைர மங்கை' பம்பர் பரிசுக் குலுக்கலில் கலந்து கொள்ள வும் அவர்கள் தகுதி பெறுவார்கள்.

'கல்கி' நிறுவனத்தின் மற்றொரு வெளியீடான நமது மங்கையர் மலர் இதழின் அன்புவட்டம் விரிவடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்துக்கு, வாசகியரின் ஏகோபித்த வரவேற்பைக் கண்டு மகிழ்ச்சி அடைகி றோம். கல்கி வாசகர்களையும் இத்திட்டத் தில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கி றோம்.

நீங்களும் வைர மங்கை ஆகணுமா? அதற்கான கூப்பன் அடுத்த பக்கத்தில்...

(ஆர்)

மேலும் விவரங்களுக்கு

94443 83465 / 99400 73736

**ஜூலை, ஆகஸ்ட்...
என்று அடுத்தடுத்து மரகத
மங்கையாக மகுடம் சூட்டிக் கொண்டு
அசத்தி வரும் சுசீலா அரவிந்தனுக்கு
ஒரு ஓஹோ!!**



பிரியமுள்ள ஆசிரியருக்கு, என்னுடைய ஆத்மார்த்தமான தோழி மங்கையர் மலர்தான். தன்னம்பிக்கையை தளராமல் ஊட்டும் மலரை, என் தோழிகளிடம் எடுத்துச் செல்ல நினைத்தேன்... முடிப்பேன்... ஜெயிப்பேன்...

-சுசீலா அரவிந்தன்

மங்கையர் மலர் - VBC இணைந்து வழங்கும் 'வைர மங்கை' சிறப்பு சந்தா திட்டம்

அன்பு அனுஷா நடராஜனுக்கு, பவள மங்கையான நான் (தற்போதைய மங்கையர் மலர் வாசகி), மங்கையர் மலரை, 5 முத்து மங்கைகளுக்கு அறிமுகப்படுத்துகிறேன். தாங்கள் கொடுத்துள்ள இந்த படிவத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து, 5 ஓராண்டு சந்தாதாரர்களின் தொகையாக, ரூ.1250/- மங்கையர் மலர் என்ற பெயரில் டி.டி/M.O மூலம் இணைத்துள்ளேன். என்னுடைய 5 முத்து மங்கை தோழிகளுக்கும், மங்கையர் மலர் இதழை அடுத்த மாதத்திலிருந்து அனுப்பி வைக்கவும். எனக்கும் என் தோழிகளுக்குமான பரிசுக் கூப்பன்களையும் அனுப்பி வைக்கவும். மேலும் பல முத்து மங்கைகளை அறிமுகப்படுத்த என்னால் இயன்றவரை முயலுகிறேன்.

பவள மங்கை

எனது பெயர் :..

முகவரி:..

....

....

சந்தா எண்: (தாங்கள் சந்தாதாரராக இருந்தால்)

....

ஃபோன்: ....

ஈமெயில்..

நான் அறிமுகப்படுத்தும் முத்து மங்கைகள்:

கல்கி

1. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:...

ஈமெயில்..

2. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:...

ஈமெயில்..

3. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:...

ஈமெயில்..

4. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:...

ஈமெயில்..

5. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:...

ஈமெயில்..

உறையின் மீது 'வைர மங்கை' என்று குறிப்பிட்டு அனுப்பவும்

அனுப்ப வேண்டிய முகவரி

மங்கையர் மலர் சந்தா பிரிவு, மங்கையர் மலர்,
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

இப்படிக்கு

தேதி:..................................

கல்யாணத்துல ஜோடிப் பொருத்தம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கல்யாண சமையல். திருமணத்துக்கு வந்திருக்கும் உற்றார் உறவினர் மனசும் வயிறும் நிறைஞ்சு வாழ்த்தும்போது அதுல கிடைக்கற சுகமே அலாதியானதுதான். அப்படி, சாப்பிடுபவர்கள் அனைவரும் வாழ்த்தும்படி சமையல் செய்து அசத்துகிறது ஆனந்தா கேட்டரிங் சர்வீஸ்.


''கல்யாண சமையல் மட்டுமில்லை. கிரகப் பிரவேசம், சீமந்தம், பூணூல், ஆயுஷ் ஹோமம்... என சகல ஃபங்க்ஷனுக்கும் ஆனந்தா கேட்டரிங், சர்வீஸ் பண்ணறோம்''



என்கிறார் இதன் உரிமையாளர் பாலாஜி. இவர் 'சமையல் சக்கரவர்த்தி' என்.கிருஷ்ணமூர்த்தி ஐயரின் புத்திரர். பூர்வீகம் நன்னிலம் அருகே விக்கிரபாண்டியம். சமையல் வேலையில் தன் கைப் பக்குவத்தைக் காட்டிவரும் இவர்கள் குடும்பத்தில் பாலாஜி மூன்றாவது தலைமுறை. குன்னக்குடி வைத்தியநாதன் வீட்டு எல்லா ஃபங்க்ஷனுக்கும் சமைப்பது முதல், அமைச்சர் கோ.சி.மணி வீட்டு ஃபங்க்ஷன் வரை இவர்களின் கைப்பக்குவம் மிளிர்கிறது.

''கல்யாண சமையல் செய்யறதோடு மங்கள வாத்தியம், கோலம், ஆரத்திலேர்ந்து 'பத்தும் பசையுமா' பொண்ணை புகுந்த வீட்டுக்கு அனுப்பும் வைபவம் வரைக்கும் எல்லா ஏற்பாடுகளையும் செஞ்சுத் தர்றோம்'' என்கிற ஆனந்தா கேட்டரிங் உரிமையாளர் பாலாஜி, ''நாங்க யார் யார் கல்யாணத்துக்கெல்லாம் சமையல் செய்யறோமோ அவங்க தலை தீபாவளிக்கு பருப்புத் தேங்காய், ஸ்வீட்ஸ் பட்சணங்களை இலவசமா டெலிவரி பண்ணறோம். ஒரு வருஷத்துக்கு மட்டும் ஐம்பதுலேர்ந்து அறுபது வரைக்கும் இதுபோல டெலிவரி இருக்கும்'' என்று ஆச்சர்யப்படுத்துகிற பாலாஜியின் பெரியப்பா தான் அறுசுவை அரசர் என்.நடராஜன். தென்னிந்திய சமையல் மட்டுமில்லை, வட இந்திய உணவு வகைகளைச் சமைப்பதிலும் தமது கைப் பக்குவத்தைக் காட்டி வருகிறது ஆனந்தா கேட்டரிங் சர்வீஸ். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு சென்னை காமராஜர் அரங்கத்தில் நடந்த மார்வாடிகள் மாநாட்டுக்கு, வட இந்திய உணவு வகைகளைச் செய்து அசத்தியதைப் பெருமையாக நினைக்கிறார் பாலாஜி.

தொடர்புக்கு : ஆனந்தா கேட்டரிங் சர்வீஸ்
பிளாட் எண் : 7, ஆனந்த விநாயகர் நகர்
ருக்மணி அம்மாள் தெரு (விரிவு)
பெரியபணிசேரி, குன்றத்தூர் சாலை,
சென்னை - 101.
போன்: (0)98401 39130, (0) 98409 39130



• பாலாஜி


ஆனந்த சமையல்!

''ஸ்லிம் ஆக ஏதாவது மந்திரம் தந்திரம் இருக்கா ஸார்'' - இப்படி நியூட்ரிஷியன் டயடீஷியன்களிடம் கேட்காதவர்களே இருக்க முடியாது. நாமும் டயட்டீஷியன் பி.கிருஷ்ணமூர்த்தியிடம் கேட்டோம்.

''ஸ்லிம்மிங்கும், டயட்டிங்கும் சரியான அர்த்தம் பலருக்குத் தெரியவில்லை. உடல் உயரத்துக்குத் தகுந்த எடை இருந்தால் அதுதான் சரியான ஸ்லிம்மிங். ஒல்லியாகத் தெரிய வேண்டும் என்பதற்காக வயிற்றையும், உடலையும் வாட்டிக்கொள்ள வேண்டாம்'' என்கிறார்.

''நூற்று அறுபது செ.மீ. உயரமுள்ள பெண், 54 கிலோகிராம் எடை இருக்கலாம். அதே உயரமுள்ள ஆணுக்கு அறுபது லிமிட். இந்தக் கணக்கிலிருந்து பத்து கிலோ கூடுதலாக இருந்தாலும் தப்பில்லை.

ஸ்லிம்மாக இருப்பதைவிட ஆரோக்கியமாக இருப்பது முக்கியம். குண்டாக இருக்கிறோமா அல்லது ஸ்லிம்மாக இருக்கிறோமா என்பதை அறிய BMI கணக்கைப் பின்பற்றலாம். உடல் எடை (கிலோ)யை





பி.கிருஷ்ணமூர்த்தி



தவிர, ஒரேயடியாக எடை குறை த்தல் உடல் ஆரோக்கியத்தைச் சீர்குலைத்துவிடும்'' என்கிற கிருஷ்ணமூர்த்தி, ''காலை உணவைத் தவிர்த்தால், ஸ்லிம்மாகி விடலாம் என்று பலர் நினைக்கிறார்கள். அது தவறு. மாறாக குண்டாகி விடுவார்கள்'' என்கிறார்.

''காலை 7.30 மணிக்குப் பாதி வயிறு நிரம்புவதற்கு ஏற்ப

காலை உணவைத் தவிர்த்தால் குண்டாயிடுவீங்க!

உயரத்தோடு (மீட்டர் ஸ்கொயர்) வகுத்தால் கிடைக்கும் எண்ணிக்கைதான் BMI.

அறுபது கிலோ எடை கொண்டவர், 60/(1.6 x 1.6) செய்து பார்த்தால், 23.4 என்று கிடைக்கும். இது 19 முதல் 25 வரை எந்த இடத்தில் இருந்தாலும் கவலை இல்லை. ஆனால், 19 க்குக் கீழே போனால், உடல் ஊட்டத்தோடு இல்லை என்று அர்த்தம் (malnutrition).

இருபத்தைந்துக்கும் மேல் எண்ணிக்கை கிடைத்தால் over weight ; முப்பதுக்கு மேல் obesity. இதை விட்டுவிட்டு நான் குண்டாக இருக்கிறேன். டயட்டிங் செய்து இளைக்க வேண்டும் என வயிற்றைக் கட்டுவது ரொம்பத் தவறு. ஒரு மாதத்துக்கு இரண்டு கிலோதான் எடை குறைய வேண்டும்.

தோசை, டீ அல்லது காஃபி குடிக்கலாம். 11 மணிக்கு, இளநீர், எலுமிச்சைச் சாறு அல்லது மோர். 1.30 மணிக்கு மதிய உணவாகக் கொஞ்சம் சாதம், நிறைய காய்கறிகள், பருப்பு வகைகள்; அசைவ உணவுக்காரர்கள் மஞ்சள் கரு நீக்கிய முட்டையைச் சாப்பிடலாம். மூன்று மணியளவில் பழம் சாப்பிடுவது, ஐந்து மணிக்கு வேகவைத்த சுண்டல், இரவில் சப்பாத்தியுடன் பருப்பு தால் சாப்பிடுவது, உடல் எடைக்கும் ஆரோக்கியத்துக்கும் நல்லது.

அதை விட்டுவிட்டு இதைச் சாப்பிடறேன், அதனால் அதைச் சாப்பிடுவதில்லை என தப்புக்கணக்குப் போட்டு உடலைக் கெடுத்துக் கொள்ளவே கூடாது'' என்கிறார் டயட்டீஷியன் கிருஷ்ணமூர்த்தி.

- என்.எஸ்.கே.

நியூஸ் மிக்ஸர்





டோனி பிளேர் தம் சுயசரிதை புத்தகங்களுக்கு கையெழுத்துப் போட்டு விற்பனை செய்ய டப்ளின் வந்த போது. ஷூக்களும் முட்டைகளும் காலி பாட்டில்களும் அவரை வரவேற்றன. ஈராக் போருக்கு ஆதரவு தெரிவித்த கடுப்பு.

பீப்லி லைவ் திரைப்படத்தை மன்மோகன் பார்த்தது ஒரு பாராட்டு. அடுத்த பாராட்டு, இங்கிலாந்து இளவரசர் சார்லஸ், அமீர் கானையும் அவர் மனைவி கிரண் ராவையும் விருந்துக்கு அழைத்திருக்கிறார்.



அமிதாப் பச்சனும் கிமி கட்கரும் ஆடிய 'சும்மா சும்மா தே தே' ஞாபகம் இருக்கிறதா? இப்போது ஃபாரா கான் டைரக்‌ஷனில், அதே பாடலுக்கு பாலிவுட் பைங்கிளி கத்ரினா கைஃப் ஆடித் தீர்த்திருக்கிறார். அடுத்த ரவுண்டுக்கு ரெடி!



“அப்பாவை
என் டைரக்‌ஷனில்
நடிக்க வைக்கவேண்டும்
என்று ஆசை உண்டு.
கூப்பிட்டுவிட்டு
மாட்டிக்கொள்ளக் கூடாது.
பார்ப்போம்” உற்சாகக் கமா
போடுபவர்
அக்‌ஷரா ஹாசன்.

பாடகியாகிறார் மல்லிகா ஷெராவத்!




பாப் குவின் மடோனாவின் மகள் லூர்தும்
பெரிய திரைக்கு வரவிருக்கிறார்.
மடோனாவின் இரண்டாவது திரைப்படமான
'W.E' இல் லூர்து நடிக்கிறார்.
குட்டி பதினெட்டு அடி பாயுமோ?



ஜாக்கி சானோடு ஆட்டம் போட்ட
மல்லிகா ஷெராவத்,
கடந்த ஒரு வருடமாக அமெரிக்கவாசி.
நடிப்போடு அம்மணி பாடவும்
ஆரம்பித்துவிட்டார்.
ஹாலிவுட்டின் 'ஹிஸ்ஸ்' திரைப்படத்தில்
இரண்டு பாடல்கள் ஜாக்பாட்!



கல்கி



2010 செப்டெம்பர் 19
விக்ருதி புரட்டாசி 3
மலர் : 69
இதழ் : 8


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


பிரதமரின் விசித்திரப் பொருளாதாரம்!

உச்சநீதிமன்றம் அரசினுடைய கொள்கை முடிவுகளை நிர்ணயிக்க முடியாது; அதற்கான அதிகாரம் அதற்குக் கிடையாது என்று பிரதமர் சொல்வதை ஏற்கத்தான் வேண்டும். ஆனால் உச்சநீதி மன்றம் எல்லா ஏழைகளுக்கும் எப்போதும் இலவசமாக உணவு தானியங்களை வினியோகிக்கும்படி கூறவில்லை. அப்படிச் சொன்னால்தான் அது கொள்கையில் தலையிடும் காரியமாக அமையும். அரசு கையிருப்பில் ஏராளமாகக் குவிந்து வீணாகிவிடக்கூடிய தானியங்களை மட்டும்தான் உடனே வினியோகித்து, தானியத்தையும் காப்பாற்றி, ஏழைகளின் பசியையும் தீர்க்கச்சொன்னது உச்ச நீதிமன்றம். அதற்கான ஆணை நியாயமானது என்பதுடன் காரிய சாத்தியமானது. அது கொள்கை வகுக்கும் அரசு அதிகாரத்தில் தலையிடுவதாகாது.

பொது வினியோகத்துக்கென அரசு கொள்முதல் செய்கின்ற உணவு தானியம், மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு வாங்கப்படுவது; மக்களுக்குச் சொந்தமானது. அரசுக்கோ உணவுத்துறை அமைச்சருக்கோ சொந்தமானது அல்ல. அதனை வீணடிக்காமல் பயன்படுத்தும்படி ஆணையிட உச்ச நீதிமன்றத்துக்கு முழு அதிகாரம் இருக்கிறது.

அவ்வாறு ஆணையிட அவசியம் ஏற்படும் அளவுக்கு அரசு நடந்துகொண்டதே தவறுதான். உச்சநீதிமன்ற ஆணை பிறந்த பிறகும் உணவுத்துறை அமைச்சர் அலட்சியம் காட்டியது





கவலை தருகிறது எனில், அந்த ஆணையைப் பிரதமர் திரித்துப் பொருள் கொண்டு பேசுவதோ கண்டனத்துக்குரியது.

போதாக் குறைக்கு, பிரதமர் இந்த நாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளோர் 37 சதவிகிதத்தினர் என்றும் அவர்கள் அத்தனை பேருக்கும் இலவசமாக உணவு தர முடியுமா? என்றும் கேட்டிருக்கிறார்! இலவசமாகத் தொலைக்காட்சிப் பெட்டிகள், மின்சாரம், கேஸ் இணைப்பு இன்ன பிற விஷயங்கள் தரப்படும் நாட்டில், இலவசமாக உணவு தானியம் தருவது மட்டும் ஏன் ஆட்சேபணைக்குரியதாக இருக்கவேண்டும்?! அரசியல்வாதியாக அல்லாமல், பொருளாதார நிபுணராகப் பிரதமர் பேசுகிறார் எனில், உணவுதானியம் நீங்கலான இதர இலவசங்களைத்தான் அவர் முதலில் ஆட்சேபிக்க வேண்டும்.

அரசியல்வாதியாக இன்றி, நாட்டின் வளர்ச்சியிலும் அதன் மக்கள் மீது அக்கறையும் உடையவராகப் பிரச்னையைப் பிரதமர் அணுகவேண்டும். ஆனால், அவரோ விவசாயத் தொழிலிலிருந்து மக்களைத் திசை திருப்பி தொழில்துறையில் பணியமர்த்தவேண்டும் என்கிறார். இதன் மூலம் உணவு உற்பத்தி குறைந்து பசிப்பிணிதான் அதிகமாகும். பல்வேறு புதிய பிரச்னைகளும் தோன்றும். விவசாயத்தில் போதுமான அளவு வருமானம் இல்லை என்பதுதான் பிரதமரின் கவலை எனில், அத்தொழிலைச் செய்வோருக்கு எவ்வாறு அரசு உதவ முடியும் என்பதைப் பார்க்கட்டும். விளைபொருட்களின் சீரான விலையை உறுதிசெய்ய, விவசாயம் சார்ந்த உணவு பதனிடும் தொழில்கள் பரவலாக அமைய ஊக்கம் தரட்டும்.

தொழில்-பொருளாதாரக் கொள்கைகள் அவசியம் என்ற போதிலும், அவை தொலைநோக்குடன் வகுக்கப்படவேண்டும்; யதார்த்த நோக்கில் திருத்திக் கொள்ளப்பட வேண்டும்; மனித நேய நோக்கில் செயல்படுத்தப்பட வேண்டும். இந்த மூன்றிலுமே தவறுவதால்தான் பல்லாயிரம் டன் உணவு தானியங்கள் ஒரு பக்கம் வீணாக அனுமதிக்கப்படுகின்றன; இன்னொரு பக்கம் பலகோடி மக்கள் பசியில் வாடுகிறார்கள்.

மூலதன மந்திரம்

பைபாஸ் சாலையில் ரெண்டு கிரௌண்ட்!



மைதிலி ஸ்ரீனிவாசன், ஸ்ரீரங்கம்.

எங்களுக்கு பை-பாஸ் ரோட்டில் 1/2 கி.மீ., 2 கி.மீ தொலைவில் இரு கிரவுண்ட் நிலம் உள்ளது. எஸ்.பி.ஐ. இன்சூரன்ஸில் ரூ.50,000 முறையே மூன்று தவணையும், அவிவாவில் ரூ. 30,000 வீதம் மூன்று தவணையும் மற்றும் சில எல்.ஐ.சி. பத்திரங்களும் உள்ளன. இவற்றை எப்போது விற்கலாம்? 1.ஃபிளாட் 2.எஸ்.பி.ஐ. 3. அவிவா 4. எல்.ஐ.சி. இந்த நான்கில் ஏதாவது காலை வாருமோ என்று அச்சமாக உள்ளது.

நீங்கள் சொல்லும் ப்ளாட் (இரண்டு கிரவுண்ட் நிலம்) தற்சமயமே வீடு கட்டி வசிக்க உசிதமானதாக இருந்தால் பிளாட் (அடுக்குமாடி குடியிருப்பு) வாங்காமல் நிலத்தில் வீடுகட்டுவது குறித்து சிந்திக்கலாம்.



இன்சூரன்ஸ் முதலீடுகள் எப்போதுமே முதலீடு செய்யும் முன்னர் ஆராய்ந்து பார்த்து எடுக்கவேண்டிய ஒன்று. பொதுவாக பாலிசி எடுக்கும்போது எத்தனை வருடம் என்று ஒப்புக் கொண்டு எடுக்கின்றீர்களோ அத்தனை வருடம் கட்டாயமாக தொடர்ந்து பணம் செலுத்தி வரவேண்டும். இடை யில் மனம் மாறி பாலிசியை முடித்து/ முறித்து வெளியேறினால் பெரிய அளவில் நஷ்டம்தான் வரும். அதாவது, இன்சூரன்ஸ் கம்பெனி பிடித்தம் செய்ததுபோக திரும்பத்தரும் பணம் நீங்கள் செலுத்திய தொகையைவிட மிகக்குறைவாகவே இருக்கும். எனவே, அத்தியாவசியத்தேவை இல்லாதபோது பாலிசிகளை முடித் துக்கொள்வது தேவையற்றது. வீடுகட்ட பணம் தேவைப்பட்டால் பாலிசியின் மீது அந்த இன்சூரன்ஸ் கம்பெனியிலேயே கடன் கிடைக்குமா என்று பார்ப் பது நல்லது. இன்சூரன்ஸ் கம்பெனிகளையும் பைனான்ஸ் கம்பெனிகளையும் சரிசமமாக ஒப்பிட்டு அதே அளவிற்கு நீங்கள் கவலை கொள்ளவேண்டியதில்லை.



டி.பாலசுந்தரம்

உங்கள் கேள்விகளை 'மூலதன மந்திரம்' என்று குறிப்பிட்டு அனுப்பலாம். kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். செல்ஃபோனில் KAFIN என்று டைப் செய்து. ஒரு ஸ்பேஸ் விட்டு. கேள்வி. பெயர். ஊர்ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.

ஆல்ஃபா மைண்ட் பவர்

ஆழ்மனதின் சக்தி!

ALPHA MIND POWER™

"Unwind Your Mind & Empower Yourself"

மனோ சக்தி நிபுணர் **டாக்டர் விஜயலக்ஷ்மி பந்தையன்**

அளிக்கும் ஒரு நாள் இந்தியாவின் பழம்பெரும் சித்தர்களின் சக்தியுடன் கூடிய ஒரு நாள் ஆல்ஃபா தியானப் பயிற்சி



- மன அழுத்தம் குறைக்க
- பண வரவை அதிகரிக்க
- உறவுகளை சீர்படுத்த
- குடும்பத்தில் அன்பு நிலவச் செய்ய
- நோய் தீர்க்க, நிம்மதியாகத் தூங்க
- பரீட்சையில் அதிக மார்க் வாங்க
- மகிழ்ச்சியுடன், தன்னம்பிக்கையுடன், வெற்றியுடன் வாழ

தபால் மூலம் கற்கலாம்

ஆல்ஃபா மைண்ட் பவர் ஆடியோ சிடி மற்றும் பயிற்சிப் புத்தகம் ஆங்கிலம் மற்றும் தமிழில் தபால் மூலம் பெறலாம்.

ஒரு நாள் பயிற்சி மட்டுமே!

ஆல்ஃபா தியான அனுபவம் இதோ ஒரு கடிதம்

எனக்கு பல மாதங்களாக உடல் ஆரோக்கியம் குன்றிக்கொண்டே வந்தது. ஒரு வியாதி போனால் மற்றொரு வியாதி என்று மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன். இதனால் பணவிரயத்தோடு மன நிம்மதியும் இன்றி தவித்தேன். ஆல்ஃபா தியானம் பயின்றேன். உடல் ஆரோக்கியத்துக்காக தினமும் தியானம் செய்து வந்தேன். நாளடைவில் எனது நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து ஆரோக்கியம் தேறிவிட்டது. என் உடலும் மனமும் சக்தியுடன் இருக்கின்றன. ஆல்ஃபாவிற்கு நன்றி! குருஜிக்கு நன்றி!

திரு.ராகவன், மதுரை

ஆர்.எஸ்.ஆர்.பிளாசா, 3வது தளம், 50, 51 ஆற்காடு ரோடு, சாலிகிராமம்,
சென்னை - 600 093. இந்தியா ஃபோன்:+91-44-23760007,
மொபைல் : 98416 96664 / 98414 02000 / 98412 72146
e-mail : amp@alphamindpower.net www.alphamindpower.net

அடுத்து வரும் பயிற்சி வகுப்புகள்

திருச்சி - 10.10.10, கோவை - 24.10.10
சென்னை - 31.10.10, பெங்களூர் - 14.11.10



ஸ்ரீ சுவாமி நாத சுவாமி சஹாயம்

ௐ

இந்தியாவின் சிறப்புமிக்க முன்னணி ஸ்தாபனம்

SGS

Sri Gomathi Sankar Catering Service

ஸ்ரீ கோமதி சங்கர் கேட்டரிங் சர்வீஸ்

Master Cook Catering Contractors



சமையல் சக்கரவர்த்தி

மாம்பலம் **G. சங்கர் ஐயர்**

பாரதம் முழுவதும்

15/6, Nayakkamar Street, Near Postal Colony, West Mambalam, Chennai - 600 033.

Ph: 2371 2318 Cell: 98411 13559, 93810 53924, 2483 2334 (R)



ஞாநி

திருமண வீட்டில் ரசிகருக்கு என்ன வேலை?

நடிகர் ரஜினிகாந்த் வீட்டுத் திருமணம் அவருடைய ரசிகர்களிடையே சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறது. இந்தச் சர்ச்சையைச் சற்று ஆழமாக நாம் அலசிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

நடந்தது என்ன? ரஜினிகாந்த் அவருடைய இளைய மகளுக்குத் திருமணம் நடத்தி வைக்கிறார். அதற்கு வருமாறு, முதல்வர் முதல் திருமா வரை, பல அரசியல் பிரபலங்களையும் தாம் வேலை செய்துவரும் சினிமா துறையினரில் பலரையும், நேரில் சென்றெல்லாம் அழைத்திருக்கிறார். பெரும் பொருட்செலவில் ஆடம்பரமாக நடைபெற்ற பல பணக்கார வீட்டுத் திருமணங்களில் இதுவும் ஒன்றாக இருந்திருக்கிறது.

ஆனால், ரஜினி ரசிகர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களான, அவருடைய ரசிகர் மன்றங்களிலிருந்து ஒரு பகுதியினர், ரஜினி தங்களைத் திருமணத்துக்கு அழைக்கவில்லையென்றும், மண்டபத்துக்கு வந்தவர்களை உள்ளே விடவில்லை என்றும் வருத்தங்களையும் கண்டனங்களையும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைச் சமாதானப்படுத்த, ரஜினி தனி அறிக்கையே வெளியிட்டிருக்கிறார். எல்லா ரசிகர்களையும் அவரவர் குடும்பங்களுடன் அழைத்து, விருந்து கொடுத்து மணமக்களை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதுதான், தம் விருப்பம் என்றும் அதற்கு முயற்சிப்பதாகவும் அவர் சொல்லியிருக்கிறார்!

இவர் வீட்டுத் திருமணத்துக்கு ரசிகர்களை எல்லாம் அழைக்க வேண்டும் என்று கோருவதும் அபத்தம். தனியே உங்களுக்கெல்லாம் விருந்து வைப்பேன் என்று அறிவிப்பதும் அவசியமே இல்லை..

ரஜினியின் அடுத்த படமான 150 கோடி ரூபாய் பட்ஜெட்டில் தயாரித்ததாகச் சொல்லப்படும் எந்திரன், கமர்ஷியல் வெற்றிப்படமாக ஓட வேண்டுமென்றால், குறைந்தது 5 கோடி பேர் ஆளுக்குச் சராசரியாக 60 ரூபாய் கொடுத்துப் பார்த்தால்தான் 300 கோடி ரூபாய்கள் கலெக்ஷன் வரும்.

படத்தைப் பார்த்தாக வேண்டிய 5 கோடி பேரில் ஒரு கோடி பேர், ஒரு முறைதான் ஒரு படத்தைப் பார்க்கும் சாதாரணப் பார்வையாளர்கள். அப்படியானால், இன்னும் ஒரு கோடி தீவிர 'கலை வெறி', ரஜினிபக்தி உடைய ரசிகர்கள் ஆளுக்கு 4 முறை பார்க்க வேண்டும். எப்படிப் பார்த்தாலும், ரஜினியின் ரசிகர்கள் எண்ணிக்கை ஒரு கோடியாவது இருந்தாக வேண்டும். அதில் பாதி பேர்தான் அதி தீவிர ரசிகர்கள் என்று



வைத்துக் கொண்டாலும், 50 லட்சம் பேர் கணக்கு வருகிறது. இவர்கள் ஒவ்வொருவர் குடும்பத்திலும், சராசரி 4 பேர் என்று வைத்துக் கொண்டால், மொத்தம் இரண்டு கோடி பேருக்கு ரஜினிகாந்த் விருந்து நடத்தி மணமக்களை அறிமுகம் செய்யப் போகிறாரா?

நிச்சயம் இல்லை. முடியாது. அதிகபட்சம் செய்யக் கூடியதெல்லாம் 31 மாவட்டங்களிலும் இருக்கும் மாவட்ட ரஜினி ரசிகர் மன்ற நிர்வாகிகளைக் கணக்கிட்டு ஆயிரம் முதல் 2000 பேரை மட்டும் அழைத்து அவர் ஒரு விருந்து கொடுக்க முடியலாம். இதைக் கூட இப்போது செய்யவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது...?





எந்திரன் ரிலீஸ் ஆகும் சமயத்தில் திருமணம் நடக்காமல், பட ரிலீசே இல்லாத ஒரு காலகட்டத்தில் நடந்திருந்தால், இந்த அளவுக்கு ரஜினி கவலைப்பட்டிருப்பாரா...?

ரசிகர் மன்றத்தின் மூலம்தான் ஒரு ஹீரோ நடிகர், பணம் கொடுத்து எல்லா அரங்குகளிலும் பட்டாசு வெடித்து பேனர் கட்டி பாலாபிஷேகம் செய்து தோரணம் கட்டி தன் 'வலிமையை'க் காட்ட முடியும். இதைத்தான் வலிமை என்று அரசியலிலும் சரி, சினிமாவிலும் சரி, பொது மக்கள் பெரிதும் நம்புகிறார்கள். முதல் வாரத்தில் பிளாக்கில் டிக்கட்டுகளை அதிகக் கட்டணத்துக்கு விற்பதற்கு ஸ்பெஷல் ஷோ என்ற பெயரில் ஷோ நடத்த ரசிகர் மன்ற நெட்வொர்க் தேவை.

பல வருடங்கள் தம் பிறந்த நாளன்று ரசிகர்களைச் சந்திக்காமல் இமயமலைக்கோ, இன்னும் நமக்குத் தெரியாத ஏதாவது மர்மமான ஆன்மிக சக்தி ததும்பும் இடங்களுக்கோ போய் விடும் ரஜினி, இப்போது சலசலப்பை ஏற்படுத்தும் ரசிகர்களைச் சாந்திப்படுத்த, அறிக்கை விடுவதன் ரகசியம் எந்திரன் ரிலீஸ்தானே? பட ரிலீஸ்களையொட்டி வாய்ஸ் கொடுப்பதுதான் அவர் வழக்கம்.

முதலில் சில அடிப்படைப் பிரச்னைகளைப் பார்ப்போம். ஒருவர் வீட்டுத் திருமணம் என்பது அவருடைய குடும்பத்தின் அந்தரங்கமான விஷயங்களில் ஒன்று. பெரியார் தன் பகுத்தறிவுப் பிரசாரத்தில் பல முறை வலியுறுத்தியிருக்கிறார்: திருமணம் என்பதே அதைச் செய்துகொள்ளும் இருவர் மட்டுமே சம்பந்தப்பட்டது. அதை அவர்கள் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தினால் போதும். முடிந்தபிறகும் கூட சொல்லலாம்.

பெரியார் கொள்கைகளை

ஓ பக்கங்கள்

ஏற்காதவர்கள்கூட தங்களுக்கும் தங்கள் குடும்பத்துக்கும் நெருக்கமான உறவினர்கள், நண்பர்களோடு மகிழ்ச்சியைப் பகிரக் கொண்டாடலாம். வேறெவரையும் அதற்கு அழைப்பதற்கு எந்த நியாயமும் கிடையாது என்பது என் கருத்து. ரஜினி போன்றவர்கள் எல்லா அரசியல் பிரமுகர்களையும் அழைப்பது என்பதே தேவையற்ற செயல்தான் என நான் நம்புகிறேன்.



விமல்

ஆனால் பெரும் பணமும் புகழும் இருப்பவர்கள், தங்கள் பாதுகாப்புக்காக அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களைத் தங்கள் இல்லத் திருமணத்துக்கு அழைக்கும் அளவுக்கு, செயற்கையாக நண்பர்களாக்கிக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு படமும் கமர்ஷியலாக ஓடி வசூலைக் குவித்து வெற்றி பெற, ஹீரோ நடிகர்களுக்கு ரசிகர்கள் தேவைப்படுகிறார்கள். அப்படிக் குவித்த சொத்தைப் பாதுகாத்துக் கொள்ள அரசியல் செல்வாக்கும் அதிகார சக்திகளின் உதவியும் தேவைப்படுகின்றன. எதெதற்கு யாருடைய உதவி தேவையோ அதற்கு மட்டும்தான் அழைப்பார்கள். எனவே படம் பார்க்கத் திரண்டு வா என்று அதிகாரப் புள்ளிகளையும், ஆசி வழங்கத் திருமணத்துக்குத் திரண்டு வா என்று ரசிகர்களையும் அழைக்க முடியவே முடியாது. மாற்றி அழைப்பதுதான் அவர்களுக்குச் சரி.

எல்லாருக்கும் இது புரியும். ஆனால் ஏன் சலசலப்பு வருகிறது? ரசிகனின் மனத்தில், தான் ஒரு பொதுச் சொத்து, ரசிகனுக்குக் கடமைப்பட்டவன், சமூகத்துக்கு விஸ்வாசமானவன் என்றெல்லாம் ஒரு கருத்தைத் திட்டமிட்டு வளர்த்து வைத்திருப்பதுதான் காரணம். ஒரு சொட்டு வியர்வைக்கு ஒரு பவுன் கொடுத்த தமிழகம், என்னை ஆளாக்கிய, வாழவைக்கும் தெய்வங்கள் ரசிகர்கள் என்பது போன்ற ஏராளமான பாட்டு, டயலாக் வரிகள் எல்லாம் வெறும் கமர்ஷியல் வெற்றிக்காக, அதை உறுதி செய்யும் ஒரு இமேஜை வளர்ப்பதற்காக, புத்திசாலிக் கவிஞர்களாலும், வசனகர்த்தாக்களாலும் உருவாக்கப்பட்டவை மட்டும்தான்.

'பசங்க', 'களவாணி' என்று இரண்டு படங்கள் ஓடியதுமே நடிகர் விமலுக்கு ரசிகர் மன்றப் போஸ்டர்கள் வரத் தொடங்கி விடுகின்றன. கூத்துப் பட்டறை பயிற்சியை மீறி வர்த்தக சினிமா வேலை செய்கிறது!

ஹீரோ ஒர்ஷிப் என்பது பாகவதர் காலத்தில் இருந்திருந்தாலும் கூட, அது உரு கொடுக்கப்பட்டு ரசிகர் மன்றமாக்கப்பட்டு சினிமா தயாரிப்பாளரின் கல்லாவை நிரப்ப உதவும் கருவியாகவும், நடிகனை செல்வாக்குள்ள பொதுப் பிரமுகனாக மாற்றும் சக்தியாகவும் ஆக்கப்பட்டது எம்.ஜி.ஆர், சிவாஜி காலத்தில்தான். இந்த அணுகுமுறை ரஜினி-கமல் காலத்தில் மேலும் ஒழுங்குபடுத்தப்பட்டு இப்போது அஜீத், விஜய், தனுஷ், சிம்பு, சூர்யா, கார்த்தி காலத்தில் ஒரு நேர்த்தியான பிசினெஸ் மாடலாகிவிட்டது. இமேஜ் ஒரு முக்கியமான வியாபார அம்சம். ட்விட்டரில் கமெண்ட் அடித்தால் சசி தரூருக்கு மட்டுமல்ல, சினிமா பி.ஆர்.ஓவுக்கும் வேலை போய்விடுகிறது! படத்துக்கு ஓப்பனிங் சுமார்தானாமே என்று அண்மையில் ஒரு பி.ஆர்.ஓ. கமெண்ட் அடித்ததால் வேலை இழந்தார். இதையெல்லாம் பொறுத்துக் கொள்ள சினிமாவில் எல்லாரும் மகான்கள் அல்ல.

அரசியல் கட்சிகளின் உள்ளூர் செயலாளர்கள் பொதுக் கூட்டத்துக்கு க்வார்ட்டர் ப்ளஸ்

இந்த வாரப் பூச்செண்டு!

விளையாடும்போது தலையில் அடி பட்டதால் இறந்த, ஆறு வயதுச் சிறுமி கீர்த்தி அபிநயவள்ளியின் உடல் உறுப்புகளை உடனடியாக தானம் செய்துள்ள, பெற்றோர், பெரம்பலூர் திருமாந்துறையைச் சேர்ந்த அருள்நம்பி - பிரேமா ஆகியோருக்கு.இ.வா.பூ.

பிரியாணி சம்பளத்தில் ஆட்களைத் திரட்டுவதைப் போலவே ரசிகர்மன்ற அமைப்பாளர்களும் தங்கள் ரசிகர்களை இன்று டிக்கட், பண விநியோகம் மூலம்தான் திரட்டுகிறார்கள். விடலை மனங்கள் இந்த ஏஜண்ட்டுகளிடம் சிக்கி வசப்படுவதற்குத் தயார் நிலையில் இருக்கின்றன. அப்படி மனங்களைத் தயார் செய்வதுதான் இன்றைய தமிழ் சினிமா பி.ஆர்.ஓக்கள், மீடியாவின் வேலையாகக் கருதப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள இந்த நிலைக்கு நிகரான சீரழிவு வேறு எந்த மாநிலத்திலும் இந்தியாவில் இல்லை. இதற்கு முக்கியமான காரணம் இந்த மாநிலத்தில் இருப்பதைப் போல வேறெங்கும் சினிமாவும் அரசியலும் இந்த அளவு பின்னிப் பிணைந்திருக்கவில்லை. சினிமாகாரன் பாலிடிக்ஸ் செய்வதும், அரசியல்வாதி ஷோ காட்டுவதும் இங்கேதான். டாஸ்மாக் போதைக்கு நிகரான போதையாக, சினிமா போதை இங்கே வளர்க்கப்பட்டிருக்கிறது. இதில் பத்திரிகைகளின், மீடியாவின் பங்கு கணிசமானது. ஒரு கல்லூரி மாணவிக்கு ஓர் இளம் நடிகனுடன், மோட்டார் சைக்கிளில் பின்னால் உட்கார்ந்து கொண்டு, நகரத்தைச் சுற்றவேண்டுமென்று ஆசை வந்தால், அதை நிறைவேற்றி வைக்கும் வேலையை ஒரு பத்திரிகை செய்கிறது! ரஜினி மகள் திருமணத்தை, நேரடி ஒளிபரப்பு செய்கிறது ஒரு தொலைக்காட்சி.

இந்த வாரத் திட்டு!

ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படும் டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணனின் பிறந்த நாள், இந்த முறை ஞாயிறன்று வந்ததால், விழாவை சனிக்கிழமையன்றே கொண்டாடிய மாநில மத்திய அரசுகளுக்கும், பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் இ.வா.தி. சுதந்திர தினம் ஆகஸ்ட் 15 ஞாயிறன்று வந்தால், ஆகஸ்ட் 14 அன்றே கொடி ஏற்றிக் கொண்டாடி விடுவார்களா?



இந்த வாரக் கேள்வி?

பல வருடங்களாக சர்வதேச அளவில் போட்டிகளில் பரிசுகளை வென்றும், பாராட்டுகளைப் பெற்றும் வரும் இந்தியாவின் மணற் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக், இதுவரை சரியான வேலை இல்லாமல் சிரமப்பட்டு வருகிறாராம். வயது 41 ஆகிவிட்டது. முயற்சி செய்தும் அரசு வேலை கிடைக்கவில்லை. கிரிக்கெட் விளையாட்டு என்றால் வீடும் தொகையும் வாரி வழங்கும் அரசாங்கங்களும் தனியார் நிறுவனங்களும், வித்யாசமான அபூர்வமான கலைத்துறையில் சாதித்திருப்பவரைக் கண்டுகொள்ளாமல் இருப்பது ஏன்? இளைஞர்களுக்கு மணற் சிற்பக் கலையைக் கற்றுத் தரும் வேலையை பட்நாயக்கிற்கு அளித்து, நிரந்தர மாத வருவாய்க்கு அரசு ஏற்பாடு செய்யலாமே ?



கயிறு கட்டிக் கொண்டு பாதாள சாக்கடையில் இறங்கி, கழிவுகளில் மூங்கிக் குளித்து நகரத்தின் அழுக்கையெல்லாம் சுத்தம் செய்வது எப்படி என்று, தானும் இறங்கி செய்து பார்க்கும் ஆசை ஒருபோதும் நம் இளைஞர்களுக்கு வராது. இந்தத் துன்பங்கள் எந்தச் சினிமாவில் காட்டப்படுகின்றன? துப்புரவுத் தொழிலாளியின் ஒரு நாள் வேலையை ஒருபோதும் எந்த டி.வி.யும் நேரடி ஒளிபரப்பு செய்யாது. நம் இளைஞர்களுக்கும் இவை குறித்து அக்கறை ஏற்படாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்கிறார்கள்.

ரஜினி ரசிகர்களுக்கு வைக்கப் போகும் விருந்தில் கலந்துகொள்ள டிக்கட் கிடைக்குமா, எப்படி அங்கே உள்ளே நுழையலாம் என்று யோசிப்பதற்கு மட்டுமே தயார் செய்து வைக்கப்பட்டிருக்கும் மனங்கள் நம்முடையவை. நாம்தான் அரசியலில் மாற்றம் வருவதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்!

அகிலன், ஜெயங்கொண்டம் இளைஞர். கல்லூரி மாணவர். தம்புள்ஸ் ஏற்றுவதும், கர்லாக் கட்டை சுழற்றுவதும் அவருக்குப் பொழுதுபோக்கு. பதினைந்து வயதில் ஜிம் பக்கம் ஒதுங்கியவர். ''பளு தூக்குறதுல சாம்பியன் ஆகணும்ங்கறதுதான் என் இலட்சியம். ஹாஸ்டல்ல தங்கிதான் படிக்கறேன். வூட்ல பெரிய வசதி இல்லே. அதனால சாப்பாட்டுல சிறப்பா ஏதும் என்னால சேர்த்துக்க முடியல. கூட சுத்துற பசங்க எல்லாம் 'இந்தச் சாப்பாட்டுக்கே இப்பிடியா?'னு பொறாமைப்பட்டுப் போவானுங்க. 'இன்னும் நல்லா சாப்பிட்டா நம்ம


* திவ்யபாரதி


* அகிலன்

ஜெயிச்சம்மா ஜெயி

அகிலன் எப்படியெல்லாம் பாடியைக் காட்டுவான்டா'னு ஏத்தியும் விடுவானுங்க. நான் எதையுமே பெருசா எடுத்துக்கறது இல்ல. உடல் கட்டு நல்லா வெச்சுக்கணும்ங்கறதுல தான் கவனமா இருப்பேன். பளு தூக்குறதுல ஸ்னாட்ச்ல 92 கிலோ, கிளீனிங்

ஜார்ல 70 கிலோ தூக்குறேன். ஊற வெச்சக் கொண்டைக் கடலையைக் காலங்கார்த்தால வெறும திங்குறதுதான் என்னோட ஊட்டச் சத்து!'' என்கிறார் அகிலன்.

ஜிம்முக்குப் போகலாம் கைவீசு!

பசங்க பண்ற அலப்பரைக்குச் சற்றும் சளைத்ததல்ல ஜிம்முக்குப் போய் வரும் பெண்கள் செய்யும் அலட்டல்கள்.


அபிராமி

''நான் வாலிபால் பிளேயர். எழுபத்திரெண்டு கிலோ இருந்த நான் எடையைக் குறைக்க ஜிம்முக்குப் போறேன். முதல் ஆறு மாசத்துலேருந்து பலன் தெரிஞ்சது. உடல் எடை கொஞ்சம் கொஞ்சமா கொறைஞ்சது. இப்ப நான் அறுபத்திரெண்டு கிலோ'' என்கிற அபிராமி எம்.சி.ஏ. இரண்டாமாண்டு மாணவி.

''எக்ஸர்சைஸும் உணவு பழக்கமும் இணைந்துதான் நம்ப உடம்பை ஸ்லிம்மாக்குகிறது. காலையில அருகம்புல் சாறு தயாரிச்சுக் குடிச்சிடுவேன். அதனால இரத்தம் சுத்தம் ஆகுது. கோதுமை, நிலக்கடலை, வாழைப்பழம் எல்லாத்தையும் மிக்சியில போட்டு அரைச்சி கஞ்சியாக்கி அதுதான் காலம்பற டிபன். ஜிம்மும் உணவு பழக்கமும்தான் என் உடல் எடையைக் குறைக்க வெச்சு ஸ்லிம் கேர்ள் ஆக மாத்தியிருக்கு'' என்கிற அபிராமி ஒரு பக்கம் என்றால் உடல் எடையை ஏறவிடாமல் பார்த்துக் கொள்ளும் திவ்யபாரதி இன்னொரு பக்கம் டிப்ஸ் சொல்லி அசத்துகிறார் :

''நான் சூப்பரா வாலிபால் விளையாடுவேன். காலேஜ்ல எனக்கு ஃபேன்ஸ் அதிகம். நான் நல்லா வாலிபால் விளையாடுவதற்குக் காரணமே என் ஸ்லிம் உடம்புதான்'' என்கிற திவ்யபாரதி எம்.சி.ஏ. ஸ்டூடன்ட்ஸ். ''ரெண்டு வருசமா எக்சர்சைஸ் செஞ்சு வர்றேன். பெஞ்ச் ப்ரஸ் வெயிட், சைக்கிளிங், பட்டர்பிளை லிஃப்ட், தம் புள்ஸ், கர்லாக் கட்டைனு ஒரு ரவுண்டு வந்துடுவேன். இதுக்கெல்லாம் முன்னாடி ஹிப் ரொட்டேஷன் மிஷின்ல ஏறி நின்னு அஞ்சு நிமிசம் அங்கிட்டு இங்கிட்டு அசைஞ்சு, மத்த எக்சர்சைஸ் செய்றதுக்கு என் உடலைத் தயார் பண்ணிக்குவேன். புரோட்டீன் பவுடர் சாப்பிட்டு உடற்பயிற்சி பண்ணினா களைப்பு வராது. எக்சர்சைஸ் முடிஞ்சதும் கொஞ்சம் குளுகோஸ் பவுடர், இல்லாட்டி ஒரு தம்ளர் லெமன் ஜூஸ் எடுத்துக்கலாம். என்னோட ஐம்பத்தெட்டு கிலோ உடல் எடையை, நான் இப்படித்தான் உயராமல் பார்த்துக்கறேன்.''

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

மேஷம்

எதிர்பார்த்த காரியங்கள் யாவும் வெற்றி பெறும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். சத்ரு தொல்லை விலகும். வழக்கு வெற்றி அளிக்கும். விருந்தினர் வருகை மனத்துக்குச் சந்தோஷம் அளிக்கும். உடல் நிலையில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. செலவுகள் கட்டுக்குள் இருக்கும். கைப்பொருள் மீது கவனம் தேவை. வீடு / மனை வாங்க உகந்த நேரம். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள்.

ரிஷபம்

மன டென்ஷன் விலகும். பூர்வீகச் சொத்துப் பாகப்பிரிவினை ஆகும். வேலைப்பளு அதிகரிக்கும். கடன் சுமை குறையும். மறைமுக விரோதிகளால் தொல்லை ஏற்படும். பேச்சில் கவனம் தேவை. வியாபாரத்தில் சற்று முன்னேற்றம் இருக்கும். உடன்பிறப்புகளுடன் மன வருத்தம் ஏற்படும். படிப்பில் அக்கறை காட்டுவது நல்லது. ராகு / கேதுவை வழி பட்டு வர சங்கடங்கள் தீரும்.

மிதுனம்

திருமணக் காரியம் கை கூடும். வெளிநாட்டிலிருந்து அழைப்பு வந்து சேரும். புதிய சொத்து வாங்கும் யோகம் கிட்டும். குழந்தைகள் பற்றின மனக் கவலை தீரும். உடல்நிலை பாதிக்காது. பணக் கஷ்டம் இருக்காது. குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வரவேண்டிய நிலுவைகள் வந்து சேரும். கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும். வாக்குவன்மை மேலோங்கும். ஆஞ்சநேயருக்குத் தீபம் ஏற்றி வரவும்.

கடகம்

சுபகாரிய பேச்சுவார்த்தை பலன் அளிக்கும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். உடல் ஆரோக்கியம் சீராகும். புண்ணியத் தலம் செல்வீர்கள். மகான்களின் தரிசனம் கிட்டும். குழந்தைகள் இடம்மாறி போவார்கள். இல்லற வாழ்வு மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். வாகன யோகம் பலிதமாகும். குரு வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.

சிம்மம்

தரகு, கமிஷன் தொழிலில் பணம் வந்து சேரும். எண்ணியது யாவும் ஈடேறும். பூர்வீகச் சொத்து விற்பனை ஆகும். கூட்டாளிகள் விட்டு விலகி போவார்கள். எதிர்பாராத பிரயாணம் வந்து சேரும். மனக் குழப்பம் தீரும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. வழக்கு வெற்றி பெறும். உறவினர்களால் காரியம் அனுகூலம் ஆகும். ராகு / கேது வழிபாடு செய்துவர கஷ்டங்கள் விலகும்.

கன்னி

திடீர் பிரயாணம் செல்ல வேண்டி இருக்கும். இல்லற வாழ்வில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. கடன் பிரச்னை தலைதூக்கும். வழக்குத் தாமதம் ஆகும். படிப்பில் அக்கறை எடுத்துப் படிப்பது நல்லது. யாருக்கும் ஜாமீன் போடக் கூடாது. சுபகாரியம் சற்றுத் தள்ளிப்போகும். வியாபாரத்தில் மந்த நிலை நீடிக்கும். ஆஞ்சநேயர், தக்ஷிணாமூர்த்தி வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.

நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

துலாம்

சுபச் செய்திகள் கைகூடி வரும். வாகன யோகம் உண்டாகும். குழந்தைகள் வழியில் நல்ல செய்திகள் கூடி வரும். சொத்து வாங்கும் யோகம் கிட்டும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. கல்வி வளம் மேலோங்கும். அயல்நாடு செல்லும் யோகம் உண்டாகும். மன உளைச்சல் தீரும். புதிய முயற்சி பலன் அளிக்கும். கோர்ட் வழக்கு வெற்றி பெறும். ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வரவும்.

விருச்சிகம்

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. படிப்பில் அக்கறை எடுத்துப் படித்து வருதல் நல்லது. இல்லற வாழ்வில் விட்டு கொடுத்து அனுசரித்து நடந்து கொள்வது நல்லது. வியாபாரத்தில் நல்ல வருவாய் ஏற்படும். தொழிலில் மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். உத்தியோகத்தில் வேலை பளு அதிக்கும். திருமணம் தாமதம் ஆகும். ராகு / கேது வழிபட்டு வர தீமைகள் விலகி நற்பலன் கிட்டும்.

தனுசு

உத்தியோகத்தில் உயர்வு வரலாம். சிலருக்குப் புதிய வேலைவாய்ப்பு தேடி வரும். சொத்து வாங்கும் யோகம் கிட்டும். புண்ணிய ஸ்தலம் சென்றுவர நற்பலன் அதிகரிக்கும். வியாபாரத்தில் நல்ல இலாபம் கிட்டும். குழந்தைகள் வழியில் சுப செய்திகள் கூடிவரும். சிலருக்கு வீடு மாற்றம் உண்டாகும். பொருளாதாரச் சிக்கல் இருக்காது. கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும்.

மகரம்

முயற்சிக்கும் காரியம் வெற்றி பெறும். படிப்பில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஆடை ஆபரணப் பொருட்கள் வாங்குவீர்கள். மனக்கிலேசம் விலகும். பணக் கஷ்டம் இருக்காது. வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். வழக்கு வெற்றி பெறும். செலவுகள் சுபமானதாக இருக்கும். தொழில் துறையில் வெற்றி தேடி வரும். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள்.

கும்பம்

வீட்டைப் பற்றியோ, குழந்தைகள் பற்றியோ மனக்கவலை ஏற்படும். கூட்டாளிகள் விட்டு விலகிச் செல்ல நேரிடும். படிப்பில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். நீண்ட காலம் முடிவு பெறாமல் இருந்து வந்த வழக்கு வெற்றி பெறும். ஆரோக்கியம் சீராகும். மன உளைச்சல் தீரும். ஆஞ்சநேயர் வழிபாடு நற்பலன் அளிக்கும்.

மீனம்

தொழில் துறையில் இடமாற்றம் ஏற்படும். கடன் பிரச்னை தீரும். செலவுகள் பலன் உள்ளதாக இருக்கும். சுபச் செய்தி கூடி வரும். வியாபாரத்தில் நல்ல இலாபம் கிட்டும். சத்ரு தொல்லை விலகும். சிலருக்கு வீடு மாற்றம் உண்டாகும். கடவுளின் அனுக்கிரகம் கிட்டும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். ராகு / கேது / சனி / குரு வழிபட்டு வர சங்கடங்கள் தீரும்.

12.09.2010 முதல் 18.09.2010 வரை

“என்னைப் போன்ற இளைய தலைமுறை ஹீரோக்கள் எல்லோருக்குமே ஃபிட்னஸ் ஹீரோ, கமல் சார்தான்! அவரைப் போல உடற்பயிற்சியில் அதீத ஆர்வம் கொண்டவர்கள் வேறு யாருமில்லை. அவருக்கு அடுத்து என்னை ஃபிட்னஸ் விஷயத்தில் ஆச்சர்யப்படுத்துபவர் சூர்யா. உடம்பை ட்ரிம்மாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வே இவர்களைப் பார்த்துதான் எனக்கு வந்தது'' என்கிறார் முரண் படத்துக்காக பத்துக் கிலோ எடை குறைத்து ஸ்லிம் ஆகியிருக்கும் நடிகர் பிரசன்னா.

''சினிமாவுக்கு வருவதற்கு முன்பு, டிபிகல் மிடில் க்ளாஸ் குடும்பத்தைச் சேர்ந்த பையன் போல ஸ்கூலுக்கு காலேஜுக்குப் போவது, வீட்டுக்கு வந்ததும் டி.வி. பார்ப்பது, படிப்பது. லீவு நாட்களில் கோயிலுக்கோ, மற்ற இடங்களுக்கோ போவது என என் வாழ்க்கை வெகு சாதாரணமாகத்தான் இருந்தது. ஆனால் சினிமாவுக்கு வந்த பிறகு எல்லாமே மாறிப்போச்சு.

'ஃபைவ் ஸ்டார்' படத்தில் நடிக்க வாய்ப்பு வந்தபோது எனக்கு வயது பத்தொன்பது. சினிமா ஃபீல்டுக்கு ஏற்ப நான் பல புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டி இருந்தன. புத்தகங்கள் படிப்பது, உணவு விஷயங்கள்... இந்த வரிசையில் நான் கடைசியாகக் கற்றுக் கொண்டது ஃபிட்னஸ். காரணம், ஒரு நடிகர் நன்றாக நடிக்கணும் என்று நினைத்தேனே தவிர, தினமும் உடற்பயிற்சி செய்து, உடம்பை டிரிம்மாக வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற விழிப்புணர்ச்சி எனக்கு இல்லை. அந்த அவேர்னஸ் 2008ல்தான் வந்தது. அதுவும் மற்றவர்கள் பாராட்டியபோது. என்ன ஆச்சர்யமா இருக்கா?'' என்று கொக்கிப் போடுகிறார் பிரசன்னா.

“அச்சமுண்டு அச்சமுண்டு படத்தில் ஆறு வயது பெண்ணுக்கு அப்பாவாக, யு.எஸ்.ஸில் வேலைபார்க்கும் முப்பத்தைந்து



வயது குடும்பத் தலைவனாக நடித்தேன். படம் பார்த்தவர்கள் அந்தக் கேரக்டருக்கு நான் மிகவும் பொருத்தமாக இருப்பதாகச் சொல்லி நடிப்பைப் பாராட்டினார்கள். அந்தப் படம் வந்தபோது என் நிஜ வயது இருபத் தைந்துதான். ஆனால் திரையில் எனக்கு முப்பத்தைந்து வயதுக்காரருடைய தோற் றம் இருப்பது புரிந்தது. அப்போதுதான் முடிவு செய்தேன். எப்பாடு பட்டாவது உடம்பைக் குறைத்து இளமையான தோற் றத்தைப் பெற்றுவிட வேண்டும் என்று'' என்கிற பிரசன்னா, அதற்காக என்ன வொர்க் அவுட் பண்ணி னார் என்பதையும் சொல்கிறார்.

''ஜிம்முக்குப் போய் ரெகுல ராகப் பயிற்சிகள் செய்ய ஆரம் பித்தேன். ஒண்ணரை மணி நேரம் ஒரு பயிற்சியாளரின் மேற்பார்



ரெண்டு இட்லி; ரெண்டு சப்பாத்தி; ஒரு தோசை!

வையில் செய்தபோது, அதற்கு நல்ல பலன் கிடைத்தது. கூடவே உணவு விஷயத்தில் என்னென்ன மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று ஒரு டயடீஷியனிடம் ஆலோசனை கேட்டு, அதற் கேற்றபடி மாறிக் கொண்டேன். வாய்க்கு ருசியாக இருக்கிறது என்பதற்காக எந்த ஓர் ஐட்டத் தையும் ஒரு பிடி பிடித்துவிடக் கூடாது. இட்லியா ரெண்டு; தோசையா ஒண்ணுதான்! சப் பாத்தியா ரெண்டு, சாதம் ஒரு கப் என்று புரிந்தது. காய்கறிகள் நிறைய சேர்த்துக் கொள்ள வேண்டும். இரவில் திராட்சை, கொய்யா, ஆப்பிள், மாதுளை, பியர்ஸ், மங்குஸ்தான் மாதிரியான பழங்களை அதிகமா சேர்த்துக்கொள்ள வேண்டும். சாப்பாட்டில் ஆலிவ் ஆயில் பயன்படுத்துவது நல்லது என்று ஆலோசனை சொன்னார் என் டயட்டீஷியன். 'எது வேண்டுமானாலும் சாப்பிடலாம்; ஆனா எதையும் அளவோடு சாப்பிடணும்' இது அவர் எனக்குச் சொல்லிக்கொடுத்த ஃபிட்னஸ் மந்திரம்'' என்கிறார் பிரசன்னா.

''நாணயம் படத்தில் எனக்கு அதிரடி ஆக்ஷன் ரோல். அதனால் எனக்கு பாடி-மாஸ் இண்டெக்ஸ் எடுத்துப் பார்த்தபோது, என் உயரத்துக்கு, நான் அதிக குண்டு இல்லை என்றாலும் உடம்பில் கொழுப்பு அதிக மாக இருந்தது.

எனவே, எடையில் ஐந்து கிலோ வாவது குறைக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்துக் கொண்டு, ஷூட்டிங் நேரத்துக்கேற்ப ஜிம் நேரத்தை அட்ஜஸ்ட் செய்துகொண் டேன். டிரெட் மில், பளு தூக்குதல் போன்ற பயிற்சிகள் செய்தபோது ஆறே மாதங்களில் நல்ல பலன் தெரிந்தது.

ஏழெட்டு மாதங்களுக்கு முன்னால் நடிக்க ஒப்புக்கொண்ட படம் முரண். இதில் என் நிஜ வயதைவிட ஐந்து வருஷம் குறைந்தது போல தோற்றம் இருக்க வேண்டும் என்று திட்டமிட்டு உடற் பயிற்சி செய்தேன். அதில் ஜெயித்திருப்பதாகவே நினைக்கிறேன். ஆனால் இப்போதைக்கு சிக்ஸ் பேக் உடம்பில் எனக்கு ஆர்வம் இல்லை. ஒரு வேளை எதிர்காலத்தில் படத்துக்காகத் தேவைப்பட்டால் அதையும் செய்து பார்க்கத் தயங்க மாட்டேன்'' என்கிறார் பிரசன்னா.

- எஸ்.சந்திரமௌலி

''உங்களுக்குப் பிடித்த ஹீரோ யார்?'' என்று பியாவிடம் கேட்டால் ''அஜித்'' என்று பட்டென பதில் வருகிறது. ''அஜித் சார் மாதிரி நல்லா பழகக் கூடிய ஹீரோவை நான் பார்த்ததில்லை. பெரிய ஹீரோ என்ற பந்தா இல்லாமல், எல்லோரிடமும் இறங்கி வந்து பேசுகிறார். இதை ஏகன் ஷூட்டிங்கில் தெரிந்துகொண்டேன்'' என்று ஏகத்துக்கும் ஏகன் புகழ் பாடுகிறார்.

பியா என்றால் நீங்கள் காதலிக்கும் நபர் என்று அர்த்தம் என்றவரிடம் (அட, அப்படியா) ''நீங்கள் காதலிக்கும் நபர் யார் பியா?'' என்று மடக்கினோம். ''என்னைப் போன்ற சினிமாக்காரங்களுக்குச் சரியான லவ் அமையறது கஷ்டம். யாராவது என்னிடம் பிரபோஸ் பண்ணினாகூட இந்த ஆள் நம்ம பாப்புலாரிட்டி, பணத்தைப் பார்த்துதான் லவ் பண்றானோ போன்ற குழப்பங்களும் சந்தேகங்களும் வரும்.'' (அட, பாவமே)

''அப்ப அரேன்ஜ்ட் மேரேஜ்தானா?''

''அதுதான் இல்லை. (ரொம்ப குழப்பமா இருக்கே) என் கேரக்டருக்கும், என்னோட சுதந்திர உணர்வுகளுக்கும் உனக்கு மாப்பிள்ளை பார்க்கிறது கஷ்டம்ன்னு எங்கம்மா அடிக்கடி சொல்லுவாங்க. உன்னோட பார்ட்னரை நீயே செலக்ட் பண்ணிக்கன்னு எப்பவோ க்ரீன் சிக்னல் காட்டிட்டாங்க. அதனால என்னோட மேரேஜ் கண்டிப்பாக லவ் மேரேஜ்தான் (சூப்பர்...) எனக்கான பொருத்தமான ஆளைப் பார்க்கறவரைக்கும் வெயிட் பண்ணுவேன்'' என்றவர் காலேஜ் குறித்த நினைவுகளில் மலர்கிறார்.

''குவாலியர்ல பாஸ்டன் காலேஜ்ல படிக்கும்போது எங்க பேட்ச்சில் நூத்தியம்பது பசங்க இருப்பாங்க. என்னையும் சேர்த்து மூணு பேர்தான் கேர்ள்ஸ். ஒரு நாளைக்குச் சுமார் பத்து பேர் வரை ஐ லவ் யூன்னு சொல்லுவாங்க. ஒரு சில சேட்டைக்காரப் பசங்க என்கிட்ட ஐ லவ் யூன்னு சொல்லிட்டு நான் மறுத்ததும், அன்னைக்கே இன்னொரு பொண்ணுகிட்டப் போய் பிரபோஸ் பண்ணுவாங்க. (காய்ஞ்சு போய் இருப்பாங்க) விஷயம் தெரிஞ்சதும் அந்தப் பசங்களைக் கண்டபடி திட்டிவிட்டுருவேன். இன்னைக்கு நினைச்சாலும் மறக்க முடியாத காலேஜ் நினைவுகள் இவை'' என்றவரின் பேச்சு சொந்த ஊர்ப் பக்கம் திரும்புகிறது.

''என்னோட சொந்த ஊரான உத்திரப்பிரதேச மாநிலம் இட்டாவா கொஞ்சம் பின்தங்கிய பகுதி. மக்களும் முரட்டுத்தனமானவங்க. இங்கே, ஈவ் டீசிங்கும் பொண்ணுங்களைக் கிண்டல் பண்றதும் அதிகம். யாராவது வெளியில் போகும்போது, என்னையோ, என் சிஸ்டர்ஸையோ ஈவ் டீசிங் செஞ்சா, பேச்சே கிடையாது. அடி பின்னியெடுத்துடுவேன். எங்க ஊர்ல குறைஞ்சது இரண்டு நாளைக்கு ஒரு தடவையாவது, இதுபோன்ற பிரச்னைகளோடுதான் வருவேன்'' என்று போல்டாக பேசும் பியா, அடிப்படையில் வெஜிடேரியன். ''தில்லி, மும்பை, சென்னைன்னு எல்லா ஊரும் சுத்தறதால எல்லாவித வெஜிடேரியன் அயிட்டங்களையும் ஒரு வெட்டு வெட்டுவேன். சப்பாத்தி, தால், சப்ஜி, ரொட்டி இதெல்லாம் எனக்குச் செய்யத் தெரிஞ்ச அயிட்டங்கள்'' என்றவர் சினிமா பக்கம் திரும்பினார். ''பியா எல்லாவித கேரக்டர்களும் பண்ணக் கூடிய பொண்ணுன்னு இண்டஸ்ட்ரி சொல்லணும். பலே பாண்டியா நல்ல பெயர் வாங்கிக் கொடுத்துருக்கு. அடுத்து கே.வி. ஆனந்த் சாரின் கோ பண்றேன். கிளாமரைப் பத்தி பெரிய குழப்பம் ஒண்ணும் கிடையாது. நம்மளோட உடலமைப்புக்கு ஏத்த மாதிரி கிளாமர் செஞ்சா கண்டிப்பா பார்க்கறவங்களை உறுத்தாத கிளாமரா இருக்கும்ன்றது என்னோட பாலிசி'' என்று கிளாமர் பாலிசி பேசுகிறார்!

- ராகவ்குமார்



“அடி பின்னியெடுத்துடுவேன்!”

● ஆர்.கே.கோபாலன், சென்னை - 33

? 'பிராமணர்கள் தமிழகத்தில் விரும்பப் படவில்லை' என்ற துக்ளக் ஆசிரியர் சோவின் கருத்து பற்றி...?

! பிராமணர்கள் உயர்ஜாதியினர் என்ற அகங்காரம் என்றோ மறைந்துவிட்டது. சமுதாய நீரோட்டத்தில் தங்களையும் அவர்கள் இணைத்துக் கொண்டுள்ள நிலையில், அவர்களை ஒதுக்குவதும் ஒடுக்குவதும் வெகுவாகக் குறைந்து போய்விட்டது. இப்போது தோன்றியிருப்பது சமுதாயத்தைப் பிரிக்கும் வேறுவித ஜாதிப் பிரிவினை ஆபத்து!

● எஸ்.ராமசாமி, வடக்கு தயிர்பாளையம்

? 'இலவச டி.வி வழங்குவது தேவையில்லாதது. டி.வி இல்லாமல் வாழ முடியாதா?' என ராமதாஸ் கேட்கிறாரே - இவர் வீட்டில் டி.வி இல்லாமலா வாழ்கிறார்?

! தொலைக்காட்சிப் பெட்டி என்பது உணவு, உடை, உறைவிடம், கல்வி போன்ற அத்தியாவசிய சாதனம் அல்ல என்பதை உணர்த்தத்தான் சொல்லியிருக்கிறார் என்பதால் இது சரியான கருத்துதான்.

● எஸ்.ஜெயகாந்தன், புன்செய்புளியம்பட்டி

? தன் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபித்தால் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்ளத் தயார் என்கிறாரே உமாசங்கர்?

! ஸார், அமைதியாகுங்க ப்ளீஸ்! தற்கொலை, கொலை என்றெல்லாம் பேசுவது நீங்கள் வகிக்கும் பதவிக்கு அழகல்ல!

● ஜி.ஜெயராமன், கூந்தலூர்

? ''அடுத்த முறையும் நானே ஆட்சியில் தொடர்வது என்பது போலீஸ் அதிகாரிகளின் இப்போதைய செயல்பாட்டில்தான் இருக்கிறது'' என்று தமிழக முதல்வர் பேசியிருக்கிறாரே?

! வோட்டுக்களை மனத்தில் வைத்துக் கொண்டு பேசியிருந்தால் குற்றம்; தமது வயதைக் கருதி பேசியிருந்தால் தவறு. தவறு, குற்றம் இரண்டுமே தவிர்க்கப்பட வேண்டியவை.

● பா.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? இந்தியாவிலேயே சிறந்த ஆட்சி தமிழகத்தில்தான் நடப்பதாக தயாநிதி மாறன் சொல்கிறாரே?

! அப்படியானால் தி.மு.க. தனித்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றி காண முயற்சி செய்யலாமே?! இவர் கருத்தை மக்கள் ஏற்கிறார்களா என்பது அப்போது தெரிந்துவிடுமே!

ராணுவ வீரர்கள் தற்கொலை ஏன்?

● ஜி.கீர்த்தனா, நெய்வேலி

? பாக் வீரர்கள் மீதான சூதாட்டப் புகார் குறித்து?

! வருந்தத்தக்கதுதான்; ஆனால் முன்பு இந்திய வீரர்கள் மீதும் இத்தகைய பழி சுமத்தப்பட்டதுண்டு என்பதை மறக்காமல் அடக்கம் பெறுவோம். கிரிக்கெட் மறுபடி கனவான்கள் விளையாட்டாக விளங்க சர்வதேச கிரிக்கெட் வாரியமும் அதில் பங்கு பெற்றுள்ள அனைத்து நாடுகளும் உறுதி பெறட்டும்.

● ம.உலகநாதன், கும்பகோணம்

? நிருபமா ராவ் மேற்கொண்ட இலங்கைப் பயணம் பற்றி முரண்பாடான தகவல்கள் வருகின்றனவே...?

! மற்றொரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவது போன்ற தோற்றத்தை உரு




* உயர்ந்தும் முறுப்புள்ளி!

வாக்காமலே ஈழத்தமிழர்களின் நல் வாழ்வுக்கு, நட்புரிமையுடன் இந்திய அரக பல வகைகளில் வற்புறுத்த முடியும். இதை நிருபமா என்ன, மத்திய அரசில் யாருமே செய்யவில்லை என்பதுதான் வருத்தம். ஈழத் தமிழரை இந்தியா அந்நியராகக் கருத முடியாது; கூடாது.

● சி.என் ஸ்ரீனிவாசன், சென்னை- 40 ★

? ஜெயலலிதா மீதுள்ள வழக்கை இரண்டு நீதிபதிகள் ஆராய மறுப்பது எதற்காக?

! ஏற்கெனவே ஜெயலலிதா சார்பில் வழக்கறிஞராகச் செயல்பட்டிருந்தாலோ, அல்லது அவருக்கு எதிரான வழக்குகளில் அரசு சார்பில் வழக்குரைஞராகச் செயல்பட்டிருந்தாலோ வழக்கு விசாரணையி லிருந்து விலகிக் கொள்வது நியாயமே. இது பின்னால் சுட்டிக் காட்டப்படுவதற்குப் பதில் முன்கூட்டியே தவிர்ப்பது சரிதான்.



* காவி சர்ச்சை



* போடும் முதல் மார்க்



* தவறிய பொறுப்பு

● மல்லிகை மன்னன், மதுரை

? கேரளாவில் கமலுக்கு நடந்த பாராட்டு விழாவில் மலையாள சினிமா நடிகர் நடிகைகள் கலந்து கொள்ளாமல் புறக்கணித்திருக்கிறார்களே - அவர்களுக்கு மனித நேயமே இல்லை என்றுதானே உணர்த்துகிறது?

! ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதும் கொள்ளாததும் அவரவர் சொந்த விருப்பம், செளகரியத்தைப் பொறுத்தது. ஆனால், ஒட்டுமொத்த புறக் கணிப்பு விரும்பத்தக்கதல்ல. எனினும் கமலே இதற்கு முற்றுப்புள்ளி வைத்து உயர்ந்துவிட்டாரே!


✻ பிரிவினை ஆபத்து

● மு.பெரியசாமி,
விட்டுக்கட்டி

? மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் 'காவி தீவிரவாதம்' என்று குறிப்பிட்டுப் பேசியிருப்பது பற்றி...?


✻ வாபஸாகும் நீதிபதிகள்


✻ சரியான சாடல்

❑ ரூ.150/- பரிசு பெறுபவர்:
வெ.இராதாகிருஷ்ணன், தஞ்சாவூர்
✻ ரூ.75/- பரிசு பெறுபவர்:
சி.என்.சீனிவாசன், சென்னை - 40

! 'காவி' என்ற சொல்லைப் பயன் படுத்தியதற்கு எதிர்ப்பு உருவாகியுள்ளது. இடதுசாரி தீவிரவாதத்துக்கு எதிரான 'வலதுசாரி தீவிரவாதம்' என்று வேண்டுமானால் கூறலாம். வார்த்தை எதுவானால் என்ன? அது குறிப்பிடுகிற விஷயத்தில் மாற்றம் இல்லை. பல விதமான தீவிரவாதங்களைச் சமாளிக்கவேண்டிய கடமை அரசுக்கு இருக்கும் போது, அவற்றைப் பகுத்தறிந்து எதிர்நடவடிக்கைக்குத் திட்டமிடுவது அவசியமாகிறது.

● என்.காளிதாஸ், சிதம்பரம்

? தமிழகத்திலும் மாவோயிஸ்ட் வன்முறையைத் தூண்ட கம்யூனிஸ்டுகள் முயற்சி செய்வதாக கருணாநிதி குற்றம் சாட்டியிருக்கிறாரே?

! மாவோயிஸ்டோ இல்லையோ, பலரகத் தீவிரவாத நடவடிக்கைகள் அதிகரித்து வருவது உண்மை. மாவோயிஸ்ட் வன்முறையை நாங்கள் தூண்டவில்லை என்று கம்யூனிஸ்டுகள் உறுதிபடச் சொல்லலாம்; அரசுக்கு உளவுத்துறை மூலம் என்ன ரகசியத் தகவல் கிடைத்ததோ!

● வெ.இராதாகிருஷ்ணன்,
தஞ்சாவூர் ❑


✻ ஸ்டாப் இட், ப்ளீஸ்!

? ராணுவ வீரர்கள் தற்கொலை செய்து கொள்வது ஏன்...?

! கடுமையான சுற்றுச் சூழல்; குடும்பத்தைப் பிரிந்திருக்கும் தனிமை; உயிருக்கு உத்தரவாதம் இல்லாத தொடர் அச்சுறுத்தல் நிலை ஆகியன மனவலிமையைத் தோற்கடித்துவிடக் கூடியவை. அது நிகழாமலிருக்க, ராணுவ வீரர்களுக்கு உடல் வலிமை வளர்க்கும் பயிற்சியுடன் மன வளமும் உறுதியும் பெருக்கும் நவீனப் பயிற்சி முறைகளும் அவசியம்.

உங்கள் கேள்விகளை 'தராசு' என்று குறிப்பிட்டு kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், KAGQA என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி,பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

அருள்வாக்கு


மனஸுக்கும் மேல்!



ஜீவன் மாதிரியில்லாமல் ஈச்வரன் மனஸுக்கு மேற்பட்ட சக்தி. அதனாலே அவனுடைய க்ருபையில்தான் மனஸ் அடங்க முடியும். அது தன்னைத்தானே அடக்கிக் கொள்ளவில்லை. ஈச்வரன்தான் மாயைக் கலப்பற்ற தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்திலே ஜீவமனஸை வசப்படுத்தி வைக்கிறான். ப்ரயாஸை, ப்ரயத்தனம்தான் ஜீவன் செய்யக்கூடியது. அதற்கு மேலே மாயா நாடகத்தைப் பண்ணினவன்தான் ஸித்தியை அருளவேண்டியவன். ஆனபடியால், ஓயாமல் வேலை பண்ணிக்கொண்டேயுள்ள மனஸ் எப்படி வேலையே பண்ணாததும், தனக்கு அப்பாற்பட்டதாயுமிருக்கிற ஆத்மாவிலே கரைந்துபோக முடியும் என்று தர்க்க ரீதியில் கேட்பதில் அர்த்தமில்லை. அதைத்தானே மாயை இதுவாக்கியிருக்கிறது? இதே மாதிரி, திரும்ப இது அதுவாக ஆகவும் இடம் கொடுத்து, தான் விலகிப்போய் விடுகிறது.

மனஸால் ஆத்மாவைப் பிடிக்க முடியாது. ஆனால், நமக்குத் தெரிந்தது, நம்மை ஸதா ஸர்வ காலமும் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருப்பது, இந்த மனஸ்தான். அதனால் இதை வைத்துக் கொண்டுதான் நாம் ப்ரயாஸை, ப்ரயத்தனம், ஸாதனை செய்தாக வேண்டும். மனஸினால் முடியக் கூடியது, உபத்ரவம் பிடித்த தன்னை எப்படியாவது தொலைத்துத் தலை முழுகிவிட்டு உபத்ரவமே இல்லாத ஆத்மாவாக ஆகிவிட வேண்டுமென்று நினைப்பதுதான். தன்னால் முடிந்த இந்த நினைப்பை அது விடாமல் வைராக்கியத்தோடு அப்யஸித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அப்புறம் - க்ருபை என்று ஒன்று இருக்கிறதோல்லியோ? அது பாக்கி வேலையைப் பார்த்துக்கொண்டுவிடும்.


- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



வண்ணநிலவன்

ஏதோ ஒரு வேகத்தில் சுசீலாவைச் சந்தித்து 'மனோகரியிடம் பேசு' என்று கேட்டுக் கொண்டானே தவிர, இதை மனோகரி எப்படி எடுத்துக் கொள்வாள் என்ற பயமும், தயக்கமும் கிருஷ்ணபாரதிக்கு இருந்தது. சுசீலாவிடம் பேசிவிட்டு ரொம்ப நல்ல பிள்ளை மாதிரி வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

வருண் யாரோ ஸ்நேகிதன் வீட்டுக்குச் சென்றிருந்தான். பாப்பம்மாளும், சண்முகமும் கார்த்திகாவைக் கூட்டிக் கொண்டு கோயிலுக்குச் சென்றிருந்தனர். இருட்டிவிட்டது. மனோகரி டி.வி. பார்த்துக் கொண்டிருந்தாள். வராந்தா விளக்கைப் போட்டுக் கொண்டு ஹெப்ஸிபா ஜேசுதாசனின்



'புத்தம்வீடு' நாவலை வாசிக்க உட்கார்ந்தான் கிருஷ்ண பாரதி. அவனுக்கு ரொம்பப் பிடித்த மான நாவல் அது. சட்டைப் பையிலிருந்த செல்ஃபோன் அடித்தது... சுசீலாவிடமிருந்து தான் அழைப்பு.

''என்ன சுசீலா?''

''நீங்க எங்கே இருக்கீங்க?''

''வீட்டிலேதான் இருக்கேன்...''

''அக்கா இருக்கிறாங்களா? இப்போ நான் வரலாமா?...''

''வா... வா... வீட்டில் நானும் மனோ

மெல்லினத் தொடர்கதை 22

கரியும்தான் இருக்கிறோம்.''

''இப்போ வந்துடறேன்...'' என்று சொன்னாள் சுசீலா. ஆஃபீஸிலிருந்து வீட்டுக்கு வந்து விட்டாள் போல. பக்கத்தில்தானே வீடு. சீக்கிரமே வந்து விடுவாள் என்று தோன்றியது. தெருவில் யாரோ ஒருத்தர் சைக்கிள் மணியை அடித்துக் கொண்டே போனார். படிக்க ஓடவில்லை. மனம் எதையெல்லாமோ யோசித்துக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் வாசலில் ஸ்கூட்டி சத்தம் கேட்டது. சுசீலா வந்து விட்டாள். வண்டியைக் காம்பவுண்டுச் சுவரோரமாக நிறுத்திவிட்டு வந்தாள். அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே படியேறினாள். அவள் போட்டிருந்த பவுடரின் வாசனை இனிமையாகப் பரவியது. சுசீலா முன்னால் சென்றாள்.

உள்ளும் புறமும்



அவளுக்குப் பின்னால் கிருஷ்ணபாரதி சென்றான்.

டி.வி. பார்த்துக் கொண்டிருந்த மனோகரி அந்த நேரத்தில் சுசீலாவை எதிர்பார்க்கவில்லை. அவளை ஏறிட்டுப் பார்த்து விட்டு முன்பு போலவே டி.வி. பார்க்க ஆரம்பித்தாள். சுசீலா, மனோகரியின் அருகில் உட்கார்ந்து கொண்டாள். ஒரு குழந்தையைப் பார்ப்பது போல் ஆதுரத்துடன் மனோகரியைப்

பார்த்தாள். மனோகரியின் கையைப் பற்றிக் கொண்டு, ''எப்படியக்கா இருக்கீங்க...?'' என்று கேட்டாள். மனோகரி விரல்களை மெள்ள அவள் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டாள். கிருஷ்ணபாரதி ஜன்னலோரத்தில் கிடந்த நாற்காலியின் மீது உட்கார்ந்தாள். மனோகரிக்கு எழுந்து செல்ல வேண்டும் போலிருந்தது. எழுவதற்காக முயற்சித்தவளை சுசீலா கையைப் பிடித்து இழுத்து ஸோபாவில் உட்கார வைத்தாள்.

''அக்கா, உங்கக்கிட்டே கொஞ்சம் பேசணும்... உக்காருங்க...''

''என்கிட்டே பேசறதுக்கு என்ன இருக்கு? அவங்களைத்தானே பார்க்க வந்தே? அவங்கக் கிட்டேயே பேசிக்கோ...'' என்று வெடுக்கென்று சொன்னாள் மனோகரி.

''இல்லக்கா... உங்கக்கிட்டே தான் பேசணும்...'' என்றாள் சுசீலா. மனோகரி பேசாமலிருந்தாள். மனோகரியின் கன்னத்தைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பினாள் சுசீலா.

''அக்காவுக்கு என் மேலே கோபம் போலிருக்கு...'' என்று குழந்தையிடம் கொஞ்சுவது போல் கொஞ்சினாள் சுசீலா.

''அக்கா... இனிமே நான் அடிக்கடி வந்து உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க மாட்டேன்; எனக்குப் பெங்களூருக்கு ட்ரான்ஸ்பர் ஆயிட்டுது...''

''உன்னாலே எனக்கென்ன கஷ்டம்?'' என்று கேட்டாள் மனோகரி. அவளுக்குப் பெங்களூருக்கு ட்ரான்ஸ்பர் என்ற தகவல் மனோகரிக்கு ஆசுவாசமாக இருந்தது.

''அக்கா... எனக்கு எல்லாரையும் தொட்டுத் தொட்டுப் பேசித்தான் பழக்கம் அக்கா... இதை நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாது...''

''எனக்கு அதெல்லாம் பிடிக்காது...''

''நீங்க வளர்ந்த விதம் அப்படி. நான் ஸிட்டி ப்ராட் அப். படிச்சது எல்லாம் கோ எஜுகேஷன் ஸ்கூல்லே. சின்ன வயசிலேர்ந்து எல்லாரையும் தொட்டுத் தொட்டுத்தான் பேசுவேன்...''

''சின்ன வயசிலே சரி... பெரியவளானப்புறமும் ஆம்பளைகளைத் தொட்டுத் தொட்டுப் பேசறது, நல்லாவா இருக்கு...?''

''எனக்கு ஆண் உடம்பு, பெண் உடம்புன்னு எந்த வித்தியாசமும் தோன்றதில்லே! யாரைத் தொட்டாலும் ஒரே மாதிரித்தான் இருக்கு...''

''ஆம்பளைகளைத் தொட்டுப் பேசறது தான் பெண்ணுரிமையா...?'' என்று அவளுடைய கொள்கையைக் கேள்வி கேட்டாள் மனோகரி. அப்படிக் கேட்டது உள்ளூரச் சந்தோஷமாக இருந்தது.

''பெண்ணுரிமைங்கிறது ரொம்பப் பெரிய சப்ஜெக்ட்... உங்களுக்கு நான் தொட்டுத் தொட்டுப் பேசறது பிடிக்கலைன்னு கேள்விப்பட்டேன். என்னோட இயல்பே இதுதான்ங்கிறதுக்காகச் சொல்ல வந்தேன். உங்களுடைய சிந்தனை பெண்ணடிமைத்தனத்தின் வெளிப்பாடுதான். அதனாலேதான் ஆண் உடம்பு, பெண் உடம்புன்னு பிரிச்சுப் பார்க்கிறீங்க...''

''அப்போ ஆண், பெண்ணுங்கிற வித்தியாசம் எல்லாம் இல்லைங்கிறீயா...?''

''இந்த வித்தியாசம் எல்லாம் போகணும்ங்கிறதுக்காகத்தான்



''என் மகன் ஸ்கூலுக்குப் போறதுக்கு முன்னாடி பிஸ்கட் பிஸ்கட்ன்னு கேட்டுக்கிட்டே இருப்பான்.''

''இப்போ?''

''பீஸ் கட்டு பீஸ் கட்டுன்னு கேட்கிறான்.''

- பி. பாலாஜி கணேஷ்

"நீ பெரிய பெரிய படிப்பெல்லாம் படிச்சி எனக்கு நல்ல பேர் வாங்கித் தரணும்."

"இப்ப வெச்சிருக்கிற பேர் உனக்குப் பிடிக்கலையா டாடி?"

- ஞா.ஞானமுத்து



நாங்கள்ளாம் பாடுபடறோம். எழுதுறோம்..."

"தலையைச் சுத்துது..." என்றாள் மனோகரி.

"அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும் அக்கா... ஆனா, பாரதியை நீங்க சந்தேகப்படாதீங்க. அவர் ரொம்ப நல்லவர்... எங்க ரெண்டு பேர் மனசிலேயும் எந்தக் கல்மிஷமும் இல்லே. நல்ல ஃப்ரெண்ட்ஸாத்தான் பழகறோம். எங்க மேலே சந்தேகப்படாதீங்க அக்கா..."

"நீங்க ரெண்டு பேரும் பழகறது சாதாரணமா இல்லே... தாலி கட்டின புருஷன் இன்னொரு பெண்ணோட இழைஞ்சு இழைஞ்சுப் பேசறதைப் பார்த்துச் சந்தேகமே படக் கூடாதுங்கிறீயா...?"

"அக்கா... தயவு செஞ்சு நான் சொல்றதை நம்புங்க... நாங்க சாதாரணமாத்தான் பழகறோம்... வேற எந்தத் தப்பான நெனைப் போடவும் பழகலைக்கா..."

"நீ என்ன அவருக்குச் சிபாரிசுக்கு வர்றீயா?"

"சிபாரிசு இல்லே... நிஜத்தைச் சொல்ல வந்தேன்... நீங்க அவரைப் பிரிஞ்சுப் போகிற அளவுக்குப் போயிட்டீங்கன்னு பாரதி சொன்னார். என்னாலே என் விகல்பமில்லாத நடவடிக்கைகளினாலேதான் நீங்க இந்த அளவுக்குப் போயிட்டீங்கங்கறதை நெனைச்சு நான் ரொம்ப வருத்தப்படறேன் அக்கா... நான் தப்பா ஏதும் நடந்துகிட்டிருந்தா மன்னிச்சிடுங்க அக்கா..." என்று கையெடுத்துக் கும்பிட்டாள் சுசீலா. கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது. அவளது முதுகைத் தொட்டு வருடினாள். மனோகரிக்கு அவள் மீது இரக்கம் ஏற்பட்டது.

"நான்தான் உன் கிட்டே மன்னிப்புக் கேட்கணும் சுசீலா... ஏதோ போறாத காலம்... என்னென்னவோ தப்பா நெனைச்சுட்டேன்..." என்று மனோகரியும் வருத்தப்பட்டாள். கிருஷ்ணபாரதிக்கு ஒரு பக்கம் ஆச்சரியமாகவும், இன்னொரு பக்கம் நம்ப முடியாமலும் இருந்தது.

"சரி... கொஞ்சம் இரு... காஃபி எடுத்துட்டு வாறேன்..." என்று மனோகரி காஃபி கொண்டு வர உள்ளே சென்றாள். கிருஷ்ணபாரதி, சுசீலாவைப் பார்த்து லேசாகச் சிரித்தான். "தேங்க்ஸ் சுசீலா... எனக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக்கிட்டதுக்கு தேங்க்ஸ் சுசீலா..." என்றான்.


"ஏதோ... அக்கா மறுபடியும் முன்னைப் போல சகஜமா இருந்தாப் போதும்..." என்றாள் சுசீலா...

"கொஞ்சம் இரு... இந்த நல்ல சமாச்சாரத்தை மனோவோட அப்பாகிட்டே சொல்லிடறேன்..." என்று மொபைலை எடுத்து மனோகரியின் அப்பாவுக்கு ஃபோன் போட்டான்.

(முற்றும்)

புவனா குணாளன், நாகர்கோவில்

எனக்கு வயது முப்பது. என் பாதத்தில் உள்ள பித்த வெடிப்பு பெரும் மன இறுக்கத்தைக் கொடுக்கிறது. ஏன் பாத வெடிப்பு ஏற்படுகிறது? இதற்குப் பாரம்பரிய மருத்துவத் தீர்வு என்ன?



★ நாராயணன்

சித்த மருத்துவர் திரு. நாராயணன்: பித்தவெடிப்பு அல்லது பாதவெடிப்புத் தோன்ற முக்கியமான காரணங்கள்.... ஒன்று அதிக நேரம் தண்ணீரில் நிற்பது. இரண்டாவது, கரடுமுரடான தரையில் நடப்பது. மூன்றாவது, சேற்றில் அதிக நேரம் காலை வைப்பதுதான். துணி துவைக்கப் பயன்படுத்தும் சோப்புகளில் உள்ள கெமிக்கல்ஸினால் சிலருக்குக் கைகளில் வெடிப்பு வரும். அதுபோலவே, அதே கெமிக்கல்ஸ்கள் காலில் படுவதாலும் வெடிப்புகள் தோன்றும். தரமான சோப்பைப் பயன்படுத்திப் பாதத்தைச் சுத்தம் செய்ய வேண்டும். குளித்து முடித்த உடன் உலர்ந்த டவலால், பாதத்தை நன்றாகத் துடைத்திட வேண்டும். முடிந்தவரை பாதத்தை உலர்வாக வைத்துக்கொள்வது நல்லது.

'திரிபலா சூரணம்' (கடுக்காய், நெல்லிக்காய் தான்றிக்காய்) என்ற ஒரு சூரணத்தைக் கொண்டு பாதத்தைத் தேய்த்துச் சுத்தம் செய்து வந்தால், பித்தவெடிப்பில் உள்ள புஞ்சை அழிந்து, தோலுக்கு மிருதுவான



மனத்தைப் பிளக்கும் பித்தவெடிப்பு!

கல்கி கிளினிக்

தன்மை கிடைக்கும். அடுத்து, கிளிஞ்சல் மெழுகு என்று அழைக்கப்படும் (அதாவது கிளிஞ்சல் மற்றும் விளக்கெண்ணெய் சேர்த்துத் தயாரிக்கப்படும்) க்ரீமைத் தடவி வருவதால் பாதத்தை மிருதுவாக்கிப் பித்தவெடிப்பைப் போக்கும்



சசிரேகா, காட்டாங்குளத்தூர்

'சர்க்கரை' அதிகம் சாப்பிட்டால்தான் சர்க்கரை நோய் வரும் என்று தோழி

உங்கள் சந்தேகங்களை 'கல்கி கிளினிக்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க
என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி,பெயர், ஊ

கூறுகிறாள். இதற்காகப் பயந்தே நான் சர்க்கரை சாப்பிடுவதைக் குறைத்துவிட்டேன். என் தோழி சொல்வது சரியா?

டாக்டர் ஜெயஸ்ரீ கோபால் : முதலில் கையைக் கொடுங்கள் சசிரேகா. சர்க்கரை சாப்பிடும் அளவைக் குறைத்து விட்டேன் என்கிறீர்களே அதற்காக. சர்க்கரை சாப்பிடுவதால் மட்டுமே ஒருவருக்குச் சர்க்கரை நோய் வந்து விடாது. பொதுவாகவே சர்க்கரை சாப்பிடுவதால் எந்தப் பலனும் இல்லை. அது empty caloriesதான் கொடுக்கும். சுவைக்காக மட்டுமே உள்ள ஒரு



பொருள் சர்க்கரை. அதைச் சாப்பிடுவதால் ஆரோக்கியம் அதிகரிக்க வாய்ப்பில்லை. மாறாக, அதிக அளவு சர்க்கரை சாப்பிடுவதால், உடல் வெயிட் போட்டுக்கொண்டே போகும். சின்ன வயதிலிருந்தே சர்க்கரை சாப்பிடுவதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொள்வது நல்லது. அதற்காக சர்க்கரையே கூடாது என்று சொல்லவில்லை. வெல்லம், கருப்பட்டி இப்படி இரும்புச் சத்து மற்றும் கால்சியம் சத்துகள் நிறைந்த பொருட்களைச் சர்க்கரைக்குப் பதிலாகச் சேர்த்துக் கொள்வது நல்லது.

kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், kacli ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.



''உங்க மனைவியை நீங்க டிஸ்சார்ஜ் பண்ணி அழைச்சிகிட்டுப் போகலாம்; ஆனா, வீட்டு வேலை எதுவும் அவங்க செய்யக்கூடாது.''

''எப்பவுமே அவங்க வீட்டு வேலை எதுவும் செய்ய மாட்டாங்க டாக்டர்!''

- சீர்காழி வி.ரேவதி

''மாணவர்களே! நாளைக்கு நம்ம ஸ்கூலுக்கு இன்ஸ்பெக்டர் வர்றார்!''

''ஏன் சார்? ஸ்கூல்லே ஏதாவது திருட்டுப் போச்சா?''

- போளூர் ஆர்.பஞ்சவர்ணம்

“டாக்டர் பட்டத்துல ஆஸ்பிட்டல் கட்டறார்!”



''நம்ம புதுப் படத்துக்கு 'தி.நகர் ரங்கநாதன் தெரு'ன்னு பேர் வெக்கப் போறீங்களா, ஏன்?''

''அப்படியாவது படத்துக்குக் 'கூட்டம்' வராதான்னுதான்!''

- வெ.சீதாராமன்

''ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினீங்களே? 'ஞாபகம்' இருக்கா?''

''அதுக்குப் பின்னாடி, பல தடவை கடன் கேட்டும் இல்லேன்னு மறுத்துட்டீங்களே? அது உங்களுக்கு 'ஞாபகம்' இருக்கா?''

- அ.சுஹைல் ரஹ்மான்





''தலைவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தது தப்பாப்போச்சு.''

''ஏன்?''

''இப்பப் பாருங்க. கட்சியைக் கலைச்சிட்டு ஆஸ்பிட்டல் கட்ட ஆரம்பிச்சுட்டாரே.''

- ஆர்.பி.ஜெயச்சந்திரன்





பாலிடிக்ஸ் பஜார்

மலையிறங்குவாரா அம்மா?



செப்டம்பர் 18ம் தேதி முதல் 21ம் தேதி வரை மதுரை தமுக்கம் மைதானத்தில் கூட்டம் நடத்த அனுமதி வாங்கி வைத்திருக்கிறார்கள் அ.தி.மு.க. பிரமுகர்கள். ''ஆனால் எட்டாம் தேதி கருணாநிதியின் திருச்சி கூட்டத்துக்குப் பிறகு அங்கே கூடும் கூட்டம் மற்றும் பேசும் பேச்சு ஆகியவற்றை வைத்துத்தான் மதுரை கூட்டத்துக்கான தேதியை அம்மா குறிப்பார்'' என்கிறார்கள் மூத்த அ.தி.மு.க. பிரமுகர்கள். ஆனால் செங்கோட்டையன், பன்னீர் செல்வம் போன்ற மூத்த தலைவர்கள் தென் தமிழகம் முழுக்க கட்சிக்காரர்களை சந்தித்து மதுரை கூட்டம் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறும் வகையில் நடக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறார்கள்.

தி.மு.க., காங்கிரஸ் அணியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினரானாலும், தனது ஆதரவுத் தளம் சுருங்கி வருவதாக நினைக்கிறாராம் திருமாவளவன். இதற்குக் காரணம் இலங்கை விவகாரத்தில் துரோகம் செய்ததாக 'ஈழ ஆதரவாளர்களால் சொல்லப்படும்

அ.தி.மு.க

நல்லிணக்கம் படும்பாடு!

டாக்டர் ராமதாஸும் திருமாவளவனும் நெருக்கமாக இருப்பதால், வட தமிழகத்தில் வன்னியர் மற்றும் ஆதி திராவிடர்களிடையே நல்லிணக்கம் நிலவுகிறது. அதுபோல ஜெயலலிதா, டாக்டர் கிருஷ்ணசாமியுடன் நெருங்கிச் சென்றிருப்பதால் தென் தமிழ் நாட்டில் முக்குலத்தோருக்கும் தேவேந்திர குல வேளாளர்கள் இனத்துக்கும் லோக்கல் பகைமை நீங்கி நல்லிணக்கம் நிலவுகிறதாம். ''வரும் தேர்தலில் நாங்கள் அ.தி.மு.க. அணிக்கு ஒரு பலமான ஆதரவுத் தளமாகத் தென்





இதோ ஒரு புதுமுகம்!

சஸ்பெண்ட் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஐ.ஏ.எஸ். அதிகாரி உமா சங்கர் மீண்டும் பணியில் சேர்ந்துவிட்டாலும் அவருக்கு அரசியல் ஆசை துளிர்த்து விட்டதாம். வரும் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி சார்பில் நிற்க வாய்ப்புக் கிடைத்தால் அரசியல் கடலில் குதித்து விடுவாராம்.

அணியில் இருப்பதுதான்' என்று அவர் கருதுகிறாராம். எனவே, வரும் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. அணியில் இணைந்தால் என்ன என்று சிந்தனை ஏற்பட்டிருக்கிறது சிறுத்தைப் பிரமுகர்களுக்கு. இதன் தொடக்கமாகத்தான் சமீப காலங்களில் தலித்துகள் மீதான அடக்குமுறை, வன்முறை ஆகியவற்றைக் குறித்து திருமா அறிக்கைகள் விடுகிறாராம். டாக்டர் ராமதாஸ், திருமாவையும் கூட்டிக் கொண்டுதான் ஜெயலலிதாவிடம் போவார் என்று சொல்கிறார்கள்.

அணியில்-திருமா?



தமிழகத்தில் விளங்குவோம். ஆனால், இதை உடைக்க ஆளும் கட்சியும் அரசு இயந்திரமும் பல வழிகளில் முயற்சி செய்கின்றன. என்னதான் தந்திரம் செய்தாலும் முக்குலத்தோருடன் எங்களுக்குள்ள நல்லிணக்கத்தை யாரும் உடைக்க முடியாது'' என்கிறார் புதிய தமிழகம் பிரமுகர் ஒருவர்.

போட்டிக்கு முந்திக்கோ!

மற்ற கட்சிக்காரர்கள் தேர்தல் வேலையைத் தொடங்குவதற்கு யோசித்து வரும் வேளையில் நேற்று முளைத்த கட்சியான டாக்டர் பச்சமுத்துவின் (ஸாரி... பாரிவேந்தர்) இந்திய ஜனநாயகக் கட்சி, தேர்தல் வேலையைத் தொடங்கி விட்டது. ''46 தொகுதிகளில் எங்கள் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது'' என்கிறார் பச்சமுத்து. (மீண்டும் ஸாரி...) அந்தத் தொகுதிகளில் போட்டியிட மனுவும் பெறப்பட்டு நேர்காணலும் நடத்தி வருகிறது இந்திய ஜனநாயகக் கட்சி. தேர்தல் சமயத்தில் 'புதிய தலைமுறை' என்ற புதிய தொலைக்காட்சியையும் பிரசாரத்துக்கு உதவும் வகையில் கொண்டுவந்து விடுவாராம்.

-சஞ்சயன்



யாருக்காக





சென்னையில் கடந்த சில ஆண்டுகளாக மிகப்பெரிய அளவில் விளம்பரங்கள் அரசியல், சினிமா பிரபலங்களின் கையசைப்புகள், இசைக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் என்ற ஆரவாரங்களுடன் நிகழ்ந்து கொண்டிருக்கிறது மாரத்தான் ஓட்டங்கள். முழு மாரத்தான், அரை மாரத்தான் நகரின் பெயரில் ஒரு மினி மாரத்தான்.... எனப் பல ஓட்டங்கள் இதில் அடக்கம். சென்னைக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகமான இந்த ஓட்டங்கள் அதற்கு முன்பிருந்தே மும்பையிலும் தில்லியிலும் ஏகப் பிரபலம்.

1981ல் புற்றுநோய் பற்றிய விழிப்பு உணர்ச்சி ஏற்படுத்தவும் அதற்கான நிதி ஆதாரத்தைப் பெருக்கவும் கனடா நாட்டில் டெரி ஃபாக்ஸ் என்பவரால் துவக்கப்பட்டு மிகப்பெரிய வெற்றியை எட்டிய இந்தச் சமூக விழிப்பு உணர்வு ஓட்டம், இப்போது உலகின் பல நாடுகளில் சமூகப் பிரச்னை விழிப்பு உணர்வுக்காக நடத்தப்பட்டு பணம் சேர்க்கப்படுகிறது. ஆனால், இங்கே இது ஒரு பெரிய வியாபாரமாகிவிட்டது. பங்கேற்பவர்களுக்கு ஓட்டத்தின் நோக்கம் தெரிவதில்லை. ஸ்பான்ஸர்களின் விளம்பரம் ஓட்டத்தின் நோக்கத்தையும் அது மக்களிடம் ஏற்படுத்த வேண்டிய தாக்கத்தைவிட, அவர்களின் நிறுவனம் அல்லது விற்பனை செய்யும் சாதனங்களைப் பற்றிய தாக்கத்தைத்தான் அதிகம் ஏற்படுத்துகிறது. துபாயில் வாழும் புற்று நோயால் தாக்கப்பட்ட பதினேழு வயது மாணவன் ஆகாஷ் துபே, கடந்த ஆண்டு சென்னையில் டெரிஃபாக்ஸ் ஓட்டத்தை அறிமுகப்படுத்தினார். இதற்காகப் பல பள்ளிகளில் காலை நேரப் பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசினார். சில வாரங்களுக்கு முன் சென்னை IIT-யில் நிகழ்ந்த இரண்டாமாண்டு மாரத்தான் ஓட்டத்தில் கடந்த ஆண்டைவிட அதிகம்பேர் பங்கேற்றது மகிழ்ச்சியான விஷயம். ஆனால் அதில் பலரிடம் ஏன் ஓடினீர்கள்? என்ற கேள்விக்கு ''என் டிரையினர் இது ஒரு நல்ல பயிற்சிக்கான வாய்ப்பு போ என்று சொன்னார்'', ''என் ஃபிரண்ட்ஸ் கூப்பிட்டார்கள்'' போன்ற பதில்கள்தான் கிடைத்தன.

அதேபோல் சமீபத்தில் 80,000 பேருக்கு மேல் பங்குகொண்டதாக அறிவிக்கப்பட்ட சென்னை மாரத்தானில் பலருக்கு அது உதவப்போகும் நிறுவனம் பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. ''எங்கள் வங்கி இதை ஸ்பான்ஸர் செய்திருக்கிறது; பெரிய அதிகாரிகள் பங்கேற்கிறார்கள்; அவர்கள் கண்ணில் நான் பட வேண்டும்.'' ''சிவமணியின் டிரம்ஸை இலவசமாகக் கேட்கலாம்'' என்பது பலரின் பதில். பல கோடிகளில் இந்த நிகழ்ச்சிகளுக்கு விளம்பரம் செய்பவர்கள் கடந்த ஆண்டுகளில் நடந்த ஓட்டங்களினால் சேகரித்த பணத்தில் என்ன தொண்டு செய்தார்கள் என்பதைப் பற்றி ஒரு சின்ன விளம்பரம்கூடக் கொடுக்காதபோது பங்குகொள்பவர்களுக்குத் தெரியாமல் இருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை என்றார், ஐம்பது குழந்தைகளைக் கூட்டிவந்த ஓர் ஆசிரியை.





* டெரிஃபாக்ஸ்

இந்த ஓட்டம்?

ஓடியவர்கள் ஓடும்போதே குடித்து விட்டுத் தூக்கிப்போட்ட பிளாஸ்டிக் பாட்டில்களைப் பொறுக்க ஏழைக் குழந் தைகள் ஓடி வந்து, அதைக் கோணிப்பைகளில் சேகரித்த காட்சி மனத்தை உறுத்தியது.

''அரசியல்வாதிகளின் ஆசியோடு சிலர் தங்களை முன்நிறுத்திக் கொள்ளவும் ஸ்பான் ஸர்கள் அவர்கள் உதவியோடு தங்களது தேவைகளை எளிதாக நிறைவேற்றிக் கொள் ளவும் இந்த ஓட்டங்கள் ஒரு எளிதான வழி யாகிவிட்டது'' என்கிறார் ஒரு மூத்த பத்திரி கையாளர். ''கார்ப்பரேட்கள் அவர்களது சமூகக் கடமையாகச் செய்த பணிகளை வெளியிடவேண்டியது (Corporate Social Responsblity) இப்போது கட்டாயமாக்கப் பட்டிருக்கிறது. அதனால் சில நிறுவனங்கள் அந்தக் கணக்கில் புத்திசாலித்தனமாக இந்த விளம்பரங்களைச் செய்கிறார்கள். இது தவிர்க்க முடியாதது'' என்கிறார் பங்குபெற்ற ஒரு நிறுவனத்தின் உயர் அதிகாரி.

1981-இல் கனடாவில் டெரிஃபாக்ஸ் ஓட் டத்தைத் துவக்கியபோது தேடி வந்த ஸ்பான் ஸர்களை நிராகரித்தார். காரணம் ''விளம்பரங் கள் ஓட்டத்தின் நோக்கத்தைத் தகர்த்து விடும்.'' தொடர்ந்து அந்த ஓட்டத்தை உலகமெங்கும் நடத்திப் பல கோடிகளை நிதியாகச் சேர்க்கும் அவரது அறக்கட்டளை இன்றும் கார்ப்பரேட் விளம்பரங்களுக்காக ஸ்பான்ஸர்களை ஏற்பதில்லை.

-ரமணன்



இசை

புதிர் போட்டே
திரிகிறது
எப்போதும்
காற்றில் அலையும்
இசை

- வீ.சிவசங்கர்



பிரிவுத் துயரம்

ஆயிரக்கணக்கான தினார்களால்
ஈடுசெய்ய முடியாத
தொலைதேசக் கணவனின் பிரிவை
ஈடுசெய்கிறது
வாரக்கடைசியின்
தொலைபேசி உரையாடல்



தலைமுறை மாற்றம்


நான் பால்ய வயதில் விளையாடிய
ஆடுபுலி ஆட்டமும்
கில்லித்தாண்டும்
பச்சைக் குதிரையும் தந்த
தடையற்ற சந்தோஷத்தை
எப்படிப் புரியவைப்பேன்
மடிக்கணினியில்
சதுரங்கம் ஆடி மகிழும்
என் மகனுக்கு

- பா. சேதுமாதவன்



வாசகர்களே! உங்க க்யூட கவிதைகளைச் சீக்கிரமா 'கவிதை கஃபே'ன்னு





பயம்

நீர் சொட்டும் ஈரக்கூந்தலோடு
நீ சுற்றி வரும் துளசிமாடத்தைக்
கடந்துபோன கணத்தில்தான்
எனக்குள் தொற்றிக்கொண்டது
கடவுள் பயம்

- திலீபன்



தந்துவிட்டேன் என்னை

வாழ்வு
எதையோ எனக்குத் தருவது போல்
பாவனை காட்டி
எல்லாவற்றையும்
எடுத்துக்கொண்டே இருக்கிறது

பின்னொரு நாளில்
எதிர்பாராத ஒரு சந்தர்ப்பத்தில்
மகத்தான முறையில்
ஏதேனும் ஒன்றை
அள்ளி வழங்கிவிடுமென்ற
நம்பிக்கையில்

எல்லாவற்றையும்
தந்துகொண்டே இருக்கிறேன்
நானும்
மிச்சம் எதுவும் வைக்காமல்

- அ.கார்த்திகேயன்

பூமிப் பெருமிதம்

வாசல் பெருக்கி,
தெளித்துக் கோலமிட்டுச்
செல்கிறாய்...
ஏதோ மொத்த உலகையும்
அலங்கரித்துக்
கொண்டதைப் போல்
பெருமிதம் கொள்கிறது
பூமி...!

- சிவபாரதி

றிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.









ஸ்டார் மேரேஜ்

















உடலை ஸ்லிம்மாக வைத்துக்கொள்ள வேண்டும் அப்போதுதான் தோற்றம் பார்வைக்கு வசீகரமாக இருக்கும் என்பது இளம்பெண்களின் தாட். ஸ்லிம்மாக இருப்பது தோற்ற வசீகரத்துக்கு ஓ.கே. பட் ஆரோக்கியத்துக்கு உகந்ததா...? என்று கேள்வி கேட்பவர்களும் இருக்கிறார்கள். ஸ்லிம்மாக அதேநேரத்தில் ஆரோக்கியத்தோடும் இருப்பது எப்படி...? ஆலோசனை தருகிறார் ஸ்லிம் ஸ்பெஷலிஸ்ட், வயது நிர்வாகம் லைஃப் ஸ்டைல் மேனேஜ்மென்ட் கன்ஸல்டன்ட் டாக்டர் கௌசல்யா நாதன்.

''பெண்களின் உடல் அமைப்பை அல்லது வடிவத்தை hour glass வடிவம்; ஆப்பிள் பழத்தை ஒத்த வடிவம்; பியர்ஸ் பழத்தின் வடிவம் என்று மூன்றாகப் பிரிக்கலாம். உலகத்தில் உள்ள அனைத்துப் பெண்களும் விரும்புவது hour glass வடிவத்தைத்தான். ஆனால், உலக அளவில் நான்கு சதவிகிதப் பெண்களால் மட்டுமே அந்த வடிவத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடிகிறது.

குழந்தைப் பருவத்திலிருந்தே, குழந்தைகள் வயதுக்கேற்ற சரியான எடையோடுதான் இருக்கிறார்களா என்பதைப் பெற்றோர்கள் கண்காணிக்க வேண்டும். பள்ளிச் சீருடை புதிதாக வாங்கிய அல்லது தைத்த ஐந்தே மாதங்களில் டைட்டாகிப் போவது, மற்றும் துணிக் கடைகளில் அவரவர்கள் வயதுக்குத் தகுந்தாற்போல் உள்ள உடைகள் குழந்தைகளுக்குச் சரியாகப் பொருந்தாமல் இருப்பது... இவை குழந்தைகளின் எடை அதிகரித்து வருவதற்கான எச்சரிக்கையாகப் பெற்றோர்கள் உணர வேண்டும்.'' என்கிறார் கௌசல்யா நாதன்.

''நம் வயதுக்கும், உயரத்துக்கும் ஏற்ற உடல் எடை இருந்தாலே போதும்,

ஸ்லிம் தேவதை ஆகணுமா?





கௌசல்யா

நாம் அழகானவர்தான். ஸ்லிம்மானவர்தான். அதை விட்டுவிட்டு இந்த நடிகையைப் போல நான் size zero தோற்றம் அளிக்க வேண்டும், பார்ட்டிகளில் கலந்து கொள்வதற்காக, பார்ட்டி ட்ரெஸ்களை அணிந்து கொள்வதற்காக இளைக்க வேண்டும், நல்ல அழகான கணவன் கிடைக்க வேண்டும் என்பதற்காக எப்பாடு பட்டாவது இளைக்க வேண்டும் என்ற ஒரு தவறான மனப்போக்குகள் தற்கால பெண்களிடையே இருப்பது வருத்தமளிக்கும் விஷயம். விளம்பரங்களில் வருவதைப் பார்த்துவிட்டு, பத்தே நாட்களில் பத்துக் கிலோ எடையைக் குறைத்திடலாம், மாத்திரைகளைச் சாப்பிட்டால், சூப்பர் ஸ்லிம்மாகிவிடலாம் என்று நினைப்பது தவறு.

எந்த உணவையுமே சரியாகச் சாப்பிடாமல், ஒரேயடியாக இளைத்து, முகக் களையையும், இளமைப் பொலிவையும் இழப்பது உடல் ஆரோக்கியத்தைப் பெரிதும் குலைத்துவிடும். உணவு முறையில் சரியான மாற்றம், போதுமான உடற்பயிற்சி, மனச் சந்தோஷம், நிம்மதியான உறக்கம், hormonal imbalance இல்லா மல் பார்த்துக் கொள்வது என இவற்றை எல்லாம் பழக்கிக் கொண்டாலே போதும், எல்லோருமே ஸ்லிம் தேவதைகள்தான்'' என்கிறார் டாக்டர் கௌசல்யா நாதன்.

- நளினி சம்பத்குமார்

சீதோபந்து, முன்தின இரவில் தம் கனவில் இறைவன் வந்ததாகவும் தம் மகள் ருக்மாபாயை விடோபாவுக்கு மணம் முடித்து வைக்கச் சொன்னதாகவும் அவர் கூறியவுடன் விடோபா ஒரு கணம் திகைத்தார்.

பின், 'தம் மகளை என்னிடம் தள்ளிவிட என்ன ஒரு சாமர்த்தியமாக இவர் பொய் கூறு கிறார்!' என்பதாக யூகித்த விடோபாவுக்குச் சிரிப்பு வந்தது. அந்தச் சிரிப்பை அடக்கிக் கொண்டு ''ஐயா என் பெற்றோர் வற்புறுத்தியும் திருமணத்துக்கு மறுத்துவிட்டு நான் தலயாத்திரை வந்திருக்கிறேன். எனவே எனக்கு விடை கொடுங்கள்'' என்றார்.

''தலயாத்திரைக்கு வந்துவிட்டு கடவுள் சொல்வதை நிறைவேற்றாமல் போக லாமா?'' என்றார் சீதோபந்து. சிரிப்புக் குறைந்து சினம் தோன்றியது விடோ பாவுக்கு. ''கடவுள் என் கனவில் வந்து அதைக் கூறட்டும். பிறகு பார்க்கலாம்'' என்றார்.

சீதோபந்து விடுவதாக இல்லை. ''இன்று ஒருநாள் மட்டும் என் வீட்டி லேயே தங்கிச் செல்லுங்கள். உறுதியாகக் கடவுள் உங்கள் கனவிலும் இன்றிரவு வருவார்'' என்றார்.

வேண்டாவெறுப்புடனும் சீதோபந்து கூறியது பொய் என்பதை நிரூபித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடனும் அன்றி ரவும் அவர்கள் வீட்டிலேயே தங்கினார் விடோபா.

தம் தந்தை விடோபாவிடம் பேசிய தைக் கேட்டுக் கொண்டிருந்தாள் ருக்மா பாய். அவளது இளம் மனம் விடோ பாவின்பால் ஈர்க்கப்பட்டது. 'நான் விடோ பாவை மணக்க வேண்டும் என்று இறை வனே கூறுகிறார். அதற்கு என் தந்தையும் சம்மதிக்கிறார். இந்த அற்புதத்துக்காகத்தான் பல இடங்களுக்குப் பக்திப் பயணம் செல்லும் விடோபா, தம் வீட்டில் தங்கும் படி இறைவன் விதித்திருக்கிறார்.' இப்படிச் சிந்தித்த ருக்மாபாய் ஒரு முடிவுக்கு வந்தாள். 'விடோபாதான் என் கணவர்.'

அன்றிரவு சீதோபந்து வீட்டில் தங்கிய விடோபாவுக்குக் கனவும் வந்தது! அதில் இறைவனும் வந்தார்! சீதோபந்துவின் மகளைத் திருமணம் செய்துகொள் என்று கூறவும் செய்தார்! அதிர்ந்துவிட்டார் விடோபா. ஒரு வேளை இது உண்மையான கனவு இல்



லையோ? சீதோபந்து கூறியதையே எண்ணி உறங்கியதால் அந்த எண்ணமே கனவாக வெளிப்பட்டதோ? விடோபாவுக்குக் குழப்பம் உண்டானது. பொழுது முழுமையாகப் புலராத அந்த நேரத்தில் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அங்கிருந்து கிளம்பினார் விடோபா. கிளம்பிய சற்று நேரத்திலேயே தம் பின்னால் யாரோ வருவது தெரிந்தது. திரும்பினார். ருக்மாபாய்!

அதிர்ச்சியுடன் ருக்மாபாயைப் பார்த்த விடோபாவிடம், "இனி நீங்கள்தான் என் கணவர்" என்றாள் அழுத்தமாக.


இல்லற வாழ்வில் இன்னமும் ஈடுபாடு கொள்ளாத விடோபா, "என்ன ஒரு துணிச்சல்! முன்பின் தெரியாத ஒருவனுடன் கிளம்பி வந்திருக்கிறாயே. நீ ஒரு குடும்பப் பெண்ணா?" என்று கடுமையாகக் கேட்க ருக்மாபாயின் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

அப்போது வானத்திலிருந்து ஓர் குரல் கேட்டது. 'ருக்மாபாய் ஓர் உத்தமி. அவளைத் திருமணம் செய்துகொள்.'

இதற்குள் மகளைத் தேடி ஓடிவந்த சீதோ

ரத்தினங்கள்!

பாகம்–2



3

அபங்க-அமுதம்

சரீர நிர்மள வாஸனா டவாள
கா ரே தூ பரள பக்திவீண
ஸர்வ ப்ரஹ்ம ஹரி நேணஸி ஸோவளே
ஏகாசி கோபாளே ஜண வன
ஆப ப்ருத்வீ தேஜ வாயோ வ்யோம
பஞ்சபூதீ ஸம வர்ததஸே
ஸோபான ம்ஹணே குருசா உபதேச சுத்த
தரீச வாஸனா ப்ரபுத்த தயா நரா

- ஸ்ரீ சோபானதேவர்

''மனிதா, உன் உடல் களங்கமின்றி இருந்தாலும் உன் எண்ணங்கள் கெட்டவையாகவே உள்ளன. எனவே வீணாகப் பிதற்றித் திரியாதே. எங்கும் நிறைந்துள்ள, ஐம்பூதங்களிலும் பரவியுள்ள ஹரி உன் பலவீனங்களை அறியாமல் இருப்பானா? எனவே குரு உபதேசம் பெற்று பண்பட்ட எண்ணங்களை அடைவாயாக.''

பந்துவும் இந்த அசரீரியைக் கேட்டுப் பிரமித்தார்.

இந்த முறை விடோபா உணர்ந்து கொண்டார். ருக்மாபாயைத் திருமணம் செய்து கொண்டார். எனினும் மீதமுள்ள தலயாத்திரையை முடித்துக் கொண்டு மீண்டும் மாமனார் வீட்டுக்கு வருவதாகவும், அப்போது மனைவியையும் அழைத்துக் கொள்வதாகவும் கூறினார். அனைவரும் ஒப்புக் கொள்ள பின் ருக்மாபாயுடன் தம் ஊர் வந்து சேர்ந்தார்.

தலயாத்திரைக்குச் சென்ற மகன் - திருமணம் வேண்டாம் என்று கூறிக் கொண்டிருந்தவன் - மனைவியோடு திரும்பி வருவான் என்பதை விடோபாவின் பெற்றோர் எதிர்பார்க்கவில்லை. என்றாலும் நல்ல குணம் படைத்த ஒரு மருமகள் கிடைத்ததில் அவர்கள் விரைவிலேயே திருப்தி அடைந்தனர். அந்தத் திருப்தியிலேயே அடுத்தடுத்து இறந்தனர்.

திருமணம் முடிந்தாலும் விடோபாவால் இல்லற வாழ்க்கையில் முழுமையாக ஒன்றிப்போக முடியவில்லை. ''நான் காசி யாத்திரைக்குச் சென்று வருகிறேன். அது வரை நீ உன் பிறந்த வீட்டில் இரு'' என்றார்.

கண்ணீர் பெருக, மனமே இல்லாமல் பிறந்தகத்துக்குச் சென்றார் ருக்மாபாய். 'காசி யாத்திரையின்போது என் கணவர் துறவறம் மேற்கொள்ளாமல் இருக்க வேண்டுமே' என்ற பயம் ருக்மாபாயை ஆட்டிப் படைத்தது. அது ஒன்றும் ஆதாரம் இல்லாத பயம் அல்ல. அதுதான் நடந்தது!

காசிக்குச் சென்ற விடோபா அங்கிருந்த ஸ்ரீபாதசுவாமிகள் என்பவரைக் கண்டார். அவரது உபதேசங்கள் விடோபாவை மயக்கின. ''சுவாமி எனக்குத் தீட்சை கொடுங்கள் நான் உங்களுடனேயே தங்கிவிடுகிறேன்'' என்றார்.

ஞானதேவன்தான் பின்னாளில் ஞானேஸ்வரனாக மலர்ந்தார்.



விடோபா ஏற்கெனவே திருமணமானவர் என்பதை அறியாத அந்தச் சுவாமிகள் 'உனக்குத் திருமணம் செய்து கொள்வதில் நாட்டம் இல்லையா?' என்று கேட்டார். ''நான் இனி திருமணம் செய்துகொள்வதாக இல்லை.'' வார்த்தைகளின்படி உண்மை, அதே சமயம் உண்மையை வெளிப்படுத்தவில்லை என்கிற அளவில் பொய் - இப்படிச் சாமர்த்தியமாகப் பதிலளித்தார் விடோபா.

பின்னர் ''உன் தாய், தந்தையர் இதற்கு அனுமதி அளித்தனரா?'' என்று

கேட்டார். 'என் பெற்றோர் இறந்து விட்டனர்'என்றார். ஸ்ரீபாதசுவாமிகளும் விடோபாவுக்கு ஞான உபதேசம் புரிந்தார்.

கொஞ்சம் தாமதமாகத்தான் என்றாலும் செய்தி ருக்மாபாயை எட்டியது. கதறினாள். மூர்ச்சையானாள். பிறகு ஓரளவு மனம் தேறி கௌரி விரதத்தில் தம் மனத்தைச் செலுத்தினாள். அவ்வப்போது அமைதி, மற்றபடி அழுகை என்று அவள் வாழ்க்கை கழியத் தொடங்கியபோது, மீண்டும் ஒரு திருப்புமுனை அவளுக்குக் காத்திருந்தது.

ஸ்ரீபாதசுவாமிகள் தேசயாத்திரைக்குப் புறப்பட்டார். அவரது யாத்திரையில் அலங்காவதி நகரமும் இடம்பெற்றதாலோ என்னவோ விடோபா காசியிலேயே தங்கி விட்டார். மாமனாரைச் சந்திக்க நேர்ந்து விட்டால்? ஒருவேளை ருக்மாபாயும் அங்கு இருந்துவிட்டால்?

விடோபா அச்சப்பட்டபடியே ஸ்ரீபாத சுவாமிகள் சிதோபந்துவின் வீடு இருந்த தெரு வழியாகச் சென்றார். சுவாமிகள் வருவதைக் கண்ட ருக்மாபாய் அவர் பாதம் பணிந்து எழுந்தாள். ஒளிவிடும் கண்களைக் கொண்ட லட்சணமான இந்தச் சுமங்கலிப் பெண்ணிடம் ஏதோ ஒரு துக்கம் ஒளிந்திருக்கிறது என்பது மட்டும் சுவாமிகளுக்குப் புரிந்தது. ''பெண்ணே, நீ நல்ல குணம் படைத்த குழந்தைகளுக்குத் தாய் ஆவாய்'' என்று ஆசீர்வதித்தார்.

ருக்மாபாயிடமிருந்து ஒரு விம்மல் வெடித்தது. ''என் கணவர்தான் என்னைப் பிரிந்து தேசாடனம் சென்று வருடங்கள் ஆகிறதே. எனக்கு எப்படிக் குழந்தை பாக்கியம் கிட்டும்?'' என்றாள். பின்னர் தொடர்ந்து தம் கணவன் விடோபாவைப் பற்றி அவள் விவரிக்க, சுவாமிகள் அதிர்ச்சியடைந்தார்.

'அடடா தவறிழைத்து விட்டோமே! விடோபாவின் பின்னணியைத் தாம் மேலும் தெளிவாக அறிந்திருக்க வேண்டாமா? சம்சாரி ஒருவன் குழந்தைப் பிறப்பதற்கு முன் துறவறத்தை நாடுவதை, சாஸ்திரங்கள் ஏற்றுக்கொள்வதில்லையே! சரி நாம் செய்த



தவற்றை நாமேதான் சரிசெய்யவேண்டும்.' இப்படித் தீர்மானித்த சுவாமிகள் ருக்மாபாயையும் அவளது தந்தையையும் அழைத்துக்கொண்டு காசியை அடைந்தார்.

இதற்குள் குருவை வரவேற்க காசியில் தயாராக இருந்த விடோபா, தம் மனைவியுடன் அவர் வருவதைக் கண்டு திகைத்தார். தலை குனிந்தார்.

''சீடனே, நீ சொன்ன பொய்களை மன்னித்தேன். கடவுளே கனவில் வந்து இவளை மணந்து கொள்ளவேண்டும் என்று உனக்குக் கூறியிருக்கிறார். தவிர, நான் இவளுக்கு அளித்த வரமும் பொய்க்கக் கூடாது. நீ இவளுடன் இல்லறம் நடத்து'' என்று பணித்தார். விடோபா ஏற்றுக்கொண்டார். ''இதென்ன விபரீதம், துறவியான ஒருவன் மறுபடி இல்லறத்தில் ஈடுபடுவதா?'' என்று ஊர் திரும்பிய விடோபாவை மக்கள் ஏசினார்கள். ஊரே அவர்களை ஒதுக்கி வைத்தது. அருகிலிருந்த காட்டில் குடிசை ஒன்றை உருவாக்கிக் குடிபுகுந்தனர் விடோபாவும் ருக்மாபாயும். இறைவனைத் தியானித்து இல்லறமும் நடத்தினார்கள். அடுத்தடுத்து பிறந்த நால்வரும் வெறும் குழந்தைகள் அல்ல; ரத்தினங்கள். நிவர்த்தி தேவன், ஞானதேவன், சோபானதேவன், முக்தாபாய்.

ஞானதேவன்தான் பின்னாளில் ஞானேஸ்வரராக மலர்ந்தார் என்பதை யூகித்திருப்பீர்களே!

மறந்தது ஏன்?

ஒவ்வொரு இரவிலும் கண்ணைப் பறிக்கும் நியான் விளக்குகளுடனும் நகரும் விளம்பரங்களுடனும் ஒளி வெள்ளத்தில் மிதக்கும் இடம் நியூயார்க் நகரில் உள்ள டைம்ஸ் சதுக்கம். ஒரு பெரிய திருவிழாவிலிருக்கும் உணர்வை இது தரும். இதைப் பார்க்கவே நியூயார்க் வரும் டூரிஸ்டுகள் இரவு வரை காத்திருப்பார்கள். அங்குள்ள பல மாடிக் கட்டடங்களிலிருக்கும் நிறுவனத்தினர் தங்கள் விளம்பரத்துக்கு மட்டுமில்லாமல் நகருக்கு அழகு சேர்க்கும் ஒரு விஷயமாக இதைச் செய்கிறார்கள். அதனால் விளம்பரங்களிலும் விளக்குகளிலும் ஒழுங்கைக் கடைபிடிக்க ஒரு குழுவை நிறுவியிருக்கிறார்கள். இதன் வழிகாட்டுதலின் பேரில் விளக்குகளின் வண்ணங்கள் அவ்வப்போது நிகழும் முக்கிய நிகழ்வுகளுக்கு ஏற்ற தீம்களில் மாற்றப்படுகின்றன. அமெரிக்கச் சுதந்திர தினம், புதிய அதிபர் பதவி ஏற்பு போன்ற தினங்களில் அத்தனை விளக்குகளும் அதற்கேற்ற நிறத்தில் ஒளிரும்!


கடந்த ஆகஸ்ட் 26. உலகம் அன்னை தெரஸாவின் 100வது ஆண்டு பிறந்த நாளைக் கொண்டாடியபோது அவரது மிஷினரி ஆப் சாரிட்டிஸின் சீருடையான தலையை மூடி அணியும் புடைவையின் வண்ணமான வெள்ளையும் அதன் தலைப்பின் கரைகளிலிருக்கும் நீல இரட்டை வரிகளின் வண்ணமும் தேர்ந்தெடுக்கப்பட்டு ''கிரேட் ஒயிட் வே'' என்ற தீமில் சதுக்கத்தின் அத்தனை பெரிய கட்டடங்களும் வெள்ளையும் நீலமுமாகப் பளிச்சிட்டன. பிறந்தது அல்பேனியாவாக இருந்தாலும், வாழ்க்கையை இந்தியாவுக்கு அர்ப்பணித்த இந்தப் பாரத ரத்னத்திற்குக் கிடைத்த இந்தக் கௌரவம், இதுவரை எந்தத் தனி மனிதரின் பிறந்த நாளுக்கும் அளிக்கப்படாதது.

சில ஆண்டுகள் முன் வரை உலகின் மிக உயர்ந்த கட்டடமாகயிருந்த (இப்போது இதற்கு அண்ணன்மார்கள் வந்துவிட்டார்கள்) எம்பயர் ஸ்டேட் கட்டடம் இதில் பங்குகொள்ளவில்லை. தனி மனிதர்களின் பிறந்த நாட்களுக்கு வண்ண விளக்குகளால் அலங்கரிப்பது எங்கள் நிறுவனத்தின் கொள்கைகளுக்கு முரணானது என அறிவித்த அதன் நிர்வாகத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தன சில கத்தோலிக்க அமைப்புகள்.

அன்னை தெரஸா ஒருமுறை நன்கொடை கேட்டு ஒரு செல்வந்தரை அணுகியபோது அவர் மறுத்துவிட்டார். உடன் வந்தவர்கள் ஏமாற்றத்தில் வருந்திய போது ''நாம் விரும்புவதைச் செய்ய மற்றவர்களைக் கட்டாயப்படுத்துவது தவறு. அவர்கள் நம்மை விரும்பும்படி நமது செயல்கள் இருக்கவேண்டும்'' என்று சொன்னார்.

அந்த வாசகங்களை இவர்கள் ஏன் மறந்து போனார்கள்?

- ரமணன்



மை பைக்!

அழகான

நான் ஃபெல் நிறுவனத்தில் பணி புரிந்தபோது, ஒரு செக்‌ஷனிலிருந்து இன்னொரு செக்‌ஷனுக்கு மாறி சில மாதங்கள் ஆகியிருக்கும். அப்போது ஸ்கூட்டர் கற்றுக் கொள்ளும் முன்பே ஸ்கூட்டர் வாங்கினேன். எங்க வீட்டுக்கு ரெண்டு தெரு தள்ளி, எங்க செக்‌ஷன் ஊழியர் ஒருவர் வசித்து வந்தார். அவர் நிறுவனத்துக்குத் தினமும் ஸ்கூட்டரில் வந்ததால், ஒரு நாள் அவரிடம், எனக்கு ரெண்டு, மூணு நாட்களுக்கு ஸ்கூட்டர் கற்றுத் தர முடியுமா எனக் கேட்டேன். அதற்கு அவர், ''கண்டவனுக் கெல்லாம் நான் ஸ்கூட்டர் கற்றுத் தருவதில்லை'' என மூஞ்சியில் அடித்தாற்போல் கூறினார். அவரை அத்துடன் விட்டுவிட்டு, வேறு ஒருவர் மூலம் ஸ்கூட்டர் கற்றுக் கொண்டேன். சில மாதங்கள் கழிந்திருக்கும். யார் என்னை உதாசீனப்படுத்தினாரோ அவருடைய பெண்ணை ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தனர். அவருக்கு அவசரமாக இரத்தம் தேவைப்பட்டது. அது என் இரத்தத்துடன் ஒத்துப்போனதால் உடனே போய் ரத்தம் கொடுத்தேன். அப்போது என்னைப் பார்த்த அவர் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

- ஃபெல் நேசன்,
பெங்களூரு

என்னோட பைக் (சைக்கிள்) என் அம்மா அப்பா எனக்கு கொடுத்த கிஃப்ட். நான் டென்த்ல 483 எடுத்ததுக்கு வாங்கிக் கொடுத்தாங்க. தினமும் ஸ்கூலுக்கு சைக்கிளில்தான் போவேன். ரொம்ப அழகா குதிரை மாதிரி இருக்கும். சாண்டல் கலர். இது வாங்கறதுக்கு முன்னாடி அக்காவோட பழைய சைக்கிளைதான் ஓட்டினேன். இப்போ என் சைக்கிள். இது என்னோட ஃப்ரெண்ட் மாதிரி. தினமும் பாலம் வழியா சைக்கிள்ல போகும் போது வானத்துல பறக்கிற மாதிரி இருக்கும். ரொம்ப சந்தோஷமா இருக்கும். என்ன கவலை இருந்தாலும் சைக்கிள்ல போகும்போது எல்லாம் மறந்திடும். ஒரே ஒரு கவலை அடுத்த வருஷம் +2 முடிச்சபின் ஸ்கூலுக்கு சைக்கிள்ல போக முடியாதுன்னுதான்.

- க.அனுஷா,
தூத்துக்குடி

பிரசுரமாகும் ஒவ்வொரு அனுபவத்துக்கும் ரூ.50 சன்மானம்

டி.வி.எஸ். 50-யை அவ்வப்போது தெருவுக்குள்ளேயே ஓட்டப் பழகிக் கொண்டேன் ஒரு வழியா! டி.வி.எஸ். ஸ்கூட்டியை வாங்கிக் கொடுக்கச் சொல்லி அப்பாவிடம் கேட்டேன். லைசென்சுக்குப் பழகு



சாண்டல் கலர் குதிரை!

என்றார். சரி அப்பா சொல்லியாச்சு என்று அன்று அவர் வண்டியை அவர் சொல்லிக் கொடுத்த மாதிரியே ஸ்டார்ட் செய்து கொண்டு ஏறி உட்கார்ந்து ஸ்பீடு எடுக்க நான்கு வீடுகள் தாண்டியிருப்பேன்... அப்ப தான் வீட்டிலிருக்கும் கமலாமாமி சாப்பிட்ட இலையை எடுத்துக் கொண்டு தெருவில் இறங்க, நான் வண்டியுடன் டான்ஸ் ஆட, வண்டி லைட் கம்பத்தில் மோதிக் கீழே விழுந்ததும் தெரியல. நான் சேஃபா மாமி இடுப்பில் தொற்றி யிருந்ததும் தெரியல. மாமி இலையைக் கீழே போட்டு விட்டு எப்படி என்னை இறுக்கி இடுப்பில் வைத் திருந்தார் என்பதும் தெரியலை. அதோடு என் கனவு கலைந்தது! நீ யாருடனாவது சைக்கிளில் டபுள்ஸ் போகத் தான் லாயக்கு. எல்லோரும் கமலாமாமி மாதிரி பிடிச்சுக்க மாட்டாங்க. உதறிவிட்டா கை, கால் முறிஞ்சு, முகர பேந்துதான் நிப்பே. கம்முன்னு கிட என்று ஒரு வழியா என் அப்பா அந்த ஆசையை ஊத்தி மூடிட்டார்.

- ஆர்.பிரேமா,
பெங்களூரு

40 ஆண்டுகளுக்கு முன்னர் சைக்கிள்தான் இளைஞர்கள், மாணவர்களின் பைக் என்றால் அது மிகையல்ல. என் நண்பன் அவனுடைய சைக்கிளைக் கொண்டு ஒரே நாளில் எனக்கு ஓட்ட கற்றுக் கொடுத்தான். அந்த நாள் மட்டும் இன்றும் நினைவில் உள்ளது. 2.8.69. அதற்கப்புறம் அடுத்த வாகனம் பஜாஜ் எம்-80தான், நான் ஓட்டக் கற்றது. அதுவும் ஒரே நாளில் (மார்ச் மாதம் 1993ல்) என் சகலையின் துணையுடன் அதையும் ஓட்டக் கற்றேன். நான் தனியாக அதை ஓட்டி வரும்போது நண்பர் ஒருவர் என் மாமனாரிடம் உன் மாப்பிள்ளை ஒரே நாளில் கற்றுக் கொண்டுவிட்டாரே என சிலாகிக்க மாமனார் புன்முறுவல் பூத்தார். அதை நானும் பார்த்தேன். அடுத்த இரு நாளிலேயே அவர் மரணத்தைத் தழுவினார். இன்றும் அவரின் அந்தப் புன்முறுவல் என் நினைவில் உள்ளது. என் பஜாஜ் எம்.80யை ஓட்டும்போதெல்லாம் அவர் ஞாபகம் வருகிறது.

- ஏ.சுகுமார், வேலூர்




உங்க பைக் அனுபவத்தை 'மை பைக்' என்று குறிப்பிட்டு எழுதி அனுப்புங்க. kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். செல்ஃபோனில் KACON என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் அனுபவம், பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான சிறுகதைகள்

5

திரைகடல் ஓடியும்...

வாழ்வதற்குத்தான் வழியில்லை. சாவதற்கு ஆயிரம் வழிகள். தேர்ந்தெடுப்பதற்கே குழம்பினான் மாதவன். பூச்சிக்கொல்லிகள், நீளமான கத்தி, ஜெர்மானியக் கூர்மை பிளேடுகள், தூக்க மாத்திரைகள், கரப்பான் பூச்சி ஸ்ப்ரே, எலி மருந்து, கழிப்பறை அமிலம் - சூப்பர் மார்க்கெட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஏதாவது ஒரு வழி தற்கொலைக்கு உதவியாக இருந்தது. எது சுலபமாக இருக்கும்? எதில் உயிர் உடனே போகும்? அனுபவஸ்தர்கள் யாரும் சொல்லிக் கொடுப்பார்களா? அனுபவஸ்தர்கள் யாரும் இப்போது உயிருடன் இருக்கமாட்டார்கள் - சிரிப்பு வந்தது அசந்தர்ப்பமாக.



விலையைப் பார்த்து எடுத்தான் மாதவன். முடிவை அப்புறம் செய்துகொள்ளலாம். இருக்கும் காசை இதற்கென்று ஒதுக்கியாகி விட்டது. கடைசி நாணயம் வரை எடுத்துக் கொண்டு போகப்போகிறேன்.

தற்கொலை, கோழைத்தனம் இல்லையா? நாற்காலியில் வசதியாக உட்கார்ந்து கொண்டு அட்வைஸ் கொடுப்பவர்களுக்கு முடிவெடுக்கும் வலியில் உள்ள வீரம் தெரியாது. சுலபமாகச் சொல்லிவிடலாம். வேறு வழியில்லாதவனின் வீரம்தான் தற்கொலை.

மார்க்கெட்டில் பகல்வேளையிலும் நூற்றுக்கணக்கான குழல் விளக்குகள் வியர்த்தமாக வெளிச்சத்தை ஊற்றிக் கொண்டிருந்தன. வெளியே சாதாரணமாகத் தெரியும் வொயிட்மெட்டல் பாத்திரங்கள் அந்த வெளிச்சத்தில் வெள்ளி போல பளபளத்துக் கொண்டிருந்தன.

பன்னிரெண்டு வருடங்கள் துபாயில் வாழ்க்கை. வெளிப்பார்வைக்குத் தெரியும் பளபளப்பின் சாயங்கள் உதிர்ந்ததும் பன்னிரெண்டு வருடங்கள். வந்தவுடனேயே முகத்தில் அறைந்த உண்மை.

''மாமா நான் எங்கே தங்கணும்?''

''என்னை மாமான்னு கூப்பிடாதே. இங்கே நான் உனக்கு அரபாப். ஊர்க்கதையை ஊரோட கழட்டி வை'' அம்மாவிடம் அக்கா அக்கா என்று பழகிய ஆளா இவர்?

அதிகாலை எழுந்து கழனிக்குப் போய் பம்புசெட்டை ஓடவிட்டு மடைமாற்றி நாற்றுப் பிடுங்க ஆட்களை அனுப்பிவிட்டு, பதினோரு மணிக்கு முதல் காஃபித் தண்ணியைக் குடித்துப் பழகிய உடம்புதான்!

ஆனால், அதே அதிகாலை எழுந்து சைக்கிளை ஓட்டிக் கொண்டு வீடு வீடாகத் தண்ணீர் பாட்டில்களையும் மளிகைச் சாமான்களையும் சப்ளை செய்யும் வேலை ஒத்துக் கொள்ளவில்லை. ஊரில் பார்த்த அதே சூரியன் இங்கே கோபமுகம் காட்டிக் கொண்டிருக்கிறான். காற்று இல்லாத ஈரப் பதம். சைக்கிளை மேம்பாலத்தில் மிதித்துக் கீழே இறங்குவதற்குள் வியர்வை கண்களை மூடும். கடையில் ஏசியின் சுகத்தில் ஒரு வினாடி உட்கார்வதற்குள் மணியடிக்கும். மீண்டும் கிளம்ப வேண்டும்.

''இந்தாடா சம்பளம்''

''இதுல நூறு திர்ஹாம்தானே இருக்குது மா...'' பல்லைக் கடித்துக் கொண்டான். இன்னும் மாமா பழக்கம் போகவில்லை.

''அதானே உன் சம்பளம்?'' கேள்வியையும் எதிர்பார்த்துதான் இருந்திருப்பான், பதிலையும் தயாராகத்தான் வைத்திருந்தான்.

''ஆயிரம்னு அம்மாகிட்டே சொன்னீங்களே?''

''பத்தாயிரம் ரூவான்னு சொன்னேன். அது 700 திர்ஹாம்தானே?''

''அப்பக் கூட?''

''உன்னை, இங்கே கூட்டி வந்த டிக்கட்டுக்கு நூறு நூறா இன்னும் இருவது மாசம் கழிச்சுக்கணும். விசாக்கு முன்னூறு, தங்கற இடத்துக்கும் சோத்துக்கும் இருநூறு''

''அது எவ்ளோ மாசம்?''

''டிக்கட்டு இன்னும் இருவது மாசத்துல முடிஞ்சுரும். மத்தது ரெண்டும் எப்பவும் தானே இருக்கு? விசா மூணு வருஷம் வரும். மூணு வருஷத்துக்கு அப்புறம் மறுபடி ரென்யூ. சோறு எப்பவும்தானே திம்பே?''

ஆயிரம் ரூபாய் சம்பளத்துக்கா இந்த அலைச்சல்? ஊருக்கே திரும்பிவிடலாம் என்றாலும், வாங்கியிருந்த கடன் பயமுறுத்தியது.

''தண்ணி பாட்டில் இறக்கணும் வாடா, மாதவா.''

மாதவன், சூப்பர் மார்க்கெட்டின் ஒவ்வொரு பகுதியாக அலசிக்கொண்டு வந்தான். எலக்ட்ரானிக்ஸ் பகுதியில் தள்ளுபடி அயிட்டங்கள் ததும்பிக் கொண்டிருந்தன.

''துபாய் ரேடியோ வாடா மச்சான்? கலக்கலா

ராம்சுரேஷ்

கேக்குதுடா ஆஹா... இங்கே பர்மா பஜார்லே டூப்ளிகேட் சாமானைப் போட்டு ஏமாத்துறானுங்கடா... என்ன விலை இருக்கும் இது?''

''ஆயிரம் ரூபாய் இருக்கும்டா.'' கூசாமல் சொன்ன பொய்கள்.

''அஞ்சு வருஷம் ஆச்சாடா? நிறைய பணம் சேத்துட்டிருப்பே... நானும்தான் இங்கே ஊர்வெயிலை முழுக்கத் தலையில் சுமந்துகிட்டுத் திரியறேன். அஞ்சாயிரத்தைத் தாண்டி நிக்க மாட்டேங்குது ஒரு மாசமும்.''

மாதவன் நண்பனை ஏற இறங்க பார்த்தான். அதே ஐந்தாயிரத்தை எட்ட அவனுடைய சைக்கிள் ஐந்து வருடம் மேம்பாலத்தில் வியர்வை மிதிபட்டிருக்கிறது.

''இன்னும் ஒரு மாசம் இருப்பியா?''

''இல்லேடா... ஏஜெண்டு கடன் அடைச்சிட்டேன். இங்கேயே இருக்கலாம்னு.''

''முட்டாளாடா நீ? அவனவன் ஒரு சான்ஸ் கிடைக்காதா, பிச்சுக்கிட்டுப் போகலாம்னு காத்துக்கிட்டு இருக்கான். உனக்கென்ன கஷ்டம் அங்கே? ஏசிக் கடைலே வேலை. வேளாவேளைக்குக் கறிச் சோறு.''

மாதவன்தான் பெருமையடித்துக் கொண்டிருந்தான். கஷ்டத்தை யாராவது விளம்பரப்படுத்துவார்களா? அந்த ஏஜெண்டை மறுபடி பார்க்க வேண்டும். மாமா கடைவேலை வேண்டாம். வேறு ஏதாவது பார்த்துக் கொள்ளலாம். எல்லோருமா மாமா மாதிரி ஏமாற்றுவார்கள்?

மார்க்கெட்டின் மையப்பகுதியில் நின்றான் மாதவன். பில் கவுண்ட்டருக்குப் போகலாமா? என்ன அவசரம்? கால் போன போக்கில் போகலாம்.

கேவலம் ஒரு காரை அலங்கரிக்க எத்தனை வழிகள்? ஸ்டியரிங் வீலில் மாட்ட லெதர் குஞ்சலம். சென்ட்டர் லாக், ரிவர்ஸில் பாட, தொட்டால் கத்த அலாரம், தொங்கிக் கொண்டு ஆடும் பொம்மைகள், ஒட்டும் போது மசாஜ் செய்துவிடும் சீட்டு. விலைச் சீட்டைத் திருப்பிப் பார்த்தான். 8000 திர்ஹாம். ஏறத்தாழ லைசன்ஸ் வாங்க அவன் செலவு செய்த தொகை.

''இப்ப என்னத்துக்கு உனக்கு ட்ரைவிங் லைசன்ஸ்? இந்த ஊர்லே கார் வாங்கறது சுலபம். லைசன்ஸ் வாங்க எவ்வளவு செலவு ஆகும் தெரியுமா?''

''தெரியாம என்ன? நானும் அஞ்சு வருஷமா இங்கேதான் இருக்கேன். ஒரு லைசன்ஸ் வாங்கிட்டா ட்ரைவர் வேலை கிடைக்குமில்ல?''

''மாசம் முன்னூறு நானூறு வைக்கணும் அதுக்கு... அதுவும் குறைஞ்சது ரெண்டு மூணு வருஷம்.''

''பல்லைக் கடிச்சுக்க வேண்டியதுதான்.



மாமா கடைவேலை வேண்டாம். வேறு ஏதாவது பார்த்துக் கொள்ளலாம்.எல்லோருமா மாமா மாதிரி ஏமாற்றுவார்கள்.

அதான் பழக்கம் ஆயிருச்சே.''

நண்பன் சொன்னதைக் கேட்டிருக்க வேண்டும். அங்கே மறுபடி ஆரம்பித்தது விதியின் விளையாட்டு. இரண்டு ஆண்டு களில் லைசன்ஸ் வாங்கி கம்பெனி வேனை மாமா கடையின்முன் நிறுத்தும்போது இருந்த மனநிறைவில் எதுவும் தெரிய வில்லை.

''மாதவனா? வாடா... எங்கே ரொம்ப நாளா காங்கலை?''

''வேலை மாறிட்டேன்... இப்போ டெய்லி ரொம்பத் தொலைவு போவணுமே.''

''மாறிக்கிட்டே இரு. ஒரு இடத்துல கால் தங்காதே உனக்கு. இப்போ எங்கே?''

கம்பெனி வேனைக் காட்டினான். மாமா குரலில் ஆச்சரியம்.

''பெரிய இடத்துல சேந்துட்டே. இப் போவாச்சும் முனைப்பா இரு. இங்க மாதிரி சுணங்கிக்கிட்டுத் திரியாதே.''



''மூக்கிலே என்னம்மா கோளாறு?''
''நாலு நாளா என் மருமக எது செஞ்சாலும் நல்ல மணமா இருக்கு டாக்டர்...!''
- நெ.இராமன்

புதுப்பையன் வந்து ''1708லே ரெண்டு ஃபேண்டா, மூணு சோடா கேக்கறாங்க சித்தப்பா.''

''சித்தப்பான்னு கூப்பிடாதேன்னு எத் தனை முறை சொல்றது?'' மாமா மாறவே இல்லை.

பில் கவுண்ட்டரை நெருங்கிவிட்டான். நாலைந்து பேர்தான். இருந்தாலும் நிறைய நேரம் ஆகும்... ட்ராலி முழுக்க விதவிதமான டிஷ்யூ பேப்பர்களை வாங்கிக் கொண்டிருந் தான், முன்னே நின்றிருந்த அரபி. இவ்வளவு டிஷ்யூவை வைத்துக் கொண்டு என்ன செய் யப் போகிறான்? குழந்தையை ட்ராலியில் வைத்துத் தள்ளிக் கொண்டிருந்த இந்தியக் குடும்பம்; மாதத்துக்கு இவ்வளவு மளி கையா தேவைப்படும்? இரண்டு ட்ராலிகள் பிதுங்கிக் கொண்டிருந்தன. ஒருவேளை வருடத்துக்கோ?

''எல்லாம் வாங்கியாச்சில்ல?'' கணவன் எரிச்சலாக இருந்தான். அவனைக் கவனிக் காமல் குழந்தையைக் கொஞ்சிக் கொண் டிருந்தாள் மனைவி.

மாதவன் தன் ட்ராலியைச் சரிபார்த்தான். மாத்திரை, கயிறு, கத்தி, ப்ளேடு, பூச்சி மருந்து...

முன்னாலிருந்த கணவன் தீவிரமாக ஃபோனில் என்னென்னவோ அழுத்திக் கொண்டிருந்தான். ''இந்தா ஞாபகம் வச்சுக்க... இந்தக் கார்டுல 300தான் லிமிட் மிச்சம் இருக்கு. 300க்கு மேலே போனா டெபிட் கார்டுதான்.''

சரிதான். நாலு கார்டில் மாற்றி மாற்றி பில் போடப் போகிறானா. இவர்களுக்கு முன்னால் பில் போட்டுக் கொள்ளலாமா என்ற எண்ணத்தை உடனே நிராகரித்தான். அவ்வளவு என்ன அவசரம்?

பணம்... பணம்... பணம்... எல்லாருக் கும் பிரச்னை அதுதான்.

''என்னது, இருபதினாயிரமா?''

''ஆமாம் தம்பி... வண்டி ஓட்டினா பத்தாது... பாத்து ஓட்டணும்.''

''என்ன சார் தலையில குண்டைத் தூக்கிப் போடறீங்க?''

''இந்த ஊர் ஃபைன் எல்லாம் தெரியு மில்ல? ஒரு ஸ்பீடிங் போனாகூட பொளந்து

கட்டிடுவாங்க. நேத்துதான் கம்பெனி ஆளு ட்ராஃபிக் டிபார்ட்மெண்ட் போயிருக்கான். உன் வேனுக்கு இந்த வருஷ ஃபைன் 20000.''

''கம்பெனி கட்டிடும் இல்ல?'' மாதவனுக்கு அடி வயிறு கலங்கினாலும் நம்பிக்கை ஒரு மூலையில் இருந்தது.

''கம்பெனி ஏம்பா கட்டப் போவுது? பொதுவா மாசச் சம்பளத்துல பிடிச்சுருவாங்க. ஆனா உனக்கு அதுவும் முடியாது.''

''ஏன்?'' கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது மாதவனுக்கு. எவ்வளவு பெரிய தொகை.

''உன் சம்பளத்துக்கு இதைப் பிடிச்சா 100 மாசம் பிடிக்கணும்... ஆவுற கதையா?''

''என்னதான் சார் பண்றது'' குரல் கஷ்டப்பட்டே எழும்பியது.

''எனக்குத் தெரியல... வேலை நிச்சயம் போயிடும். ஆனா ஃபைன் பணத்தைக் கட்டாட்டா பாஸ்போர்ட் கொடுக்க மாட்டாங்க... கேட்டுப் பாரு முதலாளிய.''

அம்மாவிடம் இருந்து வந்த லெட்டர் இன்னும் பயமுறுத்தியது. ஏஜெண்ட் கடன் இன்னும் அடையவில்லை.

முதலாளி கருணை காட்டவில்லை. இன்னும் பத்து நாள். இல்லாவிட்டால் போலீஸிடம் போவானாம்.

பில் க்யூ மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தது. அமைதியாக இருந்த இடத்தில் திடீரென 'புல்ஷிட்' என்ற சத்தம் கேட்க எல்லாரும் இந்தக் க்யூவைத் திரும்பிப் பார்த்தார்கள்.

''ஏன் கத்தறீங்க? எல்லாரும் நம்மையே பாக்கறாங்க'' என்றாள் மனைவி.

''தூத்தேறி... இந்தக் கல்சரையே கொளுத்தணும். அந்த அம்மா அப்பாவைக் கொளுத்தணும். ஸ்கூலைக் கொளுத்தணும்'' பொரிந்தான் சம்பந்தமின்றி.

''என்ன ஆச்சு. கூல் ஆகுங்க.''

''412 மார்க் வாங்கினாளாம் என் ஃப்ரெண்டோட தம்பி பொண்ணு டென்த் எக்ஸாம்லே. மார்க் கம்மின்னு மண்ணெண்ணெயை ஊத்திக்கிட்டாளாம்.''

''அச்சச்சோ'' மனைவி யின் குரலிலும் பதற்றம்.

''அப்படியென்ன மார்க்கு மேலே வெறி. அவனவன் என்னென்னவோ நிலமையிலே இருக்கான். ''

சுற்றி இருந்த தமிழ் தெரிந்தவர்களும் இதைக் கவனிக்கத் தொடங்கி விட்டார்கள்.

''எங்க ஆபீஸ்லே கேஷியர் முழுசா லட்சம் திர்ஹாம் விட்டாரு. ஜெயிலுக்குப் போகற நிலைமை. அவர்கூட யார் யார் கைலே கால்லே விழுந்து சங்கத்துலேயே பழியாக் கிடந்து காசுக்கு ஒரு வழியா ஏற்பாடு பண்ணாரு... தற்கொலையா பண்ணாரு? கேவலம் பத்தாங்கிளாஸ் எக்ஸாம்... தூத்தேறி...''

கோபத்தில் கெட்டவார்த்தைகள் சரளமாக வந்து விழுந்தன.

''சரி சரி கொஞ்சம் ஒதுங்குங்க... கூலா ஏதாச்சும் குடிங்க.''

''இமயமலையையே குடிச்சாலும் எனக்கு ஆறாது. உயிர்னா என்னன்னு நினைச்சுட்டாங்க அந்த அப்பா அம்மா? இப்ப அய்யோன்னா வருமா... அம்மான்னா வருமா...?''

''நீங்க வேணா பில் போட்டுக்கங்க'' என்றாள் மனைவி மாதவனைப் பார்த்து.


ஒரு நொடிதான் யோசித்தான் மாதவன்.

''வேண்டாம்மா... நான் எதுவும் வாங்கலை...''



''நீங்க கொடுத்த மருந்து வேலை செய்யலே டாக்டர்!''
''சாரி! மருந்தை எல்லாம் தயாரிக்கிறது என்னோட வேலை இல்லே!''
- அ.சுஹைறல் ரஹ்மான்

நூல்அறிமுகம்







வாழ்க்கையை எதிர்கொள்ளவும், மனித உறவுகளை மேன்மைப்படுத்திக் கொள்ளவும் ஆளுமை என்பது அனைவருக்கும் அவசியம். ''மூர்த்தி சிறியதானாலும் கீர்த்தி பெரியதாக இருக்க வேண்டும்'' என்று சொல்வார்கள். தோற்றத்தால் மட்டுமே வெளிப்படுவதல்ல ஆளுமை. ஒருவரின் நல்ல குணங்கள், அடுத்தவர் மனத்தில் முக்கிய இடம்பெற்று ஆளுமை வெளிப்படும். நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளும் மனப்பான்மை, சாதகமான சூழ்நிலைகளை அறிந்துகொள்ளும் மதிநுட்பம் ஆகிய வழிமுறைகள் பற்றி விவரிக்கிறார் நூலாசிரியர் ஜே.ஆர்.பாட்டி அசத்துகிற ஆளுமையை இதன் மூலம் கையகப்படுத்திக் கொள்ளலாம்.

நூல் : ஆளை அசத்தும் ஆளுமை! வெளியீடு : விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை-2. தொ.பேசி: 044-42634283 / 84

தீக்குளித்தது பேருந்து 'சாதிக் கலவரம்'
வறுமையின் நிறம் தெரிந்தது,
வர்ணம் பூசாத 'ஏழை வீட்டுச் சுவரில்'.

இப்படியாகச் சில வரிகளில் சொல்லப்படும் இக்கவிதை நூல் வாசிக்க சுவாரசியமானது. ஆசிரியர் புதிய நுட்பத்தைக் கையாண்டுள்ளார். வெற்றுத் தாளில் நிறைய எழுதாமல் அளவோடு எழுதி வலுவோடு தமது கவிதைகளை முன்வைத்திருக்கிறார் பா.ஜெயக்குமார். புதிய சொல்லாட்சி நிறைந்த 'செவ்வானமும் சிறு தூறல்களும்' வாசிக்க வாசிக்கப் பெருமழையாகவே பொழிகிறது.

வெளியீடு : கவிச் சோலை பதிப்பகம், ஆலய நகர், எண்ண மங்கலம் தெற்கு, ஈரோடு மாவட்டம் - 638 501. விலை ரூ.50 அலைபேசி : 9842639379

மனித குலத்துக்கு இறைவன் அளித்த ஆறாவது அறிவினால் இறைவனைத் தன்னுள்ளேயே கண்டு, உணர்ந்து உருகி விண்டவர்கள் அடியார்கள். மண்ணில் உதித்தது வாழ்வில் பல தேவைகளுக்காக உழல்வதும், பின்பு கடைசியில் செயலிழந்து சாவதும் இயல்பான இயந்திரமயமான ஒரு வாழ்க்கைமுறை என்பது, அன்றாடம் காணும் உண்மை. ஆனால் அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது என்ற வாக்கின்படி இந்தச் சிறந்த மனிதப் பிறவியின் நோக்கத்தினைப் புரிந்துகொள்ள முடியும். துன்பங்களிலிருந்தும் உலகினைக் காத்தவர்கள் அடியார்கள்! அப்படியானவர்களை 'திருமுருகனின் சீர் அடியார்கள்' என்ற நூலில் ஆய்வு நோக்கில் கே.எஸ்.சுப்பராமன் புனைந்துள்ளார். ஆன்மிக அன்பர்கள் மாத்திரமல்ல, எல்லோரும் படித்தறிய வேண்டிய நூல்.

வெளியீடு : 360 டிக்ரீஸ், 4, பாரதி தெரு, வி.ஜி.பி. சாந்தி நகர், பள்ளிக் கரணை, சென்னை - 600 100.

-மகேஷ்

வாசிக்க வாசிக்கப் பெருமழை!

சூதாட்டம்; சூதாட்டம்!

ச.ந.கண்ணன்

லகான் படத்தின் இறுதிப் பகுதியில் காண்பிக்கப்படும் கிரிக்கெட் மேட்ச் மிகுந்த பரபரப்பாக இருப்பதற்குக் காரணம், அதன் ஒவ்வொரு பந்தும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டவை. ஆனால், நேரலையில் பார்க்கப்படும் ஒரு சர்வதேசக் கிரிக்கெட் மேட்சும் யாரோ ஒருவரால் திட்டமிடப்பட்டு நாடகம் போல மைதானத்தில் அரங்கேறினால் அதன் பெயர் கிரிக்கெட் மேட்ச் அல்ல. சூதாட்டம். மோசடி. நம்பிக்கைத் துரோகம்.

இனி எதன் அடிப்படையில் கிரிக்கெட்டை



நம்பி நேரத்தைச் செலவழிப்பது என்று உண்மையான கிரிக்கெட் ரசிகர்கள் யோசிக்கத் தொடங்கிவிட்டார்கள். பத்து வருடங்களுக்கு முன்பு மேட்ச் பிக்ஸிங் குற்றச்சாட்டில் அசாருதின் சிக்கியபோது பல கிரிக்கெட் ரசிகர்கள் கிரிக்கெட் பார்ப்பதைத் தவிர்த்ததோடு கிரிக்கெட் மேட்ச் முடிவுகளையும் நம்ப மறுத்தார்கள். இப்போது மீண்டும் அப்படியொரு முடிவு எடுக்கவேண்டிய நிலை உருவாகிவிட்டது. இதுவரை, பாகிஸ்தானில் விளையாடுவதுதான் ஆபத்தாக இருந்தது. ஆனால், இப்போது பாகிஸ்தானோடு விளையாடுவதே பேராபத்தாகக் கருதப்படுகிறது. என்னதான் முட்டிமோதி ஆடினாலும் பாகிஸ்தானியர்கள் விட்டுக்கொடுத்து ஆடினார்கள் என்கிற பழியால் உழைப்பைச் சுரண்டிவிடுகிற அபாயம் புதிதாக முளைத்திருக்கிறது.

இதிலுள்ள பெரிய முரண், பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அதன் வீரர்களுக்கு ஆதரவாக நிற்பதுதான். சமீபத்தில்தான் ஒழுங்கீனம் தொடர்பாக மூன்று வீரர்களுக்குத் தண்டனை கொடுத்திருந்தது பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம். ஆனால் தண்டிக்கப்பட்ட சில வாரங்களிலேயே வீரர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கப்பட்டது. அணித் தேர்வில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்













கப்பட்டது. இதற்குப் பிறகு நடந்த லார்ட்ஸ் டெஸ்ட் மேட்சில்தான் எல்லாக் கூத்துகளும் நடந்திருக்கின்றன. என்ன குற்றம் செய்தாலும் தட்டிக்கொடுக்க வாரியம் உண்டு என்கிற மனப்பான்மைதான் அத்தனை தவறுகளுக்கும் காரணம். சூதாட்டக்காரர் உத்தரவின்படி, முகமது அமீர் நோ பால் வீசுகிறபோது சல்மான் பட் பேட்ஸ்மேனைக் கவனிக்காமல் அமீரின் காலைப் பார்ப்பது புகைப்படத்தில் தெளிவாகத் தெரிகிறது. முகமது ஆசிப் இதுவரை எவ்வளவோ தவறுகள் செய்தபோதும் அவர் மீண்டும் மீண்டும் ஆட அழைக்கப்பட்டார். விளைவு, வழக்கம்போல சூதாட்டக் காரியத்தில் ஈடுபட்டு இப்போது மாட்டியிருக்கிறார். சர்வதேசக் கிரிக்கெட் வாரியத்தின் தலைவராக இந்தியாவின் சரத் பவார் இருப்பதால் பாகிஸ்தானுக்கு எதிரான செயல்களில் அவர் ஈடுபடுகிறார் என்று வெளிப்படையாகவே பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் பேட்டி கொடுத்து வருகிறது. அவர்கள் திருந்தப் போவதில்லை.

இந்தியாவிலும் ஏதோ ஒருவகையில் களங்கம் உண்டாகியுள்ளது. அசாருதீன், மனோஜ் பிரபாகரின் கதைகள் யாரையும் பயமுறுத்தியது போலத் தெரியவில்லை. ஐ.பி.எல். தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுகளால் லலித் மோடியின் நிலை பரிதாபத்துக்கு உரியதாகிவிட்டது. அவர் பதிலுக்கு, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முதலாளி ஸ்ரீனிவாசனுக்கு எதிராகப் பரபரப்பான புகார்களை முன்வைத்திருக்கிறார். ஐ.பி.எல். ஆட்டங்களில் சென்னை சூப்பர் கிங்ஸுக்கு ஆதரவாகப் பணியாற்றும்படி நடுவர்களை ஸ்ரீனிவாசன் நிர்ப்பந்தித்தார். குறுக்கு வழியில் பிளிண்டாபை சென்னை அணிக்குத் தேர்வு செய்தார் என்று நீளுகிறது மோடியின் பட்டியல். சென்ற வருடம், இந்தூரில் இலங்கைக்கு எதிராக நடந்த முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணியின் வெற்றி, மேட்ச் பிக்ஸிங் வகையைச் சேர்ந்ததாக ஒரு சூதாட்டக்காரர் பரபரப்பாக ஆங்கில நாளிதழுக்குப் பேட்டி அளித்துள்ளார். கிரிக்கெட்டின் கேடுகாலம் இது.

ஹேப்பி ஸ்கிப்பிங்!



நடை, ஓட்டம் மாதிரி ஸ்கிப்பிங் ஒரு சிறந்த உடற்பயிற்சி. எப்படி ஸ்கிப்பிங் செய்ய? இதோ சில டிப்ஸ்: இரண்டு கைகளிலும் ஸ்கிப்பிங் கயிற்றின் இரு முனைகளையும் பிடித்துக்கொண்டு நின்றால், கயிற்றின் நடுப்பகுதி தரையைத் தொட வேண்டும், அதுதான் சரியான நீளம். கைகளை உடலை ஒட்டி வைத்துக் கொண்டு, கால்களை இலேசாக மடக்கியபடி ஸ்கிப்பிங் ஆட வேண்டும். முதுகை வளைக்கக் கூடாது; தலை நிமிர்ந்து இருக்க வேண்டும். ரொம்ப உயரம் எம்பாமலும், கயிறு காலைத் தடுக்கும் அளவுக்குத் தாழ்வாகவும் இல்லாமல், மிதமான உயரத்துக்கு எம்பிக் குதிக்க வேண்டும். ஹேப்பி ஸ்கிப்பிங்!

ஃபிட்னஸ் பாட்டி

நூற்றைந்து வயதான ஒரு பாட்டி, இன்னமும் ஆக்டிவாக இருக்கிறார் என்றால் ஆச்சரியப்படுவீர்கள். அதுவும் உடற்பயிற்சி முகாம் ஒன்றை நடத்தி வயதானவர்களுக்கு உடல் ஆரோக்கியம் பற்றி வகுப்புகள் எடுக்கிறார். இவர் ருமேனியாவின் தலைநகரான புகாரெஸ்டில் வசிக்கிறார். எலினா டாராஸ்வ்ஸ்கி - இது ஃபிட்னஸ் பாட்டியின் பெயர். ''உங்கள் ஆரோக்கிய ரகசியம் என்ன'' என்று கேட்டபோது, ''நான் சிறுவயதிலிருந்தே நடைப்பயிற்சி செய்யத் தவறியதில்லை. எப்போதும் புகைபிடித்ததில்லை; மதுவைத் தொட்டதும் இல்லை'' என்கிறார்.



சால்ஜாப்பு வேண்டாம் ப்ளீஸ்!

சோம்பேறித்தனத்தால் உடற்பயிற்சி செய்யாமல் இருந்துவிட்டு, சில சால் ஜாப்புகளால் சமாதானம் சொல்லிக்கொள்வது பல ருக்கு வாடிக்கை. 'இந்தப் பசங்களை வெச்சிக்கிட்டு எப்படி உடற்பயிற்சி செய்யறது?' என்பது உங்கள் வாதமா? உங்கள் குழந்தைகளுக்கும் உடற்பயிற்சி அல்லது விளையாட்டில் ஆர்வம் ஏற்படுத்துங்கள். நீங்களும் அந்த நேரத்தில் உடற்பயிற்சி செய்யுங்கள்.



உடற்பயிற்சி போரடிக்கிற சமாசாரம் என நினைக்கிறீர்களா? மியூஸிக்கைக் கேட்டபடியே உடற்பயிற்சி செய்யுங்கள்; அல்லது மியூசிக்கைப் போட்டுவிட்டு டான்ஸ் ஆடுங்கள். தோட்ட வேலை, வீட்டைச் சுத்தம் செய்வது, நாயை வாக்கிங் கூட்டிச் செல்வது போன்ற உருப்படியான வேலைகளையும் செய்யலாம். டூ இன் ஒன்! வேறு எதுவும் இல்லாது போனால், மாடிப்படி ஏறி இறங்குங்கள். தினமும் உடற்பயிற்சியா என அலறும் ஆளா நீங்கள்? சாரி எனக்கு நேரமில்லை எனக் கழண்டுகொள்பவரா நீங்கள்? அதிகமில்லை. வெறும் அரை மணி நேரம், வாரத்துக்கு நான்கு நாட்கள் போதும். சௌகர்யப்பட்டால் காலையில் பதினைந்து நிமிடம்; மாலையில் பதினைந்து நிமிடம். 'நான் ஹெல்தியாகத்தான் இருக்கேன்! எனக்கு உடற்பயிற்சி அவசியம் இல்லை' என்று நினைக்கிறீர்களா? சாரி உங்கள் எண்ணம் தவறு. இதே போல எதிர்காலத்திலும் ஹெல்தியாக இருப்பதற்கு உடற்பயிற்சி செய்யுங்கள். உடற்பயிற்சி செஞ்சா உடம்பு டயர்டா ஆயிடுது என நினைக்காதீர்கள். நாள் முழுக்க நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க உடற்பயிற்சி உதவும்.

● நம் உடலிலுள்ள ஐம்பது ட்ரில்லியன் செல்களில் மிக நீளமானவை நரம்பு செல்கள். ● தொண்ணூற்று ஒன்பது சதவிகிதம் எலும்புகளிலும், பற்களிலும் கால்சியம் உள்ளன. ● உடலின் மிகப் பெரிய மூட்டு முழங்கால் மூட்டு. ● உடல் எடையில் நாற்பது சதவிகிதம் தசைகள். ● வளர்ந்த மனிதனின் முதுகுத் தண்டின் நீளம் பதினேழு அங்குலம். ● உடலில் உள்ள ரத்தக் குழாய்களின் மொத்த நீளம் தொண்ணூற்று மூன்றாயிரம் மைல்கள். ● ஒரு நாளைக்கு இதயம் பம்ப் செய்யும் இரத்தத்தின் அளவு 3600 காலன். ● வளர்ச்சி அடைந்த மனித நுரையீரலின் கொள்ளளவு மூன்று லிட்டர் காற்று. ● இதயத்திலிருந்து புறப்படும் இரத்தம் ஒரு முறை உடலைச் சுற்றிவிட்டு மீண்டும் இதயத்தை வந்தடைய 23 விநாடிகள் ஆகும். இவற்றையெல்லாம் நன்கு வேலை செய்யவைப்பது உடற் பயிற்சி தான்.



-அர்ஜுன்



ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்

லக்ஷ்மி,
திருவனந்தபுரம்

வீட்டில் அரளி நந்தியாவட்டைச் செடிகளை வளர்க்கலாமா?

வளர்க்கலாம். இந்த மலர்களைப் பூஜைக்கும் உபயோகிக்கலாம்.

விஜயலக்ஷ்மி வேங்கடேசன்,
சென்னை - 41

கடந்த 35 வருடங்களாக நல்லெண்ணெய் தீபம் தினமும் வீட்டில் ஏற்றி வருகிறேன். நீங்களும் 8.8.2010 கல்கியில் கட்டாயம் நல்லெண்ணெய் தீபம் ஏற்ற வேண்டும் என்று கூறியுள்ளீர்கள். நெய் தீபம் தனியாக ஒரு விளக்கில் ஏற்ற வேண்டுமா? அல்லது வெள்ளிக்கிழமைகளில் மட்டும் ஏற்ற வேண்டுமா?

விளக்கேற்ற நல்லெண்ணெய் மிகவும் சிறந்தது. ஆண்டாண்டு காலமாக அனைவரும் தங்கள் வீடுகளில் நல்லெண்ணெய் தீபம்தான் ஏற்றி வருகின்றனர். கோயில்களிலும் ஸ்ரீமடங்களிலும் கூட காலங்காலமாக நல்லெண்ணெய் தீபமே ஏற்றப்பட்டு வருகின்றது. நவதானியங்களில் சனிபகவானுக்குரிய தானியம் எள்ளு. அதிலிருந்து எடுக்கப்படுவது நல்லெண்ணெய். ஆகவே நல்லெண்ணெயில் தீபம் ஏற்றினால் நவகிரக தோஷங்கள் விலகும். பசுமாடு என்னும் கோமாதா, லக்ஷ்மியின் அம்சம். பசும்பாலில் தயாரிக்கப்படும் பசு நெய்யினால் தீபம் ஏற்றினால் செல்வச் செழிப்பு உண்டாகும். வெள்ளிக்கிழமைகளில் நெய் தீபமும் கூடுதலாக ஏற்றுங்கள். ஆனால், நல்லெண்ணெய் தீபம் அவசியம் ஏற்ற வேண்டும். அது நன்மையானவைகளைத் தரும்.

ஏ.வி.வெங்கட்ராமன், பாலக்காடு

எனது பிறந்த தேதி 31.3.1950. அரசுப் பணியில் உள்ள எனக்கு வரவேண்டிய செட்டில்மெண்ட் தொகை சரியான முறைப்படி கணக்கிட்டு வழங்கப்படவில்லை. மேல் முறையீடுகள் பலனளிக்கவில்லை. நீதிமன்றத்தை அணுகினால் நியாயம் கிடைக்குமா?

வழக்குத் தொடுத்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம்.

சி.ராம ஆஞ்சநேயன், விருதுநகர்

எனது பிறந்த தேதி 22.4.1973. என் ஜாதகத்தில் நான்கு கிரகங்கள் ராகு, கேதுவின் நட்சத்திர சாரம் பெற்றுள்ளன. கால சர்ப்ப தோஷம் உள்ளது. அனைத்துக் கிரகங்களும் ராகு - கேதுவுக்குள் அடைபட்டு உள்ளன. எனக்குப் பெற்றோர் இல்லை. திருமணமும் நடக்கவில்லை. நிரந்தரத் தொழிலும் இல்லை. சொந்த வீடும் இல்லை. எனக்கு எப்பொழுது நல்லது நடக்கும்?

நீங்கள் கர்நாடக மாநிலம் உடுப்பிக்கு



உங்கள் கேள்விகளை ஜாதகக் குறிப்போடு 'பளிச் பரிகாரம்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க...
kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

அருகில் உள்ள குக்கே சுப்ரம்மண்யா சென்று நாக சம்ஸ்காரா என்னும் பரிகாரம் செய்யுங்கள். குமாரதாரா நதிக்கரையில் மங்களூரு அருகில் உள்ள சுப்ரம்மண்யா என்னும் ஊரில் நாக வடிவில் முருகனை வழிபடுகின்றனர். நாக தோஷ நிவர்த்திக்கு மிகவும் சக்திவாய்ந்த பரிகாரம் இது. செய்து வாருங்கள், நல்லது நடக்கும்.

ராமசாமி, கோவை

மகனுக்காகத் தாய் தந்தை கோயிலுக்குச் சென்று பரிகாரம் செய்யலாமா? அவ்வாறு செய்யும் போது மகனின் ஆடைகளில் ஏதேனும் ஒன்றைக் கட்டாயம் எடுத்துச் செல்ல வேண்டுமா?

மகன், மகள், மருமகன், மருமகள், பேரன், பேத்தி போன்ற குடும்ப அங்கத்தினர்களுக்காக நீங்கள் கோயிலுக்குச் சென்று பரிகாரம் செய்யலாம். அவர்களை உடன் அழைத்துச் செல்ல முடியாவிட்டால் அதற்குப் பதில் அவர்களின் உடையை எடுத்துச் செல்ல வேண்டாம். அவர்கள் சார்பாக நீங்கள் பிரார்த்தனை செய்து கொண்டால் போதும்.

உஷா குமரன், திருவனந்தபுரம்

எங்கள் மகன் ராஜ்குமார் ஜாதகத்தை இத்துடன் இணைத்துள்ளேன். 36 வயதாகிறது. இன்னும் திருமணம் நடக்கவில்லை. என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?

உங்கள் மகனுக்குப் பூரட்டாதி 2-ம் பாதம், கும்ப ராசி, மகர லக்னம். பத்தாம் இடத்தில் செவ்வாய் சூரியன் சேர்க்கை ஏற்பட்டுள்ளது. திருமணம் தாமதமாவதற்கு அதுவே காரணம். 2012-ல் அவருக்குத் திருமணம் நடக்கும். சௌந்தர்ய லஹரி முதல் சுலோகத்தை தினமும் நீங்கள் மூன்று முறை படித்து வாருங்கள்.



மகனுக்காக தாய் பரிகாரம் செய்யலாமா?

மூர்த்தி எங்கே?

அந்த நாற்பது பேர் முகத்திலும் சந்தோஷக் களை தாண்டவமாடியது. இருக்காதா பின்ன? ஆறு மாதங்களுக்குப் பிறகு ப்ராஜக்ட் ட்ரீட் போக இருக்கிறார்கள். பெரிய மென்பொருள் நிறுவனம் அது. இந்தியாவிலிருந்து 'ஆன்சைட்' அதாவது அட்லாண்டா, அமெரிக்கா வந்து, ஒரு 'ப்ராஜக்ட்' (திட்டப்பணி)க்காகச் சரியாக நாற்பது பேர் வேலை செய்கிறார்கள்.

லட்ச லட்சமாகச் சம்பாதிக்கிறார்கள். இதில் குதூகலமாவதற்கு என்ன இருக்கிறது என்று நீங்கள் கேட்பது புரிகிறது. முதலில் திட்டப்பணி மேலாளரிடமிருந்து விருந்துக்கு அனுமதி பெறுவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடும். அதன் பிறகு எல்லோரையும் ஒன்று சேர்த்து விருந்துக்கான தேதி, இடம், நேரத்தைத் தீர்மானிப்பதற்கு ஒரு யுகம் பிடிக்கும்.

''அந்த ஹோட்டல் வேண்டாம் பா... இங்க வெஜ் ஃபுட் நல்லாவே இருக்காது. அய்ய! இதுவா? ஆம்பியன்ஸ் படு கேவலமா இருக்கும். அய்யோ இந்த ரெஸ்டாரண்டா? பட்ஜெட் என்னானு பார்த்துக் கோப்பா, பில்லு பழுத்துடும்...'' என்று கருத்து மாற்றிக் கருத்து வந்து கொண்டே இருக்கும்.

இத்தனை கருத்துக்களையும் உள்வாங்கி, சீர்தூக்கிப் பார்த்து, எல்லோரையும் திருப்திப்படுத்தக் கூடிய ஓர் உணவகம் தேர்ந்தெடுக்க அசாத்தியத் திறமை வேண்டும். விருந்துக்கு ஏற்பாடு செய்பவன் ஓர் அபார ஆசாமியாக இருந்தாலொழிய இதெல்லாம் ரொம்பக் கஷ்டம்.

அன்று காலை 9.33 மணிக்கு ப்ரசாத்திடமிருந்து மின்னஞ்சல் வந்தது. இத்தாலி உணவகம் ஒன்றுக்குப் போக இருப்பதாகவும், சரியாக 11.45க்கு உணவகம் வாசலில் அவனைச் சந்திக்குமாறும், மதியம் 12 மணிக்கு மதிய உணவு ஆரம்பிக்கப்படுமென்றும் அந்த மின்னஞ்சலில் குறிப்பிட்டிருந்தது.


நாற்பது பேரில் முப்பது வயதுக்குட்பட்டவர்கள் 28 பேரும், முப்பது முதல் நாற்பது வயதுக்குட்பட்டவர்கள் பதினோரு பேரும், நாற்பது வயதுக்கு மேல் ஒருவரும் இருந்தனர். திட்டப்பணி மேலாளர் கணேஷ்! மூர்த்திக்கு நாற்பத்தைந்து வயது ஆனாலும் தன்னை விட இளையவரான கணேஷுக்குக் கீழ்தான் வேலை பார்த்தார். மூர்த்தி இல்லாத சமயங்களில் அவரைப் பெருசு என்று தான் மற்றவர்கள் அழைப்பார்கள். வயது அதிகம் ஆன காரணத்தினால், எப்பொழுதும் தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பார் மூர்த்தி.

மணி 11.45!

சாரி சாரியாகக் கிளம்பத் தொடங்கினார்கள். நடுவாந்திரமான உணவகம் அது! ப்ரசாத் அதன் வாசலில் வந்திறங்கி, உணவக நிர்வாகி ஒருவரிடம் தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் மேஜைகள் பற்றி விவரம் கேட்டுக் கொண்டான். நாற்பது பேர் என்பதால் ஒரே மேஜைக்கு வாய்ப்பில்லை என்றும் மூன்று மேஜைகள் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் நிர்வாகி கூறினார்.

''எல்லாரும் வந்தாச்சா இல்லியா?'' என்றார் கணேஷ்.

''சாத்விக் கார் மெக்கானிக்கைப் பார்த்துட்டு வர்றேன்னு சொன்னான் கணேஷ்''



தி.ப.சு

என்றான் நவீன்.

''கணேஷ்! ஏற்கெனவே பத்து நிமிஷம் லேட். ஹோட்டல் மேனேஜர் மொறைக்கற மாதிரி எனக்குத் தோணுது'' என்று பரிதாப மாகச் சொன்னான் ப்ரசாத்.

''ப்ரசாத்! டோன்ட் வொர்ரி... லெட்ஸ் மேக் க மூவ்... லேட்டா வர்றாங்க ஜாயின் பண்ணிக்குவாங்க'' என்று கணேஷ் சொன் னதும் ஒவ்வொருவராக ஹோட்டலுக்குள் நுழைந்தார்கள்.

''சர்! ஹௌ மெனி மெம்பர்ஸ்'' என்றான் அந்த மெக்ஸிகன் சர்வர்.

''ஃபாட்டி'' என்று தீர்மானமாகச் சொன் னான் ப்ரசாத்.

முப்பது பேர் கிட்டதான் வந்து இருப் பார்கள் போலத் தெரிந்தது. இன்னும் யார் யார் வரவில்லை என்று ப்ரசாத்துக்கே புரியவில்லை. கணேஷ் சமாதானப்படுத்திய தால் யார் பற்றியும் கண்டுகொள்ளாமல் மதிய உணவுக்கு ஆர்டர் செய்ய ஆரம்பித் தான். அவனைத் தொடர்ந்து விருந்துக்கு வந்தவர் ஒவ்வொருவராக ஆர்டர் செய்ய

ஆரம்பித்தனர். புகைபிடிக்கச் சென்ற 'தம் கோஷ்டி' பத்து நிமிடங்கள் கழித்து உள்ளே நுழைந்தது. அவர்களைத் தொடர்ந்து சாத்விக்கும், சினாயும் வந்தனர்.

'கசமுச கசமுச' என்று சந்தைக் கடை மாதிரி ஆங்காங்கே பேச்சுக் குரல்கள், சிரிப்பொலிகள், சாப்பிடும் பொழுது எழும் தட்டு, ஸ்பூன் ஓசைகள். மூன்று நீளமான மேஜைகள் குறுக்கும் நெடுக்குமாகப் போடப்பட்டிருந்ததில்தான் இவர்கள் அனைவரும் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டு சாப்பிட ஆரம்பித்தனர். ஒரு மேஜைக்கும் அடுத்த மேஜைக்கும் இடைவெளி ஒன்னரை அடி தான் இருக்கும். உணவகம் முழுவதற்கும் சேர்த்து ஒரே ஒரு ராட்சத சாண்டிலியர் விளக்கு அந்த அறையின் நடுவில் தொங்கிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு மேஜைக்கும் அலங்காரமாக 'ஹரிக்கேன்' விளக்கு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. உணவகம் பழைய கால முறைப்படி அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கண்ணாடிக்கும் இந்தப் பக்கம், இது வரை இந்தியர் எவரும் பார்த்திராத இத்தாலியத் தலைவர் படமும், அந்தப் பக்கம் கலை ஓவியமும் மாட்டப்பட்டிருந்தன.

ஆலிவ் சாலட், பாஸ்தா, எகப்லேண்ட் உணவு வகைகள், லாப்ஸ்டா, திராமிசு அது இது என்று இத்தாலிய விருந்தை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தனர் நமது நாற்பது பேரும். மூன்று மேஜையில் ஒரு மேஜை முழுவதும் சைவ உணவு மட்டும் சாப்பிடுபவர்கள் அமர்ந்திருந்தனர். அப்பொழுதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. அய்யராத்து அகல்யாவுக்கு மாற்றி அசைவ உணவை வைத்துவிட்டுப் போய்விட்டான் அந்த மெக்ஸிகன் சர்வர். அவள் வாந்தி எடுக்காத குறையாகப் புலம்பித் தீர்த்தாள்.



"கணேஷ்! நாம நாற்பது பேர். ஆனா முப்பத்தொன்பது பேருக்கு மட்டும்தான் பில் போட்டிருக்காங்க."

''வெயிட் அகல்யா! லெட் மீ கால் த ஹோட்டல் மேனஜர்'' என்று அகல்யாவை சாந்தப்படுத்தினார் கணேஷ்.

தவறு செய்த மெக்ஸிகன் சர்வரை அழைத்து, மேலாளரை அழைக்கும்படி வினவினார் கணேஷ்.

சற்று நேரத்துக்கு முன் உணவகத்துக்குள் நுழைந்து கொண்டிருந்த ஒருவருக்கு 'ஹார்ட் அட்டேக்' வந்து விட்டதாகவும், ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்து அவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிக் கொண்டிருப்பதால் மேலாளர் இன்னும் 15 நிமிடங்கள் கழித்துதான் வருவார் என்றும் கணேஷிடம் கூறினான். கணேஷ் கோபமாக இருப்பதைப் புரிந்துகொண்ட அவன், தான் பொய் சொல்லவில்லை என்றவிதமாக உணவக வாசலில் சிவப்பு விளக்கு, துடிதுடிக்க நின்றுகொண்டிருந்த ஆம்புலன்ஸைக் காண்பித்தான்.

அதன்பின் இருபது நிமிடங்கள் ஆன பிறகு, மேலாளர், கணேஷைச் சந்தித்தார். கணேஷ் அவரிடம் மெக்ஸிகன் சர்வர் அகல்யாவுக்கு இழைத்த கொடுமையைப் பற்றி விவரித்தார். மேலாளர் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டார்.

12 மணிக்கு ஆரம்பித்த விருந்து 3 மணி வரை நீடித்தது. மூக்குப் பிடிக்கத் தின்று தீர்த்ததால், சில பேர் சோர்ந்து போயிருந்தனர். 'தம் கோஷ்டி' அடுத்த ரவுண்டுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தது.

கணேஷ் பில் வரவழைத்தார். ப்ரசாத்திடம் பில்லைக் காண்பித்துச் சரி பார்க்கச் செய்தார். அது 'ஃபேமிலி ஸ்டைல்' மதிய

உணவு. முப்பத்தொன்பது தலைக்கு வரி உட்பட ஆயிரத்து நானூறு டாலரும் சொச்சமுமாக பில் காண்பித்தது.

''கணேஷ்! நாம நாற்பது பேர். ஆனா இவங்க முப்பத்தொன்பது பேருக்கு மட்டும் தான் பில் போட்டிருக்காங்க... என்ன பண்றது?''

''அந்த சர்வர் வந்ததுலேந்து சொதப்பல் தான் பா... அவனைக் கூப்புடு... நாற்பது பேருன்னு சொல்லி பில்லை மாத்தச் சொல்லு.''

ப்ரசாத் சர்வரை அழைக்காமல் மேலாளரை அழைத்து விஷயத்தைச் சொன்னான். மேலாளர் மீண்டும் கோபமுற்று சர்வரை இவர்கள் முன் கேள்வி கேட்டார். எல்லோருடைய ஆச்சர்யத்துக்குமிணங்க அவன், தான் இந்த முறை தவறு செய்யவில்லை என்றும், முப்பத்தொன்பது பேர் தான் சாப்பிட்டனர் என்றும் அடித்துச் சொன்னான். ப்ரசாத் சற்று எரிச்சலுடன் நாங்கள் நாற்பது பேர்தான் என்று சொன்னான். யாரும் சாப்பிட்ட பிறகு வெளியே செல்லவில்லை என்பதை ஊர்ஜி தப்படுத்திக் கொண்ட மேலாளர் ஒருமுறை இருக்கும் தலைகளை எண்ணினார்.

''1, 2, 3....10....''

எல்லோரும் ஆவலுடன் முடிவுக்குக் காத்திருந்தனர்.

''....20... 30...35...''

அவர் 39ல் கொண்டு வந்து முடித்தார். எல்லோருக்கும் ஆச்சர்யம்!

''விருந்துக்கு வராத நபர் யார்? காணாமல் போன அந்த நபர் யார்?'' என்று கேள்வி மேல் கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தனர். நாற்பது பேர் என்பதால் ஏறக்குறைய ஐந்து நிமிடங்கள் பிடித்தது அவரைக் கண்டுபிடிக்க.

''மூர்த்தி தான்பா வரலை'' என்றான் ப்ரசாத்.

''மூர்த்தி எங்கே?'' என்றார் கணேஷ்.

''ஆபீஸுலேர்ந்து நாம கிளம்பறப்ப அவர்ட்ட நான்தான் சொன்னேன்!'' என்றான் பாலாஜி.

''நான் அவர ஆபீஸ் கார் பார்க்கிங்ல பார்த்தேனே!'' என்றாள் ஸ்ருதி.

''சரி வெளில போய் பேசலாம்'' என்று எல்லோரையும் வாசலுக்கு வரும்படி அழைத்தார் கணேஷ்

உணவகத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த கணேஷ், ''யாராவது அவருக்கு ஃபோன் பண்ணுங்களேன்?'' என்றார்.

''நான் பண்ணிட்டேன்! வாய்ஸ் மெயிலுக்குப் போகுது... எடுக்க மாட்டேங்கறாரு''என்றான் ப்ரசாத்.

''அவரு எப்போதுமே இப்படித்தான்... நம்ம கூட ஒட்டவே மாட்டாரு'' என்று பேசிக் கொண்டே நடந்தான் பாலாஜி.

கணேஷுக்குச் சந்தேகமாக இருந்தது. உணவகத்தை விட்டு வெளியே வந்தவர் மீண்டும் ஒருமுறை கேட்டார். ''மூர்த்தி எங்கே?'' ●



''பக்கத்து வீட்டு பாபு முதல் ரேங்க் வாங்கியிருக்கானே. நீ ஏண்டா வாங்கலை?''

''போப்பா. முதல் ரேங்கை ஒருத்தன்தான் வாங்க முடியும்!''

- ஞா.ஞானமுத்து

நான் எனக்குள்ளேயே விவாதித்துக் கொள்வதுண்டு சிலநேரங்களில். இப்போதும் அப்படித்தான்.

''மனுஸ்மிருதி கடைசி வரியில் பெண்களுக்குச் சுதந்திரம் தேவையில்லை என்கிறார்... மற்றவர்களின் பொருள் தெரியுமா? ஏன் சுதந்திரம் தேவையில்லையாம்? தெரிஞ்சுக்கோ... அதை எதற்குத் தெரிஞ்சுக்கணும்... அவரொரு பழைமைவாதி. நீயொரு பத்தாம்பசலி. உன்னோட சுதந்திரமான முடிவுகளால் நீ கஷ்டப்பட்டா உன்னோட அபத்தமான தேர்வு ஞானமும் முடிவெடுக்கும் திறமையின்மையும் தான் காரணம்.''

''அது அடுத்த கட்டம். மனு மற்ற மூன்று வரிகளில் சொல்வது... குமாரி ஆகும் வரை அப்பாவால் பாதுகாக்கப்படுவதால்... யவ்வன காலத்தில் கணவனால் பாதுகாக்கப்படுவதால்... வயதான பின் பிள்ளைகளால் பாதுகாக்கப்படுவதால்... பெண்களுக்கு ஏன் தனியாகச் சுதந்திரம் என்று கேட்கிறார்.''

''ஆம்பிள தயவிலேயே கட்டையிலே போறவரைக்கும் காலத்த தள்ளணும்னு மனு நினைக்கிறாரோ? என்னவொரு அடிமைத்தனம். நூறு சதவிகித ஆண் ஆதிக்கப் புத்தி.''

''நாம் இதை மாத்தி வாசிக்கணும். இலக்கியத்தில் சொல்வாங்களே மறுவாசிப்பு அது மாதிரி. குமாரி ஆகும் வரை



11

ஒரு தகப்பன் பெண்ணுக்கு முறையான கல்வியை, சுயமாக நிற்கும் தன்மையை அளித்துப் பாதுகாத்து அவன் கடமையை நிறைவேற்ற வேண்டும். கணவன் யவ்வன காலத்தில் காதலையும் காமத்தையும் இதா

பாம்பைப் பிடித்த பாட்டி

ஆசாபாசங்களையும் அளித்துத் தன் பொறுப்பை ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும். வயதான பின் பிள்ளைகள் ஆறுதலாயும் அன்பாயும் அவளைப் பேண வேண்டும். ஆண்களின் இந்த மூன்று கடமைகளும் செயலில் அமைந்தால், ஒரு பெண்ணுக்கு வேறு என்னதான் வேண்டும்? அப்போது சுதந்திரம் என்ற பேச்சே அர்த்த மற்றது என்று அர்த்த புஷ்டியாகச் சொல்கிறார் மனு.''

''மண்ணாங்கட்டி! இது அன்பின் பேரால் அடிமைப்படுத்தும் புத்தி. அப்போ பெண்களுக்குத் தனித்துவமே வேண்டாமா? ஆண்களுக்குச் சமமா நாம இருக்க வேண்டாமா?''

''ஒரு ஆம்பிள இல்லாம தனியா சுயம்புவா நம்மலால பொறக்க முடியுமா? அடிப்படையிலேயே இயற்கை ஆணைச் சார்ந்தே இயங்கும்படிதானே நம்மை அமைச்சிருக்கு. எல்லாத்துலேயும் சமம் சமம்னு மல்லுக்கட்டக் கூடாது. இப்படிக் கட் அன் ரைட்டா வெச்சிக்கிட்டு வாழக் கூடாது.''

''ஏன் வாழ்ந்தா என்ன?''

''ஐயோ... புள்ளதாச்சிப் பொம்பள நிக்குதே... இப்படி உட்காருமா''ன்னு ஒரு ஆம்பிள பஸ்ஸில் எடம் கொடுத்தா, 'ஆம்பிளங்க சீட்ல நான் உட்கார மாட்டேன்'னு வெறச்சிக்கிட்டு நிக்க முடியுமா? பிரமீள் என்கிற தர்முசிவராமு ஒரு கட்டுரையில் சொல்லி இருப்பாரு... ''இங்கே ஃபெமினிஸ்டுகள் பேசுகிற விஷயத்துக்கும் இங்கே நமக்குத் தேவையான ஃபெமினிசத்துக்கும் இடையில் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது. ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருளாதாரச் சுதந்திரம் ஏற்பட்டபோதுதான் பொறுப்பின்மை எழுந்தது. இந்தச் சுதந்திரம் செயற்கையானது. ஒருவர்க்கு ஒருவர் காட்டுகிற உறவில் தங்கள் மனத்துக்குள் ஏற்படுகிற எதிர்வினைகளைத் தாங்களே அவதானிக்கிற பண்பு இருந்தால் ஒருவன் எஜமானாகவும் ஒருவன் அடிமையாகவும் உள்ள போதே ஒருவரிடமிருந்து ஒருவன் சுதந்திரமாக

செப்டம்பர் மாதப் பட்டுப் புடவைகளைப் பரிசாக வழங்குவோர்:



ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருளாதாரச் சுதந்திரம் ஏற்பட்டபோதுதான் பொறுப்பின்மை எழுந்தது.

இருப்பான்.''

''என்னதான் சொல்ல வர்றே? சொல்லித் தொலை!''

எங்க வீட்டுக்கு எதிர் வீட்டுல ஒரு அக்கா ஆண்களை மட்டம் தட்டியே பேசும். எல்லாத்துக்கும் சண்டைதான். அலறி ஒடு வான்க ஆம்பிளைங்க. ஒரு நாள் அக்கா அலறிக்கிட்டு ஓடியாந்தாள் ரோட்டுக்கு. என்னவோ ஏதோன்னு நாங்களும் அவங்கள பார்த்துட்டு ஓடியாந்தோம். ரஜினி ஸார் 'பா...பா....ம்பு'ன்னு அலறுவாரே அது மாதிரி அக்காவும். பெட்ரூமில பாம்பு வந்துடுச்சாம். என்ன பண்றதுன்னு தெரியல. அக்கா சொன்னாள்... ''யாராவது ஆம்பி ளைங்கள கூப்பிடுங்களேன்.'' பேப்பர் போடுற ஒரு பையன் என் வீட்டுலதான் பிரச்னையோன்னு ஓடியாந்தான். என்னைப் பார்த்து என்னக்கான்னு விசாரித்தான். பாம்பு குடித்தனம் வந்த கதையைச் சொன்னதும், ''அவங்க வீட்டுலேயா...'' என்று ஜவ்வு மிட்டாயா இழுத்தான். அவங்ககிட்டே கேட்டான், ''நீங்கதான் ஆம்பிளைக்கு ஈக்கு வல்னு சொல்லுவீங்களே! இப்போ எதற்கு நாங்க? அதுசரி உள்ள வந்தது பொம்பள பாம்பா இருந்தா கம்முனு உட்டுடுங்க... அது உங்க இனம்தானே''ன்னு கடுப்பேத்தி னான். அக்காவால ஒண்ணும் பேச முடி யலே. அந்த நேரம் பார்த்து ரெண்டு மூணு வீடு தள்ளி ஜாக்கெட் போடாத ஒரு பாட்டி இருந்தாள். எந்த நோயும் அவள் தோளில் கை போட்டது இல்லை. அவ்வளவு ஆரோக்கியம், ஒரு தந்தி பேப்பரைக் கொம்பு மாதிரி சுருட்டிக்கிட்டுச் சரசரன்னு உள்ளே போனாள். நாலைந்து சந்து பொந்து இண்டு இடுக்கிலே பேப்பர் கொம்பை விட்டுத் துழாவி பாம்பை அநாவசியமா பிடிச்சுக்கிட்டு வெளியே வந்தாங்க பரா சக்தி மாதிரி. அதை இன்னொரு செடி கொடி புதர் இருக்கிற இடத்துல விட்டு ''ஏன் கும்பல்? வேலைய பாருங்க. நான் வேற அந்த மனுஷனுக்குச் சுடத் தண்ணி வெச் சிட்டுப் பாதியிலே ஓடியாந்துட்டேன். அவ ருக்குக் குளிப்பாட்டணும்னு,'' விர்னு கிளம்பிட்டாங்க வில்லுலேர்ந்து வந்த அம்புமாதிரி.

''எதுக்கு இந்தக் கதை?''

ம்ம்... கதை வெச்சி கமர்கட்டுச் செய்யுற துக்குப் பெண் சுதந்திரம் பேசி ஆண்களைக் கண்டதுக்கும் மட்டம் தட்டினவ... சிடு சிடுன்னு வாழ்க்கை நடத்துறா... ஆபத்துல மட்டும் ஆண் தயவை எதிர்பார்க்குறா! பெண் சுதந்திரம்னா என்னான்னு தெரியாத ஒரு பாட்டி இயற்கையோடு இணைந்து புத்தி வலுவோட ஆணுக்கு நிகராத்தான் நிம்மதியா இந்த வயசுலேயும் குடும்பம் நடத்துறா. இன்னும் தெளிவா சொல்ல எங்க குடும்ப கதை ஒண்ணு சொல்றேன்.

(தொடரும்) படம் : ஞானம்

ஊர்வசி போட்டி சில்கி சாரி!



மாதம் 3 புடைவைகள் பரிசு!

வாசகர்களே!

ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு!' தொடரைத் தொடர்ந்து படிங்க... தொடரையொட்டி வாரம் ஒரு கேள்வி கேட்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒரு கூப்பன் இடம்பெறும். விடைகள் மற்றும் உங்களின் பெயர் முகவரி ஆகியவற்றை அதிலேயே எழுதி இணைத்து மொத்தமாய் ஒவ்வொரு மாத இறுதியிலும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சரியான விடை எழுதிய மூன்று வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாதத்துக்கான அதிர்ஷ்டசாலிகளாகப் புடைவைப் பரிசு பெறுவார்கள். **தொடரின் இறுதியில் ஒரு மெகா பரிசும் உண்டு!**

செப்டெம்பர் மாதக் கூப்பன்களை இணைத்து அனுப்ப

கடைசித் தேதி : **06.10.10**

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி:
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : ....

முகவரி : ....

....

....

.........................பின்கோடு:.....................

தொலைபேசி : ....

இ-மெயில் : ....

செப்டெம்பர் - 19

பொருளாதார சுதந்திரம் பொறுப்பின்மையைத் தந்தது என்று சொன்னது யார்?

விடையை டிக் செய்யவும்

- ☐ ஊர்வசி
- ☐ பிரமீள்
- ☐ பாட்டி
- ☐ மனு ஸ்மிருதி

தொலைக்காட்சிகளில் வரும் கற்பனைக் கதாபாத்திரங்களின் கோப தாபச் சூழ்ச்சிகளை விட நம்மைச் சுற்றி யிருக்கும் மக்களின் நடை, உடை, பழக்க வழக்கங்கள் இவற்றை உள்ளபடியே படம்பிடித்துக் காட்டும் 'நிஜம்'தான் நாங்கள் விரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சி. நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள மலைகள், குகைகள் என்று பேதமின்றி சாதாரணமாக மனிதர் போக அச்சப்படும் இடங்களுக்குக் கூடப் போய், படமெடுத்து வந்து நமக்குக் காட்டித் திகைப்பில் ஆழ்த்துகின்றனர். போலிச் சாமியார்களின் முகமூடிகள், சில கிராம மக்களின் மூடநம்பிக்கைகள் என்று எல்லாமே இந்நிகழ்ச்சியில் பார்க்கிறோம். மிகத் துணிவுடன் செயல்பட்டுப் படம்பிடித்து வந்து நம்மையும் அவ்விடங்களை நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும் 'சன்' தொலைக்காட்சி யினருக்கும் பாராட்டுகள்!

- வி.ராஜகோபாலன்,
சென்னை-33


விஜய் சேனலில் சமீபத்தில் பவனி வர ஆரம்பித்திருக்கும் 'மகான்'களின் வரவில் முதலாவதாக ஸ்ரீ ராகவேந்திரர் அதி அற்புதமாகக் காட்சி தர இருக்கிறார். தொடரின் தலைப்பு பாடல் மதுபாலகிருஷ் ணனின் தேன் மதுரக் குரலில், மனத்தை இதமாகத் தடவி மெய்மறக்கச் செய்கிறது. நடிப்பவர்கள் அனைவருக்குமே மிகச் சரியான தேர்வு. பக்திரஸம் ததும்ப நடித்து நம்மை வெகுவாகக் கவர்கின்றனர். மகான் தொடர் நிச்சயம் எல்லாரையும் கவலை மறந்து, ரசிக்க வைக்கும் என்று நம்பு கிறேன்.

- ராஜலக்ஷ்மி ரங்கநாதன்,
சென்னை-28

எத்தனையோ விளம்பரங்கள் டி.வி.யில் வருகின்றன. அதில் இப்போது சமீபமாக வோடஃபோனுக்காக வரும் விளம்பரம் மிகவும் அற்புதம்.

அதிலும் அந்தக் 'கிளி மாமாவு'க்கு என்ன கோபம். நாலு ரூபாய்க்கு மற்றவர்கள் கொடுப்பது கேட்டு என்ன எரிச்சல்? அட! அட! அதிலும் ஐஸ்வர்யாராய் அவ

டீ குடிக்க லண்டன் போறாராம்!



டி.வி.யில் உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சி எதுவாயினும்... 'சேனல் சா

ரோட முறைப்பொண்ணாம்! அதோடு ஒரு டீ குடிக்க லண்டன்தான் போகின்றாராம்.

மனிதனுக்கு மட்டும் உள்ள எரிச்சலை அழகாக எடுத்த அந்த விளம்பரதாரருக்கும், அதனை வடிவமைத்த குழுவுக்கும் எனது பாராட்டுகள். மனம் விட்டுச் சிரித்தேன்.

- சீதா பாலசுப்ரமணியன், சென்னை-101



பிரசுரமாகும் ஒவ்வொரு விமர்சனத்துக்கும் ரூ.50 சன்மானம்

சேனல் சாய்ஸ்



கலைஞர் தொலைக்காட்சி ஏவி.எம். முத்திரையுடன் உறவுக்குக் கை கொடுப்போம் கருத்தான பாடலுடன் தொடங்குகிறது. கூட்டுக் குடும்பங்கள் சிதறி வரும் சூழ்நிலையை விளக்குகிறது. பணத்தின் மீதான மோகம் குடும்ப ஒற்றுமையும் அமைதியும் கெட எப்படிக் காரணமாகிறது என்பதை விளக்குவது காலத்தின் தேவை.

- ஆர்.செல்லம்மாள்

விஜய் டி.வி.யில்... 'லிட்டில் ஜீனியஸ்' என்கிற க்விஸ் புரோகிராம்.... ரொம்ப க்யூட்! இதில் திருக்குறளையும் புகுத்தியிருப்பது வரவேற்புக்குரிய விஷயம். எளிமையும், அருமையுமாய் தொகுப்பாளரின் ஆங்கிலமும் இடையிடையே தமிழும்... செம கலக்கல். குழந்தைகளின் ஐ.க்யூவை மேம்படுத்தும் விதமாய் அரிதான கேள்விகளுடன் சுவாரஸ்யமாய் இருக்கிறது.

ஆங்கில சேனல்களில் இதுபோன்ற குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள் வருகையில், இப்படித் தமிழில் யாரும்... எந்த சேனலும் மெனக்கெடுவதில்லையே என்ற என் மனக்குறையைத் தீர்த்து வைத்த விஜய் டி.வி.க்கு வாழ்த்துக்கள்....!

- ஜே.சி.ஜெரினாகாந்த்

ன்று குறிப்பிட்டு எழுதுங்க. kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம்.

மெல்பர்ன், சிட்னி, நியூஜெர்சி, பெர்லின்... என்று எங்கே போனாலும் இந்தியர்களுக்கு அடி, உதையோடு வசமான சாத்துமுறை நடக்கிறது. இது பற்றி இராப்பகலாகச் சிந்தித்துக் கவலைகொண்டதில் தோன்றிய யோசனைகளை உடனடியாக நம் மதிமந்திரிகளுக்குத் தெரிவித்திருக்கிறேன். யூஸ் பண்ணிக் கொள்வார்களா?

'**ப**னியன் டிப்ளமசி, டீஷர்ட் பாலிசி': புலம்பெயர் இந்தியர்கள் அனைவருக்கும் இலவச டீஷர்ட்கள். டீஷர்ட்களில் முன் பக்கம் மன்மோகன் சிங் படம், பின் பக்கம் பிரணாப் முகர்ஜி படம் இருக்கட்டும். 'ஓஹோ, இதெல்லாம் பயங்கர உம்மணா மூஞ்சிக் கும்பல் போலிருக்கிறது' என்று யாரும் நம் வம்புக்கே வரமாட்டார்கள்.

'உயிரோடு உறவாடி, உள்ளூரான் உயிரை எடு': வெள்ளைக்காரர்களுடன் சுமுக உறவு கொண்



ாட, தெருவோரங்களில் இலவச மிளகாய் பஜ்ஜி, ூண்டு சமோசா ஸ்டால்களை இந்திய அரசாங்கமே போட வேண்டும். கண்டிப்பாகத் ண்ணீர் வைக்கக்கூடாது. ஃப்ரீ மிளகாய் ஜ்ஜியைக் கடித்துவிட்டு வெள்ளைக்காரன் செங்குரங்கு மாதிரி சிவந்த மூக்குடனும் அழுத கண்ணோடும் அலறிப் பயந்து ற்கையில் நம் வம்புக்கே வரமாட்டான்.

'லூப்'பில் தொங்கிய செம்மொழி: வெள்ளையர்கள் அதிகமாக வாழும் தெருவோரங்களில் லவுட் ஸ்பீக்கர்கள் கட்டி செம்மொழியான தமிழ்மொழியாம்', 'எங்கள் திராவிடப் பொன்னாடே', 'ஸாரே ஜகான்ஸே அச்சா' போன்ற பாடல்களை நான்-ஸ்டாப் 'லூப்'பில் ஒரு நாளைக்கு 24 மணி நேரமும் போட்டால் அவர்களாகவே இடத்தைக் காலி செய்து ஓடிவிடுவார்கள்.

டீ குடி குடித்தபின் அடி!

'குடி டீ குடி, குடித்த பின் அடி': வெளி நாட்டு ஏர்போர்ட்டுகள், பஸ் ஸ்டாண்டுகள், சாலை ஓரங்கள், எல்லா இடங்களிலும் இம்போர்ட்டட் இண்டியன் டீக்கடைகள். நம்மை அடிக்க வருகிறார்களா? வரட்டும். வந்தவர்கள் நாம் ஆகாசத்துக்கும் பூமிக்குமாக டீ ஆற்றும் அழகைப் பார்த்து 'ஹா'வென்று வாய் பிளக்க, இதுதான் சமயமென்று நாம் அவர்கள் வாயில் புரை, பன், பிஸ்கோத்து, உறை பாக்கெட்டு, ஊறுகாய் எல்லாம் சேர்த்து அடைக்க, மாரடைப்பில் சரிந்துவிடுவார்கள்.

'இலவச இந்திய ஜிகு ஜிகு ஜினிமா' : வெள்ளைக்காரர்களைக் கூட்டம் கூட்டமாகக் கூப்பிட்டு ராவணன் போன்ற படங்களிலிருந்து ஆதிவாசி நடனங்கள், சூலங்கள் டான்ஸ், சுஹாசினி வசனங்கள் மட்டுமே திரும்பத் திரும்பப் போட்டால் நம்மைப் பார்த்து அவர்களுக்கு ஒரு பயம் வரும். ரோட்டில் நம்மைக் கண்டால் மரியாதையாக ஒதுங்குவார்கள்.

'கண்ணாளா, கண்டவுடன் கட்டு, கட்டியபின் கடிஅடிபிடி': கிழவி முதல் குமரன் வரை எந்த வெள்ளைத்தோலை எங்கே எப்போது கண்டாலும் ஓடிப் போய்க் கட்டிப்பிடித்து 'இச், இச்' என்று நாம் எச்சில் படுத்திக் கட்டிப்பிடி வைத்தியம் பண்ண ஆரம்பித்தால், அடிக்க வந்தவர்கள் ஆடிப்போய் 'சேசே' என்று ஓடிப்போய் விடுவார்கள்.

வயலென்ஸ் வேண்டாமே என்கிறீர்களா? அடிக்க வந்தவனை நம்முடன் அம்மானையும், சோழியும் ஆடச் சொல்லுங்கள். ஏற்கெனவே வெள்ளைக்காரன் கணக்குல வீக். நாம் அழுகுணி ஆடுவோம். 'தோற்றவர்கள் ஜெயித்தவர்களுக்கும் அவர்களுடைய நண்பர்களுக்கும் தலா நூறு டாலர் பணமும், இரண்டு காணி புண்ணியமும் கொடுக்கவேண்டும்' என்று பகவத் கீதையில் சொல்லியிருப்பதாகப் பீலா விட்டால், காசையும் கொடுத்து அழுது விட்டு, எதிரிகள் தலையில் துண்டுபோட்டுப் பின்னேறுவது நிச்சயம்.

– லாஸ் ஏஞ்சல்ஸ் ராம்



வாசகர்களே! உங்களோட சென்டிமென்ட், குடும்ப நம்பிக்கைகள் என்ன? எழுதுங்க... kalki@kalkiweekly -க்கும் அனுப்புங்க.

சென்டிமென்ட்

பள்ளியிறுதித் தேர்வுக்கு முதல் நாள் வரை சுமார் 15 நாட்கள் மஞ்சள் காமாலை நோயால் பாதிக் கப்பட்டு படுத்த படுக்கையில் இருந்தேன். படித்த பாடங்கள் எல் லாம் ஞாபகமில்லை. பள்ளியிறுதி தேர்வு எழுத நான் புறப்பட்டபோது, காந்திபுரத்தில் குடியிருக்கும் சித்தி விநாயகரைத் தரிசித்துவிட்டுப் பரீட்சை எழுதப்போகச் சொன்னார்

இடம்பெறும் ஒவ்வொரு சென்டிமென்டும் ரூ.50 சன்மானம் பெறுகிறது.

தாயின் காலடியில் சொர்க்கம் இருக்கின் றது. இது நபிகள் நாயகம் சொன்னது. எனக்கு என் தாயின்மீது கொள்ளைப்பிரியம். நான் தின மும் (ப்ளஸ்டு வரை) பள்ளிக்குச் செல்லும்போது அம்மாவின் கன்னத்தில் முத்தமிட்டுத் தான் செல் வேன். அதுவும் தேர்வு எழுதப் போகும் சமயத்தில் இரு கன்னங்களிலும் ஆசை தீர முத்தமிட்டுச் செல்வேன். ப்ளஸ் டு வில் 1140/1200 மதிப்பெண் கள் வாங்கியதால்.. சென்னையில் சிறந்த பொறி யியல் கல்லூரியில் இன்ஜினியரிங் படிக்கிறேன். இப்போதும் கல்லூரிக்குச் செல்லும்பொழுது செல்ஃபோன் மூலம் அம்மாவுக்கு முத்தமிட்ட பிறகுதான் செல்வேன். என்னுடைய வாழ்க்கைப் பயணத் தொடர் வெற்றிக்குக் காரணம் இந்தச் செயல்தான் என நம்புகிறேன்.

-எஸ். அஸ்மாபர்வீன், திருச்சி

என் அப்பா. நானும் அவ்வாறே செய்தேன். தேர்வு முடிவு வெளிவந்த அன்று முதலில் அவரைத் தரிசித்த பின்னர்தான் நாளித ழைப் பார்த்தேன். தேர்வில் வெற்றிபெற் றிருந்தேன்.

பின்னர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மூன்றுமாத தற்காலிகமான பணிக்கு நேர் முகத் தேர்வுக்கு அழைப்பு வந்தது. நேர்முகத்தேர்வு அன்று அவரைத் தரிசித்து விட்டுப் போனேன். வேலையும் கிடைத் தது. எதிர்பாராதவிதமாகப் பணிநிரந்தர மானேன். என் திருமணத்தின் முதல் பத் திரிகையும் அவர் பாதத்தில்தான் வைத் தேன். 'கல்கி' வார இதழில் வாசகர்களுக்கு ஒரு போட்டி. பரிசு வி.ஐ.பி. சூட்கேஸ். அந்தப் போட்டிக்கான பதிலை எழுதி சித்திவிநாயகர் பாதத்தில் வைத்த பின் அனுப்பினேன். என்ன ஆச்சர்யம்! எனக்கு வி.ஐ.பி. சூட்கேஸ் பரிசு கிடைத்தது.

- கே.இராஜன், பொள்ளாச்சி

1, 3, 5, 6, 9, 10 எண்களும் இவற்றோடு மிகுந்த தொடர்புகொண்ட எண்களும் எனக்கு ராசி. 4, 8, 11, 22 போன்ற தேதிகளையும் அதனுடன் தொடர்புள்ள தேதிகளையும் நல்ல காரியங்களுக்குத் தவிர்த்துவிடுவேன். சந்திராஷ்ட தினங்களிலும் எந்தப் புதிய வேலைகளும் செய்யமாட்டேன்.

- ச. வசுமதி, வேங்கைவாசல்

● தீபாவளிக்குப் புதுத் துணிமணி எடுக்க சனிக்கிழமைதான் ஜவுளிக் கடைக்குச் செல்வோம்.

● வீட்டில் கல்யாணம் நிச்சய மாகி, பத்திரிகை அடித்தவுடன், எங் கள் ஆச்சாரியன், வானமாமலை ஜீயர் ஸ்வாமிக்குதான் முதல் பத்திரி கையை அனுப்புவோம். பிறகுதான் உற்றார், உறவினர்களுக்குக் கொடுப் போம்.

● எந்தக் கோவிலுக்குச் சென்று, அர்ச்சனை செய்வதாக இருந்தாலும், வெற்றிலைப் பாக்கு, பழம், பூ இவற்றை வாங்குவோம். தேங்காய் கண்டிப்பாக கிடையாது.

● வீட்டைப் பூட்டிக்கொண்டு வெளியில் கிளம்பும் முன், பூஜை அறைக்குச் சென்று இறைவனிடம் பிரார்த்தித்துவிட்டுதான் கிளம்பு வோம்.

- ஜெய்சம்பத்,
சென்னை.



சித்திவிநாயகரின் பாதத்தில்...



பாட்டு : உன்னமெல்லாம் மிள காயோ ஒவ்வொரு பேச்சும் சுரக்காயோ...

காரணம் : ஒரு காதலன் காதலியை இலக்கிய நயத்தோடு அதேசமயம் உள்ளத்தில் உள்ளது மிளகாயாக இருந்தாலும் ஒவ்வொரு பேச்சும் சுரக்காயாகக் குளுமை சுரக்க வைக்கும் அற்புதமான வார்த்தை. 'பலே பாண்டியா' படத்தி கவிஞர் கண்ணதாசன் தீட்டியதை டி.எம்.சௌந்த ராஜன், சுசிலா ஆகியோரின் குரலில் அந்தக் காட் இன்றைக்கும் பேசும்.

– அமுதா பிரகாஷ், தஞ்சாவூ



பாட்டு : செந்தமிழ்த் தேன் மொழியாள்; அவள் நிலா வெனச் சிரிக்கும் மலர்க் கொடியாள்!

காரணம் : தமிழ் மொழியைப் பற்றி எவ்வளவு அழகாகப் பாடியிருக்கிறார்கள். தமிழ் மொழி மட்டும்தான் தேன் சொட்டக் கூடியது. தேன் எவ்வளவு நாட்கள் ஆனாலும் கெட்டுப் போகாது. அதுபோல நம் தாய் மொழியாகிய தமிழ்மொழியை என்றென்றும் மறக்கக் கூடாது. தாய் மகனைக் காப்பதுபோல், மகன் தாயைக் காப்பது போல், நாம் நம் தமிழ் மொழியைக் காக்க வேண்டும்.

– மு.மோகனா,
புலிவலம்



பாட்டு : தாயில்லாமல் நானில்லை, தானே எவரும் பிறந்ததில்லை.

காரணம் : இவ்வுலகில் தாய் என்பவள் இல்லை என்றால் நாம் யாரும் இல்லை. தாய் மட்டும் தான் பிள்ளைகளின் நன்மைக்காக அல்லும் பகலும் என்றும் பாடுபடுகிறாள். இவ்வுலகில் தாயின் அன்புக்கு எதுவும் ஈடாகாது.

– ஏ.ஜெ. வெங்கடேசன்,
சென்னை



வாசகர்களே! உங்களுக்குப் பிடித்தமான பாடல் என்னவென்று... 10 வரி கமெண்ட்டுடன் எங்களுக்கு எழுதி அனுப்புங்க... kalki@kalkiweekly -க்கும் அனுப்பலாம்.

எனக்குப் பிடித்த பாடல்!

பாட்டு : ஆடை அணி கலன் ஆடம்பரங்களை ஆண்டவன் விரும்புவதில்லை; அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும் ஆலய வழிபாடில்லை...


காரணம் : சரஸ்வதி சபதம் படத்தில் சிவாஜி கணேசன் வாயசைக்க, தெய்வம் இருப்பது எங்கே? அது இங்கே வேறெங்கே? என்ற பாடலில் வரும் வரிகள் இவை. இந்தப் படத்தில் ஊமையாக நடிக்கும் சிவாஜி, தேவி அருளால் பேச்சு வந்து கோவிலில் பாடிக் கொண்டிருக்கும்போது, லக்ஷ்மியின் அருளால் (பிச்சைக்காரியாக இருந்து) அரசியான கே.ஆர்.விஜயா கோவிலுக்குப் பந்தாவாக வருவார். அவரைக் கேலி செய்து ஒலிக்கும் பாடல் இது.



- க.கைலேஷ்குமார், சென்னை

இடம்பெறும் ஒவ்வொரு அனுபவத்துக்கும் ரூ.50 சன்மானம்

“சபாஷ் வழக்குப் போடு!”



எதிர்வரும் 2011ம் ஆண்டு ஜனவரியில் கொழும்பில் நடக்க இருக்கும் சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது. இந் நிலையில்... இந்த எதிர்ப்பின் பின்புலம் என்ன? தமிழக எழுத்தாளர்கள் இம் மாநாட்டை எதிர்ப்பதன் அவசியம் என்ன என்று அறிய விரும்பினோம். நாற்பதுக்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியவரும் ‘சடங்கு’ என்ற ஒரு புத்தகம் மட்டும் ஒரு லட்சத்து அறுபதாயிரம் பிரதிகள் விற்று யாரும் எட்டாத சாதனைக்குரியவருமான ஈழ எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ)யைச் சந்தித்து உரையாடியதிலிருந்து...

புலம்பெயர்ந்தோர் இலக்கியம் இன்று என்னவாக உள்ளது? அதன் தேவையும் நோக்கமும் திசைமாறி விட்டதா?

“1983க்குப் பிறகான இனக் கலவரத்தை அடுத்து பல்வேறு நாடுகளுக்கு ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்து அங்கிருந்து அவர்கள் எழுதியது புலம்பெயர்ந்தோர் இலக்கியமாக வடிவம் பெற்றது. தமிழகத்தில் பல்கலைக் கழகங்களில் அதற்கான அந்தஸ்தைப் பெற்றுத் தந்தவர்கள் ‘மனித நேயப் பிரம்மாண்டம்’ இந்திரா பார்த்தசாரதி, பேராசிரியர் இந்திரா, தமிழச்சி தங்கப் பாண்டியன் ஆகியோர். ஆனால் இனி புலம் பெயர்ந்தோர் இலக்கியம் என்று கூறக் கூடாது. காரணம் ஈழம் என்ற ஒன்று இலங்கையில் இல்லாதபோது புலம் பெயர்ந்தோர் என்று குறிப்பிடுவது அர்த்தமற்றது. இனி ‘தமிழ் ஈழர் இலக்கியம்’ என்றே அழைக்க வேண்டும். மனத்திலும் சிந்தையிலும் மட்டுமே உள்ள ஈழத்தைத் தொடர்ந்து எழுதுவதால் என்றாவது ஈழம் பெறுவோம் என்ற நம்பிக்கையைக் காக்கிற சொல்லாட்சியாக இதைக் கருதலாம்.

சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மகாநாட்டை நீங்கள் தீவிரமாக எதிர்ப்பதன் நோக்கம் என்ன?

“யாழ்ப்பாண வட பகுதியில் நான்கு லட்சம் ராணுவ குடும்பத்தினரும் ஒரு லட்சம் ராணுவத்தினரும் குடியேற்றப் பட்டுள்ள நிலையில்... ஈழத்தில் உள்ளோர் சகஜமான வாழ்வுக்குத் திரும்பாமல் தூக்கமின்றி உழலும் சூழலில் இந்த மாநாடு தேவையா?

மேலும் இம்மாநாட்டோடு தொடர்புடையவர்களான ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், ஆஸ்திரேலிய நடேசன் போன்ற பன்னிரெண்டு பேர் முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு முன்பு ராஜபக்சேவுடன் விருந்துண்டு தமிழ்த் தேசியத்துக்கு எதிராக வாழ்ந்தவர்கள். எனவே இம்மாநாட்டை நடத்த, தமிழ்த் தேசியம் பேச இவர்களுக்குத் தகுதியில்லை.

மாநாடுக்கு எதிராகக் கருத்துக்களைப் பிரசுரிக்க வேண்டாமென இலங்கை அரசு அங்குள்ள தமிழ்ப் பத்திரிகைகளை மிரட்டியுள்ள நிலையில் மக்கள் துன்பம் பற்றிப் பேச மாநாட்டில் அனுமதி இருக்காது. பிறகேன் இம்மாநாடு?

கிழக்கு மாகாணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் இப்போது ஒரு புத்தக் கோயில் கட்டப்பட்டு வருகிறது. தமிழ்ப் பாரம்பரிய தனித்துவத்தைப் பாதுகாக்க இம்மாநாட்டாளர்களால் முடியுமா? ஆக, சொகுசாக இலக்கிய வியாபாரம் செய்து வந்த இந்தத் தகுதியற்றவர்களின் செயல்பாட்டை எதிர்க்கிறேன்.”

பல எழுத்தாளர்கள் ஆதரிக்கிறார்களே?

மாநாடு எதிரொலி

''ஆதரிக்கும் அனைவரும் இலக்கியத்தின் பேரால், அல்லது தனி மனிதர் தேவையின் பேரால் இலங்கை அரசிடமிருந்து மறைமுகமாக ஆதாயம் தேட முனைகிறவர்களாக இருக்கலாம்.''

உங்களின் எதிர்ப்பின் அடுத்த கட்டம் என்ன?

''பந்தை முதலில் நான் உருட்டி விட்டுள்ளேன். இனி தமிழ்த் தேசிய நேயர்கள் விளையாடுவார்கள். மேலும் நான் இந்தியன் அல்ல - ஒரு விசிட்டர். அரசியல் ரீதியாக இயங்கக் கூடாது. அது விசா தந்துள்ள இந்திய அரசுக்கு விரோதமானது. எழுத்தின் மூலமாகத்தான் எதிர்ப்பு தொடரும்.

மாநாட்டின் முக்கியஸ்தர்கள், இவ்வமைப்பு திடீரெனத் தொடங்கப்பட்டது அல்ல; பல காலம் செயல்பட்டு வந்துள்ளது என்கின்றனர். மாநாட்டு அமைப்பாளர்களுள் ஒருவரான முருக பூபதி உங்கள் மீது மான நஷ்ட வழக்குப் போட திட்டமிட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளாரே?

''வழக்கை எதிர்கொள்ளத் தயார். மேலும் இதற்கு முன் ஆஸ்திரேலிய என்ற பரிமாணத்தில் மட்டுமே இவ்வமைப்பு இயங்கியது சர்வதேச என்ற பரிமாணம் இதற்கு இல்லை. எனவே அதன் தொடர்ச்சியாக இச்செயல்பாடு ஆகாது. இவர்களோடு தொடக்கத்தில் ஆதரித்த சிவதம்பி கூட இப்போது பின் வாங்கிவிட்டார். சர்வதேச உலகில் இலங்கைத் தமிழர்கள் சகஜ நிலைக்குத் திரும்பி விட்டதாகக் காட்ட ராஜபக்சே அரசு மறைமுகமாக உதவி செய்து இம்மாநாட்டை நடத்துகிறது. மனித உரிமையாளர்களை இலங்கையில் நுழைய அனுமதிக்காத அரசு இவர்களை அனுமதித்திருப்பதும் இதனால்தான். எனவே மெய்யான தமிழ்ப் பற்றாளர்கள் எதிர்ப்பார்கள். அதிலும் நான் எழுத்தாளன், கொஞ்சம் கூடுதலாகக் குரலெடுக்கிறேன், அவ்வளவுதான்.''




- அமிர்தா

நீங்கள் சங்கீத ரசிகரெனில் நிச்சயம் ஈரோடு நாகராஜைத் தெரிந்திருக்கும். மேடையை அலங்கரிக்கும் கம்பீரத் தோற்றமும், பாடகரைப் போஷிக்கும் பக்குவமான வாசிப்பும்தான் உங்களுக்குத் தெரிந்திருக்கக் கூடும். அந்த வாசிப்புக்கு முன்னும் பின்னும் அவர் படும் அவஸ்தைகள்...?

மிருதங்கக் கலைஞர்களுக்கு, நெருடலான இடத்தில் தனி வருமா...

பயமுறுத்தும் படிகள்!



கஷ்டப்பட்டுத் தயாரித்த கோர்வையை மேடை ஏற்றும்போது சொதப்பி விடுவோமா... என்ற கவலைகள் கச்சேரிக்கு முன் இருப்பது வழக்கம். நாகராஜுக்கோ அதற்கெல்லாம் நேரமில்லை. 2.30 மணி கச்சேரிக்கு, 2.15-க்குள்ளாவது மேடையேறிவிட வேண்டுமே என்பதே பெரும் கவலை.

படிகள்! பயமுறுத்தும் படிகள். சக்கர நாற்காலியைத் தடுக்கும் படிகள்! தவழ்ந்து, ஊர்ந்து, கைகளால் உடலைச் சுமந்து, எழுந்து... அப்பப்பா! ஒரு படியிலிருந்து அடுத்த படிக்குச் செல்வதற்கு எத்தனை பிரயாசைப்பட வேண்டியிருக்கிறது?

காய்ந்த மண்ணும் பொடிக்கற்களும் நாதத் திவலைகள் எழுப்பும் நாகராஜைப் போன்ற நடக்க முடியாதவர்களின் கரங்களைக் காயப்படுத்தக் காத்திருக்கின்றன.

''கல்லையும் மண்ணையும்கூட கையுறைகள் அணிந்து கடந்துவிடுவேன். இந்தப் பாழும் மழை வந்தால்தான் பாடு பெரும் திண்டாட்டம். படிகளிலும் வழிநெடுகவும் இருக்கும் காலடி மண் கலந்த ஈரத்தில், சகதியில் உழன்றால்தான் மேடையை அடைய முடியும். லிஃப்ட் இருக்கும் சில அரங்குகளில் லிஃப்டை அடையவே பல படிகள் ஏற வேண்டிய நிலை...'' என்று நாகராஜ் புன்னகைத்தபடி கூறுகிறார். அதில் சங்கடமும் கலந்தே வெளிப்படுகின்றது.

மாற்றுத் திறனாளிகளும் சௌகரியமாக வரும்வண்ணம் அரங்குகள் மாற்றி அமைக்கப்படுவது அவசியம்.

லலிதா ராம்

''ஒரு நாகராஜுக்காக நாங்கள் கட்டடத்தை மாற்றியமைக்க முடியுமா?'' என்று சிலர் கேட்கக் கூடும். ஓராயிரம் நாகராஜ்கள் படிகளை ஏற முடியாததனாலேயே வீட்டில் முடங்கியிருக்க மாட்டார்களா? ஒருவரின் ஊனத்தைச் சுட்டுதல் அநாகரிகமெனில், தினம் தினம் படிகளின் மூலம் நாகராஜ் போன்றோரின் ஊனத்தை நினைவூட்டிக்கொண்டே இருத்தல் அநாகரிகத்தின் உச்சம் இல்லையா?

கழிப்பறைகளை நவீனப்படுத்தவும் அரங்கு முழுவதும் சென்ட்ரலைஸ்ட் ஏஸியால் குளிரூட்டவும், மூலையில் இருந்தாலும் துல்லியமாய்க் கேட்கும் ஒலியமைப்பை நிறுவவும் செலவு செய்யும் வேளையில், நாகராஜ் போன்றோரின் தேவைகளையும் மனத்தில் கொள்வதே நியாயம்.

சக்கர நாற்காலிக்கான சாய்வுப் பாதை, மாற்றுத் திறனாளிகளுக்கு வசதியான கழிப்பறை போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்தால், வயதான ரசிகர்கள், கலைஞர்கள் கூட பயனுறலாம். மாற்றுத் திறனாளிகளை மதிக்காமல் நாம் சபைகளில் வளர்க்க முற்படுவது முழுமையான கலையாக இருக்க முடியாது!



நியூஸ் டாப்!

ஓ! பக்கங்களில் ஞாநி சொன்னபடி எம்.பி.க்களின் 400% சம்பள உயர்வுக்கு எதிர்ப்பு கடிதங்கள் அனுப்பிய பின்புதான், பற்றி எரிந்த நெஞ்சின் தார்மீகக் கோபம் 'கொஞ்சமாவது' அடங்கியது.

- சி.செல்வராஜ், திருச்சி

'எந்திரன் ஸ்பெஷல்' - வெளியிட்டு கல்கியும் 'வெகுஜன இதழ்தான்' - என்று எண்ண வைத்துவிட்டீர்களே??!

- என்.சண்முகம், திருவண்ணாமலை

ஞாநி ஒரு பக்கமாகவே சாட்டையைச் சுழற்றிக் கொண்டிருக்கிறார். எல்லாப் பக்கமும் சுழற்றுங்க ஸார்!

- எம். மிக்கேல்ராஜ், சாத்தூர்

கல்கி தீபாவளி மலர் தயாரிக்கத் தொடங்கியாச்சா?

- எஸ். அமிர்தா, சென்னை-26

'சசிதரூர் - சுனந்தா' திருமணம் குறித்த கேள்விக்கு தராசு தந்திருந்த பதிலுக்குப் பரிசாக அவருக்கு 'நையாண்டி நாயகன்' என்ற பட்டத்தை வழங்கலாம்!

- ப.கோபி பச்சமுத்து, கிருஷ்ணகிரி-1

இலவசங்களைக் கூட அனுபவிக்க முடியாத சூழல் ஏழைகள் வீட்டில் நிலவுவதை மனத்தைத் தொடும்படி சொல்லியது 'சைக்கிள் கனவு' சிறுகதையும், சந்தோஷத்தின் ஆர்ப்பரிப்பை வண்ணத்தில் வெளிப்படுத்தி இருக்கும் சந்திரசேகரின் ஓவியங்களும் அருமை.

- என். பாலகிருஷ்ணன், மதுரை

'பாலிடிக்ஸ் பஜார்' சூடோ சூடுங்க! 'சென்ட்டிமெண்ட்' சமாசாரம் சுவையோ சுவை தீஞ்சுவை. 'சேனல் சாய்ஸ்' காலத்தின் கட்டாயமுங்க.

- தா. ஆசிர்டேவிட், நாகர்கோவில்

மந்திரம், தந்திரம் இல்லாமல் எந்திரன் மூலம் கிடைக்கும் இலாபத்தைப் பற்றி நினைக்கும்போது வியப்பின் எல்லைக்கே நம்மைக் கொண்டு செல்கிறது.

- எம்.இராஜேந்திரன், லால்குடி

அடேங்கப்பா... நம்ம கல்கியா இது? பந்தாவா, சூப்பரா எந்திரனைப் பற்றி இவ்வளவு செய்திகளை வெளியிட்டுள்ளது என்று வியப்படைந்தேன். நன்றி.

- அ.முரளிதரன், மதுரை

புதுசா வந்திருக்கும் 'ஆஹா ஆல்பம்' பகுதி படு கலக்கல். செல்ஃபோன், சென்டிமெண்ட், மை பைக், கவிதை கஃபே என்று வாசகர்கள் நிறைய பேர் பங்களிக்க ஒரு நல்ல களமாகத் திகழ்கிறது.

- எஸ்.மீனா, ஸ்ரீரங்கம்

கல்கிக்கு ரஜினி ரசிகர்கள் சார்பாக ஒரு ராயல் சல்யூட்!

- கச்சனம் எஸ். இராதாகிருஷ்ணன், திருச்சி

அடிக்கடி அணி மாறுவதால் பா.ம.க.வைச் சேர்ந்த கட்சியினரே டாக்டர் மீது சந்தேகிக்க இடமுண்டு. அன்புமணியை ஏதாவது ஒரு பதவியில் அமர்த்தியே ஆக வேண்டும் என்ற ஆதங்கத்தில் அவர் ஆட்சி

மீது வெறுப்புமிழ்கிறார் என்பது அனை வருக்கும் தெரியுமே...!

- அ. ராஜப்பன், கருமத்தம்பட்டி

விளையாட்டு, விட்டலன் சிறந்த ஆன்மிக விறுவிறுப்பு தொடர்.

- ஏ.பி.எஸ்.ரவீந்திரன், வள்ளியூர்

கோகுலாஷ்டமி ஸ்பெஷல் கோலா கல கோலாட்டத்தில் ஆரம்பித்து, கோசாலையில் தேசிய பசுவைத் தரிசித் தோம். விட்டல்தாஸ் ஜெயகிருஷ்ண தீட்சி தரோடு பாடினோம். ஆடினோம். சேவைக்கு முதலிடம் கட்டுரையைப் படித்து சேவை செய்யும் ஆர்வம் ஏற்படுகிறது. ஞானியர் பூமியில் புரண்டு எழுந்தோம். கோவிந்த புரத்துக்கு ஒரு முறை சென்று தரிசிக்க ஆவல் ஏற்படுகிறது.

- வி.திலகம், திருநெல்வேலி

தாம் எழுதிய நாலாயிரம் பாட்டுக்களும் நாலாயிர திவ்யப் பிரபந்தத்துக்கு இணையானது என்று வாலியுடைய கூற்றுக்குத் தராசு 'நச்'சென்று பதிலளித்திருப்பது சூப்பர்ப்.

- விஜயா ராஜன், பெங்களூரு

காவல் துறைக்குச் சிறப்பும் பெருமை யும், கௌரவமும் சேர்த்துவிட்ட மிக அற்புதமான தலையங்கம்.

- எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்

நான் இப்பொழுதெல்லாம் கல்கி வாங்கியவுடன் உடனே படிப்பது ஞாநியின் ஓ பக்கங்களைத்தான். அவருடைய நியாய உணர்வும் சமுதாய உணர்வும் ஓஹோ போட வைத்தன.

- சி.என்.ஸ்ரீனிவாசன், சென்னை






ராஜிவ் காந்தி இந்திய அரசியலில் தவிர்க்கமுடியாத சக்தியாக விளங்கிய நேரம் அது. சோனியா காந்தியோடு தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அவர்கள் திருவாரூர் வந்த போது, அரசு மருத்துவமனையில் பணியாற்றிய எனது சகோதரி டாக்டர் சிவ.மஞ்சுளா, சோனியாவுக்குச் சால்வை அணிவித்து நிகழ்ச்சிகளை மொழிபெயர்த்துக் கூறினார்.

- சுந்தரி, கும்பகோணம்

ஆஹா ஆல்பம்

ஃபோட்டோவுடன் இடம்பெறும் ஒவ்வொரு அனுபவத்துக்கும் பரிசு ரூ.50/.



மைசூரில் உள்ள 'Zoo' ஒன்றுக்குச் சென்றபோது என் அண்ணன் மகன் ராகுலின் கையில் தவழும் எனது மகள் நியோலாவின் புன்சிரிப்புதான் என் பொக்கிஷம்.

– உஷா

சென்ற மாதம் என் மகள் சபிதாவுக்கு ஆந்திராவில் திருமணம் நடைபெற்றது. மறுநாள் முல்லப்பரு என்ற குக்கிராமத்தில், ஆறு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சிவன் கோயிலுக்கு டிராக்டரில் குடும்பத்தோடு போனோம். டிராக்டரிலிருந்து கீழே இறங்க உதவுகிற மாப்பிள்ளை தீபக்கும், கீழே விழுந்தால் அடிபடுமே எனப் பயந்த சபிதாவும். கண்கொள்ளா இக்காட்சியைக் கண்டு களிப்புறும் நானும் இருக்கும் இப்புகைப்படம் தான் கல்யாண ஆல்பத்தின் மெயின் அட்ராக்ஷன்.

- ஜெயா குமார், சென்னை-11



வாசகர்களே! திருமண ஃபோட்டோ மட்டுமல்ல, நீங்கள் பெரிதும் ரசிக்கும், பொக்கிஷமாகப் பாதுகாக்கும் ஃபோட்டோ எதுவாயினும் 10 வரிகள் குறிப்புடன் 'ஜம்'முன்னு எழுதி அனுப்புங்க...



1962 பொதுத் தேர்தலில் கலைஞர் தஞ்சாவூர் சட்டப் பேரவைத் தொகுதியில் போட்டியிட்டபோது ஒரு நாளைக்கு நான்கைந்து கூட்டங்கள். மூலை முடுக்குகள் எல்லாம் ஓடியலைந்து அவர் பேச்சைக் கேட்ட எனக்கு அவருடன் ஒரு ஃபோட்டோவில் இருக்க வேண்டும் என்ற தணியாத ஆசை 1991 - 92ம் ஆண்டில் திருவாரூர் திட்ட வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணியாற்றியபோது நிறைவேறியது.

- அ.சம்பத், கோயம்புத்தூர்



கொடியிடை நாயகிகளாக வலம் வருவதற்காக, கல்லூரி இளம் பெண்கள் என்னதான் செய்கிறார்கள்? திருவானைக்காவல் ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் எட்டிப்பார்த்தோம். கர்ம சிரத்தையாக யோகா செய்து கொண்டிருந்தனர்.



சிந்துஜா, பி.சி.ஏ., இரண்டாம் ஆண்டு. (திருக்கோவிலூர்)

நான் ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிறேன். எங்க காலேஜ்ல வாரத்துல ரெண்டு பீரியட் யோகாவுக்கு ஒதுக்கிடுவோம். இது எங்களுக்கு ரொம்ப யூஸ்ஃபுல்லா இருக்கு. உடம்போடு மனசும் ஸ்லிம் ஆகுது. நான் ரொம்ப ஓவராக் கோபப்படுவேன். இப்ப ரெண்டு வருஷமா யோகா செஞ்சுக்கிட்டு வர்றதுல, என்கிட்டே இருந்த கோபம் ஓடிப்போச்சு. கோபக்காரியா இருந்தப்பவிட இப்ப சந்தோஷமா இருக்கேன். ஆங்... அந்தச் சந்தோஷத்துல முக்கியமான ஒன்றைச் சொல்ல மறந்துட்டேன். எனக்குச் சின்ன வயசுல இருந்து மூச்சுத் திணறல் அப்பப்ப ஏற்படும். பிராணாயாமம் செஞ்சதிலேர்ந்து மூச்சுத் திணறலுக்கு மூச்.



சரண்யா, பி.சி.ஏ., இரண்டாம் ஆண்டு.

யோகா பண்றதுனால எனக்கு நினைவாற்றல் திறன் அதிகரிச்சிருக்கு. காலையில் இருபது நிமிஷம் யோகா பண்ணுவேன். யோகாவுல வஜ்ராசனம் பெண்களுக்கு ரொம்ப நல்லது. பேக் பெய்ன் சீராகும். உடல்ல இரத்த ஓட்டத்தைச் சுத்தமாக்கும். உடம்பை இலேசாக வெச்சுருக்கறதுல யோகாவோட பங்கு ரொம்ப அதிகம்!

என்னமும்

விஜயலெட்சுமி, எம்.சி.ஏ., இரண்டாம் ஆண்டு. (சின்ன கொடுந்துறை கிராமம்)




என்னோட கிராமத்துல யோகா செய்யறதுக்கு எல்லாம் வழியில்லை. காலேஜ்ல யோகா செஞ்சப்பிறகு பாலாசனம் என்னை ஸ்லிம் கேர்ள் ஆக்கிடுச்சு. கணுக்கால், முழங்கால் முட்டிகளுக்குப் புத்துணர்ச்சி தந்து, தொடைகள்ல ஏற்படுற தசைப் பிடிப்புகளைக் கரைச்சு விட்டுடும் பாலாசனம்.

செய்தியும், சித்திரங்களும்: ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு.







ஸ்லிம் ஆகும்!

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57* Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11* Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11* Registered as a Newspaper in Srilanka.